KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons) (வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 32, 26 September 2025 இதழ்:- 31

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 14வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

# பாலஸ்தீனத்தை ஆதரிக்கும் அநுர தமிழ்மக்கள் தொடர்பில் அலட்டிக் கொள்ள மாட்டார்



பலஸ்தீனத்தை ஆதரிக்கும் அனுர தமிழ் மக்கள் தொடர்பில் ஒருபோதும் அலட்டிக் கொள்ளமாட்டார் என ஐக்கிய சோசலிச கட்சியின் முக்கியஸ்தர் ஸ்ரீதுங்க ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

அனுர அரசும் முன்னைய அரசுகளுக்கு நிகரான அரசுதான் என்பதை (5ம் பக்கம் பார்க்க)

BASKARAN
SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
3-1286 Kennedy Rd.
Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

ஈழநாடு பத்திரிகையை வாரம் தோறும்
eelanadu.ca
மின்னிதழ் மூலம் வாசிக்கலாம்

## வடக்கில் காணி விடுவிப்பினை அரசியல் மயப்படுத்த இடமளியோம்! அபிவிருத்திக் கூட்டத்தில் - ஸ்ரீதரனுக்கு அமைச்சர் பிமல் சாட்டையடி!

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

# பொறுப்புக் கூறலில் சர்வதேசத்தின் மீது நம்பிக்கையில்லை! கலாநிதி ஷரிகா திரணகம பிரத்தியேக செவ்வி!

காஸாவில் நிகழ்ந்து கொண்டிருக்கும் அவலங்கள் தொடர்பில் சர்வதேச சமூகத்தின் செயற்பாடுகளை அவதானிக்கின்ற போது பாதிக்கப்பட்ட மக்களுக்கான பொறுப்புக்கூறல் விடயத்தில் அதன் மீது நம்பிக்கை கொள்ள முடியாத நிலைமை உருவாகியுள்ளது என்று அமெரிக்க ஸ்டான்ஃபோர்ட் பல்கலைக் கழகத்தின் இணைப்பேராசிரியரும், பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கான செயற்பாட்டாளருமான கலாநிதி ஷரிகா திரணகம தெரிவித்தார். (17ம் பக்கம் பார்க்க)





## மாகாணசபைத் தேர்தலும் அநுர - சாணக்கியன் சந்திப்பும்



# சட்டவிரோத நிதியுதவிக்காக பிரான்ஸ் ஜனாதிபதிக்கு 5 ஆண்டுகள் சிறை! ஊழல், இனப்படுகொலை, போதைப்பொருள் வியாபார மகிந்தாவுக்கு எத்தனை ஆண்டுகள்?



பிரான்சின் முன்னாள் ஜனாதிபதி நிக்கோலஸ் சர்கோசிக்கு சட்டவிரோத நிதியுதவி தொடர்பான வழக்கில் ஐந்து ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

லிபியத் தலைவர் கர்னல் முயம்மர் கடாபியிடமிருந்து மில்லியன் கணக்கான யூரோக்களை சட்டவிரோதமாக பெற்றதாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இந்த வழக்கில் செயலற்ற ஊழல் மற்றும் சட்டவிரோத பிரச்சார நிதியுதவி தொடர்பான சில குற்றச்சாட்டுகளில் பாரிஸ் குற்றவியல் நீதிமன்றம் அவரை விடுவித்தாலும், முக்கிய குற்றச்சாட்டில் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டது.

கடாபியிடமிருந்து பெறப்பட்ட நிதி, 2007ஆம் ஆண்டு நடந்த தேர்தல் பிரச்சாரத்திற்கு பயன்படுத்தப்பட்டதாக விசாரணைகளில் தெரியவந்தது.

இந்நிலையில் இந்த வழக்கு அரசியல் நோக்கம் கொண்டது என நிக்கோலஸ் சர்கோசி தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார்.70 வயதான சர்கோசி 2007 முதல் 2012 வரை பிரான்சின் ஜனாதிபதியாக பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது. அவருக்குச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதை 58 வீதமான பிரான்ஸ் மக்கள் வரவேற்றுள்ளனர்.

ஆனால் ஊழல், இனப்படுகொலை, போர்க்குற்றங்கள் ,போதைப்பொருள் வியாபாரம் போன்றவற்றோடு தொடர்புடைய ஸ்ரீலங்கா முன்னாள் ஜனாதிபதி மகிந்தாவுக்கு எத்தனை ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படும்? பிரான்ஸ் மக்கள் போல் சிங்கள மக்கள் நடந்து கொள்வார்களா என்ற பல கேள்விகளுடன் இலங்கை மக்கள் காத்திருக்கின்றனர் அநுர அரசு செய்யும் என்ற நம்பிக்கையில்.

இது இவ்வாறிருக்க காசா மீது இஸ்ரேல் நடத்தி வரும் தொடர் தாக்குதல்களால் ஏற்பட்ட உயிரிழப்புகளுக்கு மத்தியில், பாலஸ்தீனத்திற்கு தனி நாடு அங்கீகாரம் வழங்க பிரான்ஸ் தனது ஆதரவை முறையாக அறிவித்துள்ளது. இதன் மூலம் கனடா, இங்கிலாந்து மற்றும் அவுஸ்தி ரேலியாவைத் தொடர்ந்து பிரான்ஸும் இந்தப் பட்டியலில் இணைந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையில் நடைபெற்ற இரு நாடுகள் தீர்வு தொடர்பான மாநாட்டில் பேசிய பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன், பாலஸ்தீன நாட்டை அங்கீகரிக்க இதுவே சரியான தருணம் என்றார். இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன நாடுகளிடையே அமைதி ஏற்படுத்துவதற்கான ஒரு வரலாற்று ஈடுபாடாக இது அமையும் என்று அவர் குறிப்பிட்டார்.

பாலஸ்தீன நாட்டை அங்கீகரிப்பது, இஸ்ரேல் அமைதியாக வாழ்வதற்கு வழிவகுக்கும் என்றும், இது ஹமாஸ் அமைப்புக்கான தோல்வியாகும் என்றும் மக்ரோன் தெரிவித்தார்.

இதுவரை 140க்கும் மேற்பட்ட நாடுகள் பாலஸ்தீனத்திற்கு அங்கீகாரம் அளித்துள்ளன. ஜி7 மற்றும் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் உறுப்பு நாடுகளான இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் இந்த முடிவு, பாலஸ்தீன தனிநாட்டுக்கான சர்வதேச ஆதரவை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

# பாலஸ்தீனம் தொடர்பில் ஐ.நா.வில் ஜனாதிபதி அநுர கூறிய கருத்து!

பாலஸ்தீனத்தை ஒரு சுதந்திர நாடாக அங்கீகரிப்பதாக இலங்கை ஜனாதிபதி அநுரகுமார் திசாநாயக்க தெரிவித்துள்ளார். மேலும், இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்திற்கும் இடையிலான மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அனைத்து ஆதரவையும் வழங்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 80வது பொதுச் சபை அமர்வில் உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார். ஊழலுக்கு எதிரான போராட்டம் ஆபத்தானது என்றாலும், அதை எதிர்த்துப் போராடாமல் இருப்பது இன்னும் ஆபத்தானது என்று ஜனாதிபதி இதன்போது தெரிவித்துள்ளார். மேலும் ஊழலுக்கு எதிரான போராட்டம் உலகின் ஒவ்வொரு நாட்டின் கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக மாற வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

போதைப்பொருள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்கள் இன்று உலகின் சமீபத்திய பிரச்சினையாக மாறிவிட்டதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார் உலகளாவிய போதைப் பொருள் பிரச்சனை உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான மக்களை பாதிக்கும் சிக்கலான சவாலாக மாறியுள்ளது.

நாளுக்கு நாள், போதைப்பொருள் மற்றும் தொடர்புடைய பொருட்கள் உலக சந்தையை சாதனை விகிதத்தில் ஆக்கிரமித்துள்ளன. போதைப் பொருள் வர்த்தகமும் அதன் மூலம் செயல்படும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றமும் பல உலக நெருக்கடிகளுக்கு வழி வகுத்துள்ளன. இவற்றில் ஈடுபட்டுள்ள குழுக்கள் மாநிலங்களை இரையாக மாற்றுகின்றன. இந்த பேரழிவு உலக சுகாதாரம், உலக ஜனநாயகம், உலக அரசியல் மற்றும் உலக நலனுக்கு எதிரான ஒரு பெரிய போக்காக இது மாறி விட்டது. இலங்கையில் இந்தப் பெரும் கொள்ளை நோயை ஒழிப்பதற்கான ஒரு நேர்மறையான திட்டத்தை நாங்கள் செயல்படுத்தி வருகிறோம்.

இதேவேளை, உலகில் போரை விரும்பும் எந்த தேசமும் இல்லை. போர் அல்லது மோதல் ஏற்படும் போதெல்லாம், அது சோகத்தில் தான் முடியும் என்பதை நாங்கள் அறிவோம். இந்த தருணத்திலும் கூட, அந்த துயரத்தின் வலி உலகின் பல பகுதிகளிலும் உணரப்படுகிறது. மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக போரின் கசப்பான அனுபவத்தை அனுபவித்த ஒரு நாடாக, அதன் அழிவை நாம் நன்கு அறிவோம். போரில் உயிரிழந்த ஆயிரக்கணக்கான மக்களின் நினைவு இடங்களுக்கு (23ம் பக்கம் பார்க்க)


கந்தன் துணை

வணக்கம் நமது தமிழ் சொந்தங்கள் அனைவருக்கும் நாங்கள் இலங்கையில் உள்ள நாவலர் பரம்பரை வழியில் வந்த தமிழர்களின் பரம்பரை ஜோதிடர் திரு.ஆறுமுக நாவலர் தமிழ்நாட்டிலிருந்து முதன்முறையாக கனடாவிற்கு வருகை தந்துள்ளார். நீங்கள் இதுவரை எத்தனையோ ஜோதிடர்களை சந்தித்து பலன் பெறாத நீங்கள் ஒருமுறை என்னை சந்தித்து உங்கள் ஜோதிட பிரச்சனைகளுக்கு பலன் பெற்று செல்லுங்கள்.




ஸ்ரீ கந்தன் ஜோதிட நிலையம்

ஜோதிடர். ஆறுமுக நாவலர்



1.ஜாதக குறிப்பு பலன்கள் 2.கைரேகை பலன்கள் 3.முக லக்ன பலன்கள் 4.சோழிப் பலன்கள் துல்லியமாக கணித்து கூறப்படும்.

1.உடல்நலம், 2.கல்வி, 3.வியாபாரம், 4.திருமணத்தடை, 5.காதல் பிரச்சனை, 6.குழந்தை பாக்கியம், 7.வாஸ்து சாஸ்திரம், 8.தாம்பத்திய கோளாறு, 9.வழக்கு விவகாரம், 10.வெளிநாட்டு பயணங்கள், 11.செய்வினை, தீயசக்தி தீர்வுகள், 12.கணவன், மனைவி ஒற்றுமை பிரச்சனை, 13.சொத்து பிரச்சனை, 14.செவ்வாய், நாகதோஷ பரிகாரம், 15.எதிரிகளின் பிரச்சனை, 16.குடும்பத்தில் திடீர் இழப்பு

ஆகிய அனைத்து விதமான பிரச்சனைகளுக்கும் சிறந்த முறையில் தீர்வு கொடுக்கப்படும்

தொடர்புக்கு : 437 - 833 - 6651

OUR BRANCHES: TORONTO, SCARBOROUGH, MISSISSAUGA, BRAMPTON

உடனே அப்பாய்மெண்ட் எடுத்துக் கொள்ளுங்கள்

**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!



என் இனிய உறவுகளே! கனடாவாழ் கருணையாளர்களே! முல்லைத்தீவு பிராந்தியத்தில் அமைந்துள்ள பாரதி இல்லம், கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்பு இல்லம் மற்றும் செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளது உணவுத் தேவையை கடந்த 14 ஆண்டுகளாக தங்கு தடையின்றி நிறைவேற்றி வந்தவர்கள் நீங்கள்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகள், வீட்டு அடமான வட்டி வீத அதிகரிப்புக்கள் போன்ற பல்வேறு நெருக்கடிகள் காரணமாக இந்தக் குழந்தைகளுக்கான உதவிகள் குறைந் துள்ளது. இதனால் இக்குழந்தைகளின் வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் என்று பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொள்ளும் நிலையேற்பட வாய்ப்புள்ளது என்பதால் ஒவ் வொரு தமிழரும் குறிப்பாக கனடியத் தமிழர்கள் இக் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒருநாள் வரும் உங்கள் பிறந்த நன்நாள்கள், திருமண நன்நாள்கள், உங்கள் குழந்தைகளின் பிறந்த நன்நாள்கள் மற்றும் உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நான் என மலரும் உங்கள் நினைவுகளில் இக்குழந்தைகளையும் நினைத்து ஒருநாள் உணவளிக்க முன்வாருங்கள்!

தர்மம் தலை காக்கும். கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க அன்னதானம் வழங்குவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் குழந்தைகளின் வாழ்த்துக்கள் உங்களை மட்டு மல்ல உங்கள் சந்ததி வாழ வைக்கும்.

நீங்கள் வழங்குகின்ற உதவிகள் சரியான நேரத்தில் சென்ற டைகின்றது என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள eelanadu.ca என்ற மின்னிதழில் வெள்ளிக்கிழமை தோறும் பார்வையிடலாம். உங்கள் ஆதரவே இக்குழந்தைகளின் வாழ்வாதாரம்.

இலங்கை சிறுவர் நன்னடைத்தை மற்றும் பராமரிப்பு கண் காணிப்பு அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமைய முக நூல்களில் இவர்களது புகைப்படங்கள் தவிர்க்கப்பட்டு ள்ளன.

மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும் ஈழநாடு பரமேஸ் 416 8419600 (கனடா) eelanadu1993 @gmail.cam என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.

# ஒன்ராறியோ அரசு சுகாதார சேவைகளை மேம்படுத்த அடுத்த கட்ட நடவடிக்கைகள்




ஒன்ராறியோ அரசு $235 மில்லியன் முதலீடு செய்து, 1,30– க்கும் மேற்பட்ட புதிய மற்றும் விரிவுபடுத்தப்பட்ட குழுக் களின் மூலம் மேலும் 3,00,000 மக்களை முதன்மை சிகிச்சை சேவைகளுடன் இணைக்கிறது. அதிக தேவை யுள்ள பகுதிகள் போன்ற ஸ்காபரோவும் இதில் அடங்கும். ஸ்காபரோ மருத்துவ மற்றும் ஒருங்கிணைந்த சுகாதார அகாடமியில் (SAMIH) முதல் மருத்துவக் கல்லூரி மற்றும் ஸ்காபரோ ஜெனரல் மருத்துவமனையில் புதிய கண்டறிதல் படிமப் பிரிவு போன்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க திட்டங்கள், ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு சிகிச்சை அணுகலை மாற்றி அமைக்க உள்ளது.

மக்களை மையமாகக் கொண்டு சிகிச்சை வழங்குவதுதான் எங்கள் அரசின் நோக்கம் ஸ்காபரோ குடும்பங்களுக்கு மருத் துவர்களைச் சந்திக்கச் சிறந்த வாய்ப்பு, வேகமான பரிசோதனைகள், மற்றும் வீட்டிற்கு அருகில் தரமான சேவைகள் கிடைக்கப்படுவதை உறுதி செய்கிறோம். ஸ்காபரோ மக்களுக்கு உரிய சுகாதார சேவையை நாங்கள் வழங்கி வருகிறோம் என்று அமைச்சர் விஜய் தணிகாசலம் தெரிவித்தார்.

கண் மருத்துவர்கள், உளவியல் நிபுணர்கள், மருந்தாளர் கள் போன்ற வல்லுநர்களின் செயல்பாட்டு வரம்பை விரிவு படுத்துவதன் மூலம், நோயாளிகள் தகுந்த நேரத்தில் சிகிச்சை பெறுவர். இதனால் அவசர சிகிச்சைப் பிரிவுகளில் அழுத்தம் குறையும். இவ்விதமான முதலீடுகள் ஸ்காபரோ வின் சுகாதார அமைப்பை வலுப்படுத்தும் தெளிவான அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகின்றன. மேலும் குடும்ப ங்கள் தங்களுக்கு தேவையான சிகிச்சையை சரியான இடத் திலும் சரியான நேரத்திலும் பெறுவதை உறுதி செய்கின்றன.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**


# தமிழ்மக்களை பலப்படுத்துவதற்கான அடிப்படைக் கட்டமைப்பு மாகாணசபையே - சட்டத்தரணி கோசலை

தமிழ் மக்களைப் பலப்படுத்துவதற்காக எவ்விதமான அடிப்படைக் கட்டமைப்புக்களும் காணப்படாத நிலையில் மாகாண சபை முறைமை அரசியலமைப்பு ரீதியாக அந்த வெற்றிடத்தினை தற்காலிகமாகவேனும் பூர்த்தி செய்வதாக உள்ளது. ஆகவே மாகாண சபைகளுக்கு அதியுச்சமாக காணப்படுகின்ற அதிகாரங்களின் பிரகாரம் அவற்றை முன்னெடுப்பதற்கான விருப்பம் மக்கள் பிரதிநிதிகளுக்கும், மக்களும் முதலில் ஏற்பட வேண்டும் என்று யாழ்.பல்கலைக்கழகத்தின் சட்டபீடத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான சட்டத்தரணி கோசலை மதன் தெரிவித்தார்.

வன்டெக்ஸ்ட் இனிஷஜயேற்றிவ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் யாழ்.ரில்கோ விடுதியில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். வடமாகாண சபையை பிரதிநிதித்துவம் செய்த இலங்கைத் தமிழரசுக் கட்சி, புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப், ஈ.பி.டி.பி. ஆகியவற்றின் முன்னாள் அமைச்சர்கள், உறுப்பினர்களின் பங்கேற்புடன் வடமாகாண சபையின் அனுபவ பகிர்வும், மாகாண சபைகளுக்கான தேர்தலும்' எனும் தலைப்பில் நடைபெற்ற குறித்த கலந்துரையாடலில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய நிலையில் சுயாட்சிக் கட்டமைப்பை நோக்கிய தமிழர்களின் நீண்டபோராட்டம் பல்வேறு வகையில் முன்னெடுக்கப்பட்டு தோல்வி கட்ட நிலையில் தான் ஆயுத போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. பின்னர் ஆயுத போராட்டமும் தோல்வி கண்டுள்ள நிலையில் தான் தற்போது, பூச்சியத்திலிருந்து எமது போராட்டத்திற்கான பயணத்தினை ஆரம்பிக்க வேண்டிய நிலையில் உள்ளோம்.

தமிழ் சமூகத்தைப் பொறுத்தவரையில் தற்போதும் மாகாண சபை முறைமை எமக்கு தேவையா இல்லையா என்பது தொடர்பில் உறுதியான தீர்மானமற்ற சமூகமாக இருக்கின்றது.

மாகாண சபைகளுக்கான தேர்தல் வேண்டுமென்றே இழுத்தடிக்கப்படுகின்றது. அவ்விதமான சந்தர்ப்பத்தில் மாகாண சபை தேர்தல் தொடர்பில் தமிழ் தரப்புக்குள் வாதப்பிரதிவாதங்களை தொடர்ந்து கொண்டிருப்பது தேவையில்லாதவொரு விடயமாகும்.

மாகாண சபைமுறைமையானது, அரசியலமைப்பு ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, எமக்கு முன்னால் காணப்படுகின்ற விடயமாக உள்ளது. ஆனால் மாகாண சபை முறைமையை ஏற்றுக்கொள்வதில் பல சித்தாந்தவாதிகளுக்கு பிரச்சினைகள் இருக்கின்றன. சமஷ்டி முறைமையிலான தீர்வொன்றை நாம் கோரி நிற்கின்ற நிலையில் ஒற்றையாட்சிக்குள் மாகாண சபை முறைமையை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று உறுதியாக கூறுகின்ற தரப்பொன்று எம்மத்தியில் உள்ளது.

தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்கு, சமஷ்டி முறைமையிலான தீர்வொன்று அவியமாக இருக்கின்ற போதும், மாகாண சபை



முறையை தூக்கியெறிந்து விட்டு அடுத்தகட்டமாக என்ன செய்வது என்பது தொடர்பில் தெளிவான நிலைப்பாடுகள் இல்லாத நிலையே உள்ளது. அந்த வகையில், அரசியலமைப்பு ரீதியாக, ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள மாகாண சபை முறைமையை வினைத்திறனாக செயற்படுத்துவதன் ஊடாக படிப்படிப்படியாக கட்டமைத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

அரசியலமைப்பு ரீதியாக 13ஆவது திருத்தச்சட்டத்தின் கீழ் மாகாண சபை முறைமை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள போதும், அதனை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கத்தினையும், இந்தியாவையும் கெஞ்சிக் கேட்கும் நிலைக்கு வந்துள்ளோம். இந்தப் பலவீனமான நிலைமைக்கு ஏதேவொரு வகையில் தமிழ்த் தரப்பும் பொறுப்புக்கூற வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். வடக்கு மாகாண சபை செயற்பட்டிருந்த காலத்தில் சட்டரீதியாக காணப்பட்ட அதியுச்ச அதிகாரங்களை வினைதிறனாக கையாண்டிருக்கவில்லை என்ற விமர்சனம் இருக்கின்றது.

குறிப்பாக, மாகாண சபையானது, நியதிச்சட்டங்களை உருவாக்கும் அதிகாரத்தினைக் கொண்டிருக்கின்றது. ஆனால் வடக்கு மகாணசபையின் ஆயுட்காலத்தில் எத்தனை நியதிச் சட்டங்கள் இயற்றப்பட்டன என்ற கேள்வி எழுகின்றது. அக் கேள்விக்கு சில வேளைகளில் அதில் பங்கேற்ற உறுப்பினர்கள், ஆளுநர் தடையாக இருந்தார் என்று காரணத்தினைக் கூற முடியும்.

அதனை நான் ஏற்றுக் கொள்கின்றேன். விசேடமாக முதலமைச்சர் நிதியத்தினை உருவாக்குவதற்காக நியதிச் சட்டம் இயற்றப்பட்டு ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பபட்ட போது அது அங்கீகரிக்கப்படவில்லை. அதனை விடவும் ஏனைய விடயங்கள் சம்பந்தமாக எவ்வாறான நியதிச்சட்டங்கள் இயற்றப்பட்டுள்ள என்பதில் கேள்விகள் நீடிக்கின்றன.

வடமேல் மாகாணம் போன்ற தென்னிலங்கை மாகாண சபைகள் பல்வேறு நியதிச்சட்டங்களை நிறைவேற்றிருக்கின்றன. அத்தகைய நியதிச்சட்டங்களை வட மாகாண சபை நிறைவேற்ற முடியாது போனமைக்கான காரணம் என்ன?

(23ம் பக்கம் பார்க்க)


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# பாலஸ்தீனத்தை ஆதரிக்கும் அனுர தமிழ்மக்கள் தொடர்பில் அலட்டிக் கொள்ள மாட்டார்

பலஸ்தீனத்தை ஆதரிக்கும் அனுர தமிழ் மக்கள் தொடர்பில் ஒருபோதும் அலட்டிக் கொள்ளமாட்டார் என ஐக்கிய சோசலிச கட்சியின் முக்கியஸ்தர் ஸ்ரீதுங்க ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

அனுர அரசும் முன்னைய அரசுகளுக்கு நிகரான அரசுதான் என்பதை நிரூபித்து வருகின்றது எனவும் தேர்தல் மேடைகளில் கூறியவற்றை மறந்து மக்களை திசை திருப்பி தங்களின் ஆட்சியை கொண்டு செல்லவே பாடுபடுகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் 25 செப் 2025 நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு கருத்து தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்

அனுர ஒரு சந்தர்ப்பவாதி, அமெரிக்கவின் நிகழ்ச்சி நிரலில் இருந்து நாட்டை சீரழிக்கும் ஒருவர், அமெரிக்கா என்ன நினைக்கின்றதோ அதையே நாட்டில் முன்னெடுத்து வருகின்றது.

இதே நேரம் சர்வாதிகரம் கொண்ட அனுரவுக்கு நாட்டில் புரையோடிக் கொண்டிருக்கும் அரசியல் பிரச்சினையை தீர்க்க ஒரு கையொப்பம் போதும், ஆனால் அதை அவர் செய்யமாட்டார்.

யாழ் மக்களுக்கு சர்வதேச மைதானம் அவசியமாக இருந்தாலும் அதைவிட அவசியமானவை எண்ணற்ற அளவில் இருக்கின்றன. ஆனால் அனுர அரசு மைதானத்தை காட்டி தமிழ் மக்களின் பிரச்சினைகளை மூடிமறைக்க முயல்கிறது.

வடக்கில் இருந்து பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றம் சென்றாலும் அவர்களில் ஒருவர் கூட அமைச்சராக பொறுப்புக் கொடுக்காத அரசு இது.

வடக்கில் வந்து பேதங்கள் அற்ற ஆட்சி செய்வதாக கூறும் அனுர, தனது ஆட்சியில், அமைச்சரவையில் தமிழ் முஸ்லிம் சமூகங்களை ஓரங்கட்டி வைத்திருக்கின்றது.

இதேநேரம் யாழ்ப்பாணம் சாரா ஒருவரை யாழ்பாணத்தின் அமைச்சராக்கி யாழ் மக்களை இழிவுபடுத்தும் செயலே முன்னெடுக்கப்படுகின்றது. இதற்கு காரணம் இலங்கை தமிழர் ஒருவர் அமைச்சரானால் தமிழ் மக்கள் பிரச்சினைகள் குறித்த தீர்வுக்கு குடைச்சல் கொடுப்பார் என்பதால் தான் அமைச்சு கொடுக்கபடவில்லை, இதுவே உண்மை.

பலஸ்தீனத்ததை ஆதரித்து ஐ.நாவில் கருத்துக் கூறும் அனுர இலங்கை தமிழ் மக்கள் தொடர்பில் ஒருபோதும் அலட்டிக்கொள்ள மாட்டார். ஏனெனில் அனுர ஓர் இனவாத குடும்பத்தின் பின்னணியில் இருந்து வந்தவர்.

மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் சதித்திட்டத்தை முன்னெடுக்கின்றது. இதை முறியடிக்க வேண்டும்.




நாட்டில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்பதுடன் அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய அனுர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அது மட்டுமல்லாது வடக்கு கடற்றொழில் சமூகத்தின் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்பதுடன் இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் உள்ள மக்களின் பாரம்பரிய பூர்வீக காணிகளை உடனடியாக விடுவிக்கவும் அனுர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதேவேளை சுயநிர்ணய உரிமைகளின் அடிப்படையில் தேசியப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க இந்த அரசு முயற்சி செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

## நாமல் வடிக்கும் முதலைக் கண்ணீர்!

இலங்கையின் வடக்கு மாகாணத்தில் உள்ள குடும்பங்கள், வரவிருக்கும் பருவமழைக் காலத்தில் இடம்பெயர்வு அபாயத்தில் இருப்பதால், அவர்களைப் பாதுகாக்க உடனடியாகவும், முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச 25 செப் 2025 வியாழக்கிழமை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார்.

பருவகால மழை வெள்ளம் மற்றும் பிற அவசர நிலைகள் ஏற்படவுள்ளதால், பள்ளிகள் மற்றும் அரசு கட்டிடங்களில் தற்காலிக தங்குமிடம் தேட வேண்டிய கட்டாயத்தில் உள்ள குடியிருப்பாளர்கள் எதிர் கொள்ளும் தொடர்ச்சியான சிரமங்களை நாமல் நாடாளுமன்றத்தில் எடுத்துரைத்தார்.

ஒவ்வொரு ஆண்டும், குடும்பங்கள் இடம்பெயர்ந்து பேரிடர் தாக்குதலுக்குப் பிறகு தான் தஞ்சம் அடைகின்றன. அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் இடையூறுகளைக் குறைப்பதற்கும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களை முன்கூட்டியே இடமாற்றம் செய்ய ஒருங்கிணைந்த முயற்சி தேவை என்று அவர் கூறினார்.

## எதிர்ப்பதற்கென்றே ஒரு கூட்டம்?

எங்கெல்லாம் காற்றாலைகள் நிறுவ முயற்சித்தாலும் (எந்த தொழிற்சாலைக்கும், கைத்தொழிலுக்கும் இது பொருந்தும்) உடனே ஒரு குழுவினர் அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பது இப்பொழுது வழக்கமாகி விட்டது. அதற்காக சொல்லப்படும் காரணங்களை பாமர மக்கள் உடனேயே நம்பி விடுவதுண்டு. அவற்றில் சில ஓரளவுக்கு உண்மையாகினும் 'significant' என்று சொல்லும் அளவுக்கு முக்கியமானவையல்ல. அவை, வவுனியாவில் இருந்து தெற்கு நோக்கி சென்றால் யாழ்ப்பாணம் வரும் என்ற கூற்றுக்கு ஒப்பானவை. உலகம் உருண்டை என்பதால் இக்கூற்று பிழை இல்லை. ஆனால் விஞ்ஞான ரீதியாக significant இல்லாதது என்று கூறுவோம்.

அனல் மின் நிலையங்களிலும் பார்க்க காற்றாலைகள் எமது சுற்றுச்சூழலுக்கு மிகவும் நல்லதே. சொல்லப்படும் காரணங்களுள் சிலவற்றை கீழே தந்துள்ளேன்.

1.காற்றை முகில்களை கலைத்து மழை வீழ்ச்சியை குறைக்கும். 2 பறவைகள் உயிரினங்கள் அழிந்துவிடும். 3.அரசியல்வாதிகள் இலஞ்சம் வாங்கியிருக்கிறார்கள். எமக்கு என்ன லாபம்? 4. சுற்றுச்சூழல் அழகு கெட்டுவிடும். 5. குடிமனைகளுக்கு அருகில் அமைக்கப்படுகின்றன. 6. ஒலி மாசால் மீன் வளம் குறையும்.

எந்த தொழிநுட்பமும் இயற்கையை விட சிறந்தது இல்லை. ஆனால் எமக்கு மின்சாரம் தேவையென்றால், அதுவும் மலிவாக, சூ ழலை மாசுபடுத்தாமல் தேவையென்றால் தற்போது உள்ள ஒரே தொழில்நுட்பம் காற்றாலை தான். சூரியக்கலங்களும் பொருத்தமென்றாலும் பெரியளவில் மின்சாரம் தயாரிக்க காற்றாலையே இலங்கைக்கு சிறந்தது. அதை எதிர்த்தால், சூழலுக்கு பெரிய அளவில் தீமையை கொண்டுவரக்கூடிய அனல் மின் சக்தியே நிறுவ வேண்டி வரும். அதை நாம் நிச்சயம் தடுக்கவேண்டும்.

நவீன காற்றாலைகள் மிகவும் ஒலி சத்தம் குறைந்தவை. 100m தூரத்திலேயே அவற்றின் ஒலி, சுவரில் பூட்டப்படும் ஒரு ACயின் ஒலிக்கு சமமாகி விடும். 300 m இற்கு அப்பால் அவற்றின் சத்தம் எமது வீட்டில் உள்ள ஒரு குளிர்சாதனப் பெட்டியில் இருந்து வரும் சத்தம் அளவே இருக்கும் என்று ஒரு ஆய்வு சொல்கின்றது. இவற்றின் நிர்மாண வேலைகளின் போது ஏற்படும் பெரிய அதிவுகள் ஒரு குறுகிய காலத்திற்கு மீன்களை தொந்தரவு செய்யக் கூடுமாயினும் அதன் பின்பு அவை வழமைக்கு திரும்பி விடும்.

மறவன்புலவில் செய்தது போன்று துறைசார் நிபுணர்களை கொண்டு மக்களுக்கு தெளிவுட்டல் நிகழ்வுகள் செய்யப்படவேண்டும்.

யாழ் பல்கலைக்கழக பௌதீகவியல் பேராசிரியர் கந்தசாமி, பொறியியல் பேராசிரியர் அற்புதராஜா, விலங்கியல் பேராசிரியர் கஜபதி உட்பட பல துறைசார் நிபுணர்களைக் கொண்டு அப்போதைய யாழ் அரசாங்க அதிபர் வேதநாயகன் மக்களுக்கு தெளிவுட்டல்களை செய்தார் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. தமது சுயநல அரசியலுக்காக இத்திட்டத்தை எதிர்க்காதீர்கள்.

# பாலஸ்தீன நாடு என்பது உரிமை சார்ந்தது - ஐ.நா.சபை

பாலஸ்தீன நாடு என்பது ஒரு வகை உரிமை. அது பரிசு அல்ல. நாட்டுக்கான அனுமதியை மறுப்பது என்பது பயங்கரவாதிகளுக்கு பரிசளிப்பது போன்றது. 2 நாடுகள் இன்றி, மத்திய கிழக்கில் அமைதி என்பது ஏற்படாது என ஐக்கிய நாடுகள் சபையின் பொது செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் அமைப்பை இலக்காக கொண்டு காசாவுக்கு எதிராக ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாக இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில், 63 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் உயிரிழந்து உள்ளனர். அவர்களில் குழந்தைகள், பெண்கள் மற்றும் வீரர்களும் அடங்குவர். போர்நிறுத்த பேச்சுவார்த்தை பலனளிக்காத நிலையில், போரானது தொடர்ந்து வருகிறது.

இதில் பாலஸ்தீனியர்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். உணவு, உறைவிடம் கிடைக்காமல் தவித்து வருகின்றனர். பட்டினியால், குழந்தைகள் உள்பட பலரும் நோய் தாக்குதலுக்கும் ஆளாகின்றனர்.

இந்நிலையில் இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனியர்கள் இடையேயான மோதல் பற்றி ஆலோசிக்க அமெரிக்காவின் நியூ யோர்க் நகரில் அமைந்துள்ள ஐ.நா. சபையின் தலைமையகத்தில் உறுப்பு நாடுகளின் கூட்டம் நடந்தது.

இதில் ஐ.நா. பொது செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் கலந்து கொண்டு பேசினார்.

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனியர்கள் இடையே நடந்து வரும் மோதல் பல தலைமுறைகளாக தீர்க்கப்படாத ஒன்றாக இருந்து வருகிறது. பேச்சு வார்த்தையில் நம்பிக்கையற்ற நிலை உள்ளது. தீர்மானங்கள் காற்றில் பறக்க விடப்பட்டு வருகின்றன என வேதனையுடன் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறும் போது, இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம் ஆகிய இறையாண்மை கொண்ட இரு சுதந்திர, ஜனநாயக நாடுகள் என்ற அடிப்படையில் இரு நாடுகள் என்பதே தீர்வாக இருக்கும். அவரவர்கள்,



தங்களுடைய அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்குள் அமைதியாகவும், பாதுகாப்பாகவும் வசிக்க வேண்டும்.

சர்வதேச சட்டம், ஐ.நா. தீர்மானம் மற்றும் பிற தொடர்புடைய ஒப்பந்தங்களின்படி இணைந்து, ஜெருசலேம் நகரை தலைநகராக இரு நாடுகளும் கொண்டிருக்க வேண்டும் என்று கூறினார்.

பாலஸ்தீன நாடு என்பது ஒரு வகை உரிமை. அது பரிசு அல்ல. நாட்டுக்கான அனுமதியை மறுப்பது என்பது பயங்கரவாதிகளுக்கு பரிசளிப்பது போன்றது. 2 நாடுகள் இன்றி, மத்திய கிழக்கில் அமைதி என்பது ஏற்படாது என்று கூறினார்.

# விமானத்தின் லேண்டிங் கியரில் மறைந்து இந்தியா சென்றடைந்த ஆப்கானிஸ்தானின் 13 வயதுச் சிறுவன்

ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த 13 வயது சிறுவன் ஒருவன், விமானம் ஒன்றின் லேண்டிங் கியரின் மேல் பக்கத்தில் ஒளிந்துகொண்டு டெல்லி வரை பயணித்துள்ளான்.

டெல்லி இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையத்தில் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்ட சிறுவன் அதே விமானத்தில் ஆப்கானிஸ்தானுக்கு திருப்பி அனுப்பப்பட்டதாக TI செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

டெல்லி விமான நிலையத்தில் உள்ள காம் ஏர்லைன்ஸ் விமான குழுவினர் ஒரு சிறுவன் விமானத்தின் அருகே நடந்து சென்றதை கவனித்துள்ளனர்.

அவர்கள் உடனடியாக விமான நிலையத்தில் பாதுகாப்பு பணியில் இருந்த அதிகாரிகளிடம் தகவல் தெரிவித்தனர். அந்த சிறுவன் விசாரணைக்காக மூன்றாவது முனையத்திற்கு அழைத்து செல்லப்பட்டார்.

விசாரணையில் அந்த சிறுவன் ஆப்கானிஸ்தானின் குந்துஸ் (Kunduz) மாகாணத்தைச் சேர்ந்தவர் என்பது தெரியவந்துள்ளது.



காபூல் விமான நிலையத்திற்குள் நுழைந்து விமானத்தின் பின்பக்கத்தில் உள்ள சென்ட்ரல் லேண்டிங் கியர் பகுதியை தான் அடைந்ததாக விசாரணை அதிகாரிகளிடம் சிறுவன் தெரிவித்துள்ளார்.

விசாரணைக்குப் பிறகு, எந்த சதித் திட்டமும் இல்லையென தீர்மானிக்கப் பட்ட நிலையில் விமானம் பாதுகாப் பாக உள்ளதாக அறிவிக்கப்பட்டது. சிறுவனின் பெயரும் அடையாளமும் வெளியிடப்படவில்லை.

ஆப்கானிஸ்தானில் உள்ள தாலிபன் அரசு இந்தச் சம்பவம் தொடர்பாக அதிகாரப்பூர்வமாக எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை.

ஆனால் தாலிபன் அரசின் எல்லையோர காவல்படையின் செய்தித் தொடர்பாளர் அப்துல்லா ஃபரூக்கி இந்தச் சம்பவம் பற்றி விசாரித்து வருவதாக கூறியுள்ளார்.

இதனிடையே சிறுவன் விமானத்தை அடைந்தது காபூல் விமான நிலையத்தின் பாதுகாப்பு தொடர்பாக பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது.

ஒருவர் விமானத்தில் ஒளிந்து கொண்டு இன்னொரு இடத்திற்கு பயணித்தது இது முதல்முறையல்ல. ஆனால் விமானத்தின் லேண்டிங் கியர் பகுதியில் ஒழிந்துகொண்டு ஒருவர் பயணித்தது இதுவே முதல்முறை ஆகும்.

ஆக்சிஜன் பற்றாக்குறை மற்றும் தீவிரமான குளிரில் அந்த உயரத்தில் உயிர் பிழைப்பது அசாத்தியமானது என வல்லுநர்களை கூறுகின்றனர்.

# பாதாளக் குழுக்களைப் போஷித்து நாட்டுக்குள் போதைப் பொருளைக் கொண்டு வந்தவர்கள் மொட்டுக் கட்சியினர் என்பது மக்களுக்குத் தெரியும்

நீதிமன்ற உத்தரவில்லாமல் எமது அரசாங்கம் யாரையும் கைது செய்த தில்லை. பாதாள குழுக்களை போஷித்து அதன் மூலம் நாட்டுக்குள் போதைப் பொருள் கொண்டு வந்து விநியோகிப்பவர்கள் மொட்டு கட்சியில் இருப்பவர்கள் என்பது நாட்டு மக்களுக்கு தெரியும். அதனால் போதைப்பொருள் தொடர்பான குற்றச்சாட்டை எமது அரசாங்கத்தின் மீது சுமத்தி தப்பிக்க முடியாது என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் 25 செப் 2025 வியாழக்கிழமை இடம் பெற்ற இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் மீதான விவாத்தின் போது, நாமல் எம்.பி உரையாற்றிக் கொண்டிக்கையில் தெரிவித்த குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கை யிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது நாமல் எம்.பிக்கும் ஆனந்த விஜேபால அமைச்சருக்கு மிடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்று வந்தது.. அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நீதிமன்ற உத்தரவின்றி பொலிஸார் இராணுவத்தினர் என யாரையும் எமது அரசாங்கம் கைது செய்த தில்லை. அதனால் இராணுவவீரர்களை கைது செய்திருப்பதாக நாமல் எம்.பி தெரிவித்த விடயத்தில் எந்த உண்மையும் இல்லை. முன்னாள் கடற்படை தளபதி, அவர் புலனாய்வு பிரிவில் இருக்கும் போது செய்த ஒரு நடவடிக்கை காரணமாக, நீதிமன்ற உத்தரவின் பேரிலே அவர் கைது



செய்யப்பட்டார்.

அதே போன்று கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமை தொடர்பில் வரும் முறைப்பாடுகள் தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். போதைப்பொருளுடன் எமது அரசாங்கத்தை தொடர்புபடுத்த நாமல் எம்.பி முயற்சித்தார். ஆனால் போதைப் பொருளுடன் பொதுஜன பெரமுன கட்சி உறுப்பினர் மனம்பேரி தொடர்புபட்டவர் என யாரும் அறிந்த விடயம். அவர் தற்போது கைது செய்யப்பட்டிருக்கிறார்.அவர் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோவின் இணைப்புச் செயலாளர். அதனால் போதைப் பொருளுடன் தொடர்புபட்ட பலர் மொட்டு கட்சியில் இருக்கின்றனர்.

நாட்டுக்குள் போதைப்பொருள் யார் கொண்டு வருகிறார்கள் என்பதை மக்களுக்கு தெரியும். அதனால் இவர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டை மற்றவர்களின் மீது சுமத்தவே தற்போது இவர்கள் முயற்சிக்கின்றனர். இவர்களின் இந்த குற்றச்சாட்டுக்களுக்கு நாட்டு மக்கள் ஏமாறப் போவதில்லை. இந்த நாட்டில் பாதாள குழுக்களை போஷித்து, அதன் மூலம் போதைப்பொருளை நாட்டுக்கு கொண்டு வந்து, விநியோகித்து வந்தவர்களை மக்கள் துரத்தியடித்த பின்னர், தற்போது எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு, எம்மை விமர்சித்து வருகின்றனர் என்றார்.

இதன்போது ஒழுங்கு பிரச்சினை எழுப்பி, எழுந்த நாமல் ராஜபக்ஷ, போதைப்பொருள் தொடர்பில் புலனாய்வு துறையில் இருந்து வந்த உத்தரவை ஏன் செயற்படுத்தவில்லை என்பதை தெரிவிக்க வேண்டும் என்றார்.

அதற்கு அமைச்சர் ஆனந்த விஜேபால பதிலளிக்கையில், எமக்கு வந்த தகவலுக்கமைய, தேசிய அபாயகர ஒளடதங்கள் அமைப்புடன் சென்று அதனை பரிசோதனை செய்தோம் தற்போது விசாரணை இடம் பெறுகிறது. மாறாக உங்களைப் போன்று, சம்பவம் ஒன்று இடம் பெற்றவுடன் சம்பந்தப்பட்ட இடத்துக்கு சென்று குடு லான் சாவை அணைத்துக் கொண்டது போன்று நாங்கள் செயற்படுவதில்லை. புலனாய்வு தகவல்களின் பிரகாரமே செயற்படுகிறோம் என்றார்.

# இலங்கை பொலிஸ் உத்தியோகத்தருக்கு இந்திய நீதிமன்றம் தண்டனை



இலங்கையில் போதைப்பொருள் கடத்தல் வழக்கில் தொடர்புடைய குற்றச் சாட்டில் தேடப்பட்ட பொலிஸ் உத்தியோகஸ்தர் சட்ட விரோதமான முறையில் இந்தியாவிற்கு தப்பி சென்று இந்தியாவில் கைதான நிலையில் அவர் நேற்றைய தினம் நீதிமன்ற உத்தரவில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு துறைமுக பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் கடந்த 2020ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 5ஆம் திகதி தலை மன்னார் ஊடாக இந்தியாவிற்கு படகில் சென்ற நிலையில் இராமேஸ்வரம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் முன் னெடுக்கப்பட்ட விசாரணையில் தனது சகோதரர் போதைப்பொருளுடன் கைதானதாகவும் விசாரணையில் சகோதரன் தனது பெயரை கூறியதால் , தன்னை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்ட போது தான் தப்பி இந்தியாவிற்குள் வந்ததாக கூறியுள்ளார்.

அதனை அடுத்து இராமநாதபுரம் நீதிமன்றில் அவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்ட நிலையில் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

குறித்த வழக்கு விசாரணை நேற்றைய தினம் தீர்ப்புக்காக திகதியிடப்பட்ட நிலையில் வழக்கு நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்ட வேளை சட்டவிரோதமாக இந்தியாவிற்குள் நுழைந்தமை உள்ளிட்ட குற்றச் சாட்டுகளுக்கு எதிராக 2 வருட சிறைத்தண்டனை விதித்த மன்று 2 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்தது.

2 ஆண்டுகளுக்கு மேல் சிறப்பு முகாமில் குறித்த நபர் இருந்தமையை கவனத்தில் எடுத்த மன்று , அவர் சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கால பகுதியை சிறைத்தண்டனைக்குரிய கால பகுதியாக எடுத்து அவரை விடுதலை செய்தது.

குறித்த நபர் குடிவரவு குடியகல்வு நடைமுறைகளை சட்ட ரீதியாக மேற்கொண்டு தனது நாட்டுக்கு திரும்பலாம் எனவும் நீதவான் தனது தீர்ப்பில் சுட்டிக் காட்டியுள்ளார்.

# வைத்தியர் மனோகரன் காலமானார்

திருகோணமலை ஐந்து மாணவர்களின் கொலைக்கான நீதிக்காய் போராடிய வைத்தியர் மனோகரன் காலமானார்.

அவரது மரணம் தொடர்பில் தகவல் வெளியிட்டுள்ள நண்பர் ஒருவர் ரஜீகரின் பிறந்தநாள் இன்று .அவனுக்கான நீதிக்காய் ஓடிக் களைத்து பிறந்தநாளில் அவனோடு இணைந்தார்.

2006 ஜனவரி 2ம் திகதி இரவில் இருந்து மனோகரன் அவர்களோடு உரையாடத் தொடங்கி இருந்தேன், இறுதி வரை ஏதோ ஒரு முயற்சிகளுக்காய் அவரோடு பேசிக் கொண்டே இருந்தேன்.

எமது கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இறுதி சடங்கில் தன் குடும்பத்தின் சார்பாக என்னை பேச அழைத்தார். அதன் பின் 31வது நாள் நிகழ்வை ஏற்பாட்டில் நான் முழுமையாக இருந்தேன்.

தொடர் கொலைகள் மற்றும் அச்சுறுத்தல்களால் அனைத்துப் பாதிக்கப்பட்ட குடும்பங்களும் நாட்டில் இருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது.

ஆனால் வைத்தியர் மனோகரன் தொடர்ச்சியாக போராடினார் சர்வதேச நிறுவனங்களிடம் கண்ணீர் மல்க நீதி கேட்டார். அனைவருக்கும் தெரிந்த அரச பயங்கரவாதக் கொலைக்கு அவரால் இறுதிவரை நீதியைப் பெற முடியவில்லை.

2023 அவருடன் இணைந்து இங்கிருக்கின்ற சர்வதேச மன்னிப்புச் சபையிடம் மீண்டும் இந்த



வழக்கை எடுக்குமாறு நான் கோரிக்கையை வைத்து ஒரு நிகழ்வை ஏற்பாடு செய்தேன். வைத்தியசாலையில் இருந்தபடி அந்த நிகழ்வை நேரடியாக அவர் பார்த்தார்.

அடுத்த கட்டம் தொடர்பாக ஏதோ ஒன்றைச் செய்து கொண்டே இருந்தார். பல முறை உரையாடினார், இன்று வந்த அழைப்பில் அவரின் மகன் ஜெய்கரின் சோகக் குரல் மட்டும் ஒலித்தது. நீதி கேட்கின்ற அரசியல் போராட்டங்கள் எம்முள் இப்படித் தான் விதைக்கப்பட்டது. மனோகரன் அவர்களுக்கு இறுதி வரை நீதி எட்டவில்லை. ரஜீகருக்கும் நீதி கிடைக்கவில்லை என தெரிவித்துள்ளார்

# போரின் போது மீட்கப்பட்ட 6000 தங்க நகைகள் மத்திய வங்கியிடம் ஒப்படைப்பு!




விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமானதாக நம்பப்படும் 10,000 தங்கப் பொருட்களில், நீதிமன்ற உத்தரவின் பேரில் தேசிய ரத்தினக் கற்கள் மற்றும் நகைகள் ஆணையத்திற்கு அனுப்பப்பட்ட 6,000 பொருட்கள் இப்போது இலங்கை மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத் துறை (சிஐடி) கொழும்பு பிரதான நீதவான் அசங்க எஸ். போதரகமவிடம் தெரிவித்துள்ளது.

மனிதாபிமான நடவடிக்கையின் போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள முகாம்கள், சட்டவிரோத வங்கிகள் மற்றும் கட்டிடங்களில் இருந்து மீட்கப்பட்ட தங்கப் பொருட்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

10,000 தங்கப் பொருட்களை ஆய்வு செய்து, நீதிமன்றத்திற்கும், சிஐடிக்கும் விரிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் முன்னதாக தேசிய ரத்தினக் கற்கள் மற்றும் நகைகள் ஆணையத்திற்கு உத்தரவிட்டிருந்தது. தங்கத்தின் உள்ளடக்கம் மற்றும் எடையை குறிப்பிட்டு, 6,000 பொருட்கள் மத்திய வங்கிக்கு மாற்றப்பட்டதாக சிஐடி அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

வழக்கு நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது முன்னேற்ற அறிக்கையை சமர்ப்பித்தே அவர்கள் இந்தத் தகவலை மேலும் சமர்ப்பித்தனர். மனிதாபிமான நடவடிக்கையின் போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மீட்கப்பட்ட தங்கப் பொருட்கள் உள்ளூர்வாசிகளால் தானாக முன்வந்து விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்டன அல்லது அவர்களிடமிருந்து விடுதலைப்புலிகளால் பலவந்தமாக எடுத்துச் செல்லப்பட்டன என்பது முன்னர் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது, மேலும் இந்த விஷயங்களைக் கண்டறிய விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.


# இராணுவத்தினர் வசமுள்ள காணிகளின் விடுவிப்புக்கள் தொடர்பான முன்னேற்றங்கள் எவ்வாறு உள்ளது?

பாதுகாப்புத் தரப்பினர் வசமுள்ள காணிகளின் விடுவிப்புக்கள், அது தொடர்பான முன்னேற்றம் எவ்வாறுள்ளது என்பது தொடர்பில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் மற்றும் பொருளாதார விடயங்களுக்குப் பொறுப்பான செயலர் அந்தோனி பெர்னார்ட்டி தலைமையிலான குழுவினர் வடக்கு ஆளுநரிடம் கேட்டறிந்துகொண்டனர்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் 23 செப் 2025 செவ்வாய்க்கிழமை அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் குழுவுக்கும் ஆளுநருக்கும் இடையிலான சந்திப்பு நடைபெற்றது. வடக்கு மாகாணத்தின் நிலைமைகள் தொடர்பில் அறிந்து கொள்வதற்காக வந்துள்ளதாகவும், பல தரப்பினரையும் சந்தித்துள்ளதாகவும் அமெரிக்கத் தூதரகத்தின் செயலர் குறிப்பிட்டார்.

பாதுகாப்புத் தரப்பினர் வசமுள்ள காணிகளின் விடுவிப்புக்கள் அது தொடர்பான முன்னேற்றம் மற்றும் எதிர்கால காணி விடுவிப்புக்கள் உள்ளிட்ட விபரங்கள் தொடர்பில் ஆளுநரிடம், தூதரக அதிகாரி கேட்டறிந்துகொண்டார்.

மக்களின் காணிகள் மக்களுக்கே என்ற அரசாங்கத்தின் கொள்கை அடிப்படையில் படிப்படியாக காணிகள் விடுவிக்கப்பட்டு வருகின்றன என ஆளுநர் சுட்டிக்காட்டினார். கடந்த காலங்களில் முன்னைய ஆட்சியாளர்களால் மக்களுக்குச்



சொந்தமான காணிகள், வயல் நிலங்கள் என்பன வன வளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களம் என்பனவற்றால் வர்த்தமானி மூலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமையை எடுத்துக் கூறிய ஆளுநர் இது திட்டமிட்ட நடவடிக்கை எனவும் குறிப்பிட்டார். தற்போதைய அரசாங்கம் அவற்றை விடுவிப்பதற்காக எடுத்துள்ள முயற்சிகளையும் விவரித்தார்.

கடந்த கால அரசாங்கங்களால் முன்னெடுக்கப்பட்ட பாகுபாடான நடவடிக்கைகளால் ஏற்பட்ட பிரச்சினைகளின் தாக்கம் தற்போதும் எதிரொலிப்பதாகக் குறிப்பிட்ட ஆளுநர் மிகச் சவாலான நிலையிலும் அதனைத் தீர்ப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

# பாலஸ்தீனத்தை அங்கீகரித்த 5 முக்கிய மேற்குலக நாடுகள்

காசா போரினால் ஏற்பட்ட விரக்தி மற்றும் இரு நாடுகளிடையேயான தீர்வை ஊக்குவிக்கும் நோக்கில், இங்கிலாந்து, பிரான்ஸ் கனடா, அவுஸ்திரேலியா மற்றும் போர்ச்சுகல் ஆகிய நாடுகள் பாலஸ்தீன அரசை அங்கீகரித்தன.

இது இஸ்ரேலிடமிருந்து கடுமையான எதிர்வினையைத் தூண்டியது. பாரம்பரியமாக இஸ்ரேலுடன் கூட்டணி வைத்துள்ள மேற்கத்திய நாடுகளின் ஐந்து நாடுகள் எடுத்த முடிவு,

ஆக்கிரமிக்கப் பட்ட பிரதேசங்களிலிருந்து ஒரு சுதந்திர தாயகத்தை உருவாக்குவதற்கான பாலஸ்தீனியர்களின் விருப்பத்தை ஆதரிக்கும் 140 க்கும் மேற்பட்ட நாடுகளுடன் அவர்களை இணைத்துக் கொண்டது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இஸ்ரேல் ஒரு நவீன தேசமாக உருவாவதில் அதன் முக்கிய பங்கைக் கருத்தில் கொண்டு இங்கிலாந்தின் முடிவு குறிப்பிட்ட அடையாளத்தைக் கொண்டிருந்தது.

இன்று பாலஸ்தீனியர்களுக்கும் இஸ்ரேலியர்களுக்கும் அமைதிக்கான நம்பிக்கையையும், இரு நாடு தீர்வுக்கான நம்பிக்கையையும் புதுப்பிக்க, ஐக்கிய இராச்சியம் பாலஸ்தீன அரசை முறையாக அங்கீகரிக்கிறது என்று பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் கூறினார்.

காசாவில் ஏற்பட்டுள்ள மனிதாபிமான நெருக்கடி புதிய ஆழங்களை எட்டுகிறது. இஸ்ரேலிய அரசாங்கத்தின் காசா மீதான இடைவிடாத, அதிகரித்து வரும் குண்டுவீச்சு தாக்குதலால் உண்டான பட்டினி, பேரழிவு முற்றிலும் சகிக்க முடியாதவை.

இந்த வாரம் நியூயோர்க்கில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையில் பிற நாடுகளும் இதைப் பின்பற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும் இங்கிலாந்து பிரதமர் கூறினார்.

மேலும், ஐக்கிய இராஜ்ஜியத்தின் முடிவை உறுதிப்படுத்த ஸ்டார்மர் அப்பாஸுக்கு கடிதம் எழுதினார். அதில், 1917 ஆம் ஆண்டில் லண்டன் ஒரு யூத தாயகத்தை ஆதரித்ததாகவும், அதே நேரத்தில் யூதரல்லாத சமூகங்களின் உரிமைகளைப் பாதுகாப்பதாகவும் உறுதியளித்ததாகவும் சுட்டிக் காட்டினார்.

இதனிடையே இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இந்த நடவடிக்கையை கண்டித்தார். ஒக்டோபர் 7 ஆம் திகதி நடந்த கொடூரமான படுகொலைக்குப் பின்னர், பாலஸ்தீன அரசை அங்கீகரிக்கும் தலைவர்களுக்கு எனக்கு ஒரு தெளிவான செய்தி உள்ளது:

நீங்கள் பயங்கரவாதத்திற்கு மிகப்பெரிய வெகுமதியை வழங்குகிறீர்கள். பாலஸ்தீன போராளிக் குழுவான ஹமாஸின் 2023 தாக்குதலானது, கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகால காசாவில் போரைத் தூண்டியது. மேலும் உங்களுக்கு இன்னொரு செய்தி உள்ளது.

ஜோர்தான் நதிக்கு மேற்கே ஒரு பாலஸ்தீன அரசு நிறுவப்படாது என்று கூறினார். இஸ்ரேலிய கணக்கெடுப்புகளின்படி, இஸ்ரேல் மீதான ஹமாஸ் தலைமையிலான தாக்குதலில் 1,200 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 251 பேர் பணயக்கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர்.

காசாவில் இஸ்ரேலின் தொடர்ச்சியான நடவடிக்கை 65 ,000க்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்களைக் கொன்றது. அவர்களில் பெரும்பாலோர் பொது மக்கள் என்று உள்ளூர் சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். எவ்வாறெனினும், ஹமாஸ் இந்த நடவடிக்கையை வரவேற்றுள்ளது.

ஆனால் காசாவில் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும், மேற்குக் கரையை இஸ்ரேல் இணைப்பதைத் தடுப்பதற்கும் நடைமுறை நடவடிக்கைகளுடன் இது இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

பாலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ், அங்கீகாரம் பாலஸ்தீன அரசு இஸ்ரேல் அரசுடன் பாதுகாப்பு, அமைதி மற்றும் நல்ல அண்டை வீட்டாருடன் இணைந்து வாழ வழி வகுக்கும் என்று கூறினார்.

# வடக்கில் காணி விடுவிப்பினை அரசியல் மயப்படுத்த இடமளியோம்!

## அபிவிருத்திக் கூட்டத்தில் - ஸ்ரீதரனுக்கு அமைச்சர் பிமல் சாட்டையடி!



வடக்கில் யுத்த காலத்தில் பாதுகாப்பு நோக்கங்களுக்காகவே அரசாங்கத்தால் மக்களின் காணிகள் கையகப்படுத்தப்பட்டன. இந்த விவகாரத்தை அரசியல் அனுகூலங்களைப் பெறும் நோக்கில் பயன்படுத்த இடமளிக்கப்பட மாட்டாது. வடக்கில் பெரும்பான்மையான மக்கள் ஏனைய கட்சிகளை விட தேசிய மக்கள் சக்திக்கே வாக்களித்திருக்கின்றனர். எனவே அவர்கள் தொடர்பில் ஏனைய கட்சிகளை விட எமக்கு பொறுப்புக்கள் அதிகம் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் கீழ் கடந்த 18 செப் 2025 வியாழக்கிழமை கூட்டப்பட்ட யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போது, வடக்கில் காணி விடுவிப்பு குறித்து பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீதரன் கேள்வியெழுப்பிய போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் எஸ்.ஸ்ரீதரன் கேள்வியெழுப்பிய போது அமைச்சர் பிமல் ரத்நாயக்கவுக்கும் அவருக்கும் வாய்த் தர்க்கம் ஏற்பட்டது. ஸ்ரீதரன் உரத்த குரலில் கேள்வியெழுப்பிய போது, பதிலளித்த அமைச்சர் பிமல், 'எனக்கு உங்களை விட உரத்த குரலில் பேச முடியும். உங்களுக்கு தேவையான பிரசாரம் கிடைத்து விட்டென நினைக்கின்றேன். எனவே தற்போது நான் கூறுவதைக் கேளுங்கள்.' என்றார்.

காணி விடுவிப்பு தொடர்பில் அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில், அரசாங்கம் காணிகளை விடுவிக்க வேண்டும் என்று சுமந்திரன் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகின்றார்.

அரசாங்கம் எங்குமே நேரடியாகச் சென்று காணிகளை விடுவிப்பதில்லை. இந்த காணி பிரச்சினையை நாம் அரசியல் இலாபங்களுக்காக பயன்படுத்தப் போவதில்லை. 30 ஆண்டுகள் மூடப்பட்டிருந்த வீதிகளை நாம் திறந்திருக்கின்றோம். அதற்காக நாம் கொண்டாட்ட நிகழ்வுகளை ஏற்பாடு செய்யவில்லை.

இராணுவ கட்டளைத் தளபதிகளால் காணி உரிமங்கள் மாவட்ட அதிபர்களிடம் வழங்கப்பட்டுள்ளன. அவற்றைக் கொண்டு நாம் பிரசாரங்களை முன்னெடுக்கவில்லை.

அந்த காலப் பகுதியில் பாதுகாப்பு காரணிகளுக்காகவே மக்களின் இடங்கள் அரசாங்கத்தினால் கையகப்படுத்தப்பட்டன. இவ்வாறு பாதுகாப்பு காரணிகளுக்காக கையகப்படுத்தப்பட்ட காணிகளை பாதுகாப்பு தேவை இல்லாபட்சத்தில் மீளக் கையளிக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியிருக்கின்றார்.

அவ்வாறு காணிகளை விடுவிப்பதற்கு வைபவங்களை ஏற்பாடு செய்ய வேண்டிய தேவை கிடையாது. நாம் அவ்வாறு செய்யாத நிலையில், சிலர் சென்று எம்மால் தான் காணி விடுவிக்கப்பட்டது எனக் கூறிக் கொண்டிருக்கின்றனர். வடக்கிலுள்ள மக்கள் தேசிய மக்கள் சக்தி அதிகளவில் வாக்களித்திருக்கின்றனர்.

## கனடாவில் பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டில் 15வயது சிறுவன் பலி!



கனடாவில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் 15 வயது சிறுவன் கொல்லப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. கனடாவின் க்யுபெக் மாகாணம், லோங்குவெயில் பகுதியில் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது. பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் 15 வயது நூரான் ரெசாய் உயிரிழந்த சம்பவம் சமூகத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சிறுவனின் தந்தை ஷரிப் ரெசாய், மகன் எந்த தவறும் செய்யவில்லை எனக் கூறி எங்களுக்கு நீதி வேண் டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார். என் மகன் எப்போதும் சிரித்துப் பிறரைக் கவர்ந்த பையன். அவர் குழந்தை மட்டுமே. இந்தக் கொலை நியாயமல்ல என தந்தை தெரிவித்துள்ளார். புத்தக பையை வைத்திருந்த மாணவன் மீது ஏன் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் 5 விசாரணை அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, மாண்ட்ரியால் பொலிஸாரின் உதவியுடன் சம்பவத்தை விசாரணை செய்கின்றனர்.


SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca



# மாகாணசபையை ஆட்சி செய்த போது மந்திரிமனையை மறந்திருந்தவர்கள் மாகாணசபைத் தேர்தலுக்கு அழுகிறார்கள்

கட்டுரையாளர்:- பனங்காட்டான்

கிடைக்கும் சந்தர்ப்பத்தை முறையாகப் பயன்படுத்தி தமிழரின் வரலாற்றுச் சின்னங்களை பேணிப்பாதுகாக்க அமைச்சர்கள் ஓடிவரும் நிலை தொடருமானால் மாகாண சபைக்கு தேர்தல் நடைபெறின் அதிலும் அவர்களின் கரங்களே பலமடையும் நிலை இலகுவாகும்.

தேர்தல் காலங்கள் போன்று தெற்கிலிருந்து அமைச்சர்கள் தமிழ்ப் பகுதிகளுக்கு விஜயம் மேற்கொள்வது இப்போது வாராந்த நிகழ்வாகியுள்ளது. அதற்கும் மேலாக அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் வடக்கில் அநேகமாக தினமும் ஒரு நிகழ்விலாவது பங்கு பற்றி வருகிறார். அவரோடு தேசிய மக்கள் சக்தியின் தமிழ் எம்.பிக்களும் கலந்து கொள்கிறார்கள்.

கறுப்புக் கொடி காட்டி சிங்கக் கொடியை எரித்து அமைச்சர்களை தமிழர்கள் வரவேற்ற காலம் போய் விட்டது. 1958ல் பண்டாரநாயக்க அரசில் அமைச்சராகவிருந்த ஏ.பி.ஜெயசூரியாவின் யாழ்ப்பாண விஜயம் பிரபல்யமானது. அவர் பயணம் செய்த வாகனத்தின் முன்னால் வீதியில் சிங்கக் கொடியை எரித்த பல தமிழ் இளைஞர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டு நையப்புடைக்கப்பட்டது 1961ம் ஆண்டு சத்தியாக்கிரகத்துக்கு முக்கியத்துவம் பெற்றுக் கொடுத்தது.

அந்தக் காலம் இப்போது முழுமையாக மாறி விட்டது. ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் என்பவர்கள் கொழும்பிலிருந்து தரை வழியாக வாகனத்தில் யாழ்ப்பாணம் வந்து போகிறார்கள். ஆட்சியாளர்களின் ஆதரவாளர்கள் தமிழ் பிரதேசங்களின் அபிவிருத்திகளை தீர்மானிப்பவர்களாகவும், அரச நிர்வாகக் கூட்டங்களுக்கு தலைமை தாங்குபவர்களாகவும் இன்றுள்ளனர்.

முள்ளிவாய்க்காலுக்குப் பின்னரான காலப்பகுதி எதிர்பாராத பல மாற்றங்களை கண் முன்னால் காட்டி நிற்கிறது. இலங்கைத் தமிழர்களின் தலைவர் யார் என்பது தெரியாமல் இருப்பதானது இந்த மாற்றங்களில் முக்கியமானது.

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவை ஆதரிக்க தமிழரசுக் கட்சி எடுத்த முடிவு, முகம் காட்டாத இன்னொரு தரப்பினர் மறைந்திருந்து ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்தது, தமிழர்களின் அடையாளத்தை வெளிப்படுத்த பொதுவேட்பாளரை நிறுத்திய போது அதனை தமிழ்த் தேசிய கட்சிகளே எதிர்த்தது என்பவை தமிழர்களுக்கு ஒரு தலைவர் இல்லையென்பதை பகிரங்கமாக எடுத்துக் காட்டிய சில.

ஜனாதிபதி தேர்தலில் அநுர குமர வெற்றி பெறுவாரென்று தமிழர் தரப்பில் எந்தவொரு அணியினரும் கற்பனை பண்ணிக் கூட பார்க்கவில்லை. தொடர்ந்து வந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர் தரப்பு தோல்வியைக் கண்டது. இதன் பலனாக வடக்கு கிழக்கின் சகல மாவட்டங்களிலிருந்தும் அநுர குமரவின் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் தெரிவாகினர். இதுகூட தமிழ்த் தேசிய கட்சிகள் எதிர்பார்க்காதது தான். இறுதியில் இடம்பெற்ற உள்ளாட்சித் தேர்தலையும் தேசிய மக்கள் சக்தி விட்டு வைக்கவில்லை. இப்போது மாகாண சபைத் தேர்தலை நோக்கி எம்மவர்கள் கோசம் எழுப்புகின்றனர். காணி அதிகாரம், காவற்துறை அதிகாரம் இல்லாத இச்சபைகளின் கதிரைகளில் ஏறி அமர்வதற்கு ஏற்பட்டுள்ள பதவி ஆசையின் வெளிப்பாடு இது.

1987ல்ஜே.அர்.ஜெயவர்த்தனவும், ராஜிவ் காந்தியும் இணக்கத்துக்கு வந்த இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் 13ம் திருத்தமும், மாகாண சபை முறைமையும் அங்கீகாரம் பெற்றன. இதன் அடிப்படையில் வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாண சபைக்கான தேர்தல் 1988 நவம்பரில் இடம்பெற்றது. வடக்கு கிழக்கு இணைப்பை எதிர்த்து ஜே.வி.பி. (அநுர குமரவின் தாய்க்கட்சி) 2006ல் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மூன்று மனுக்களின் அடிப்படையில் இணைப்பு ரத்துச் செய்யப்பட்டது.

அதற்குப் பின்னர் வடமாகாண சபைக்கு ஒரேயொரு முறை தேர்தல் நடைபெற்றது. இதற்கென கொழும்பிலிருந்து இறக்கப்பட்ட நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் வடக்கு மாகாண சபை அமைக்கப்பட்டது. தமிழரசுக் கட்சியின் தலைமையிலான தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மொத்தம் 30 உறுப்பினர்களை இதில் பெற்றது. ஐக்கிய மக்கள் சுதந்திர அணி 7 ஆசனங்களையும், முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஓர் ஆசனத்தையும் பெற்றன. ஆறில் ஐந்துக்கும் மேலான வெற்றியை பெற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அதனால் ஆக்கபூர்வமான எதனையும் நிறைவேற்ற முடியவில்லை.

முதலமைச்சர் விக்கினேஸ்வரனுக்கு எதிராக சுமந்திரன் தலைமையிலான அணி முன்னெடுத்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் மட்டுமே நினைவில் இருக்கக்கூடிய ஒரு சாதனை. அப்போது கட்சியின் தலைவராக விருந்த இரா.சம்பந்தன் இதனை நிராகரித்ததால் சுமந்திரனின் முயற்சி கைகூடாது போனது என்றே கூற வேண்டும்.

இத்தனை விடயங்களையும் இப்போது மீண்டும் நினைவு கூருவதற்கான காரணம், அதே வடமாகாண சபையின் முதலமைச்சராக அடுத்த தேர்தலில் தாம் போட்டியிடவிருப்பதாக சுமந்திரன் தமது விருப்பத்தை தெரியப்படுத்தியிருப்பதும், இதற்காகவே மாகாண சபைத் தேர்தலை தாமதிக்காது நடத்த வேண்டுமென தமிழரசுக் கட்சி தொடர்ந்து கருத்து வெளியிட்டு வருவதும் இப்போது பேசுபொருளாக இருப்பதால்.

வடக்கு மாகாண சமையை சுட்டி சில விடயங்களை எழுதும் பொழுது, நெஞ்சில் முள் குத்துவது போன்ற வேதனையைத் தருவது நல்லூர் மந்திரிமனையின் இன்றைய நிலை. யாழ்ப்பாணம் நல்லூரை இராசதானியாகக் கொண்டு தமிழ் மன்னர்



அரசாட்சி புரிந்ததின் அடையாளமாக இருப்பவைகளில் முக்கியமானது இந்த மந்திரிமனை. பருத்தித்துறை வீதியில் நல்லூர் முத்திரைச் சந்திக்கும் சட்டநாதர் சுவாமி கோவிலுக்கும் இடையில் யமுனா வீதிக்கு முன்பாக இந்த மந்திரிமனை கட்டிடம் உள்ளது.

பராமரிப்பின்மையால் இடிந்து விழக்கூடிய நிலைமையில் பல காலமாக இந்தக் கட்டிடம் இருந்துள்ளது. கட்டிடத்தின் பல இடங்களில் வெடிப்புகள் காணப்பட்டன. கட்டிடத்தோடு சம்பந்தப்பட்ட பல பொருட்கள் களவாடப்பட்டுள்ளன. போர்க்கால குண்டுவீச்சுகள், விமானத் தாக்குதல்களால் இக்கட்டிடத்துக்கும் தாக்கம் ஏற்பட்டது.

தமிழர் தேசத்தின் பாரம்பரிய சின்னமாக பேணப்பட்டு வந்த மந்திரிமனையைச் சுற்றி இராச வீதி, இராணி வீதி, குமார வீதி, சங்கிலியன் வீதி, யமுனா வீதி, பண்டாரக்குளம் வீதி, இராச பாதை என்பன உள்ளன. யாழ்ப்பாணம் மாநகர சபை தற்காலிகமாக அமைந்துள்ள பண்டார வளவும் இதற்கு அருகில் தான் உள்ளது.

யாழ்ப்பாண இராசதானியின் ஞாபகார்த்தமாக விளங்கும் மந்திரிமனை பாதுகாக்கப்பட வேண்டிய சின்னமாக 2011ல் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டது. இந்தப் புராதன கட்டிடத்தை புனரமைக்கவும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தொல்பொருள் துறைசார் அதிகாரிகள், உள்ளாட்சித் துறை ஆர்வலர்கள், பொதுத்தொண்டு நிறுவன பிரதிநிதிகளைக் கொண்ட குழுவும் இவ்விடயத்தில் ஆர்வம் காட்டியது. சிறுசிறு பாதுகாப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால், மந்திரிமனை அமைந்துள்ள காணி தனியார் ஒருவருக்குச் சொந்தமாக இருந்தமையால் அவரது அனுமதியின்றி எதனையும் தொடர முடியாத நிலையால் அனைத்தும் முடக்க நிலைக்கு வந்தன.

வடக்கு மாகாணத்தில் மாகாண சபை ஆட்சி நடைபெற்ற காலத்தில் இந்தக் கட்டிடத்தை ஏன் அவர்கள் கவனிக்கவில்லையென்ற கேள்வி பலரிடம் உள்ளது. 38 உறுப்பினர்களைக் கொண்ட இச்சபையில் 30 உறுப்பினர்கள் தமிழரசுக் கட்சியை தலைமையாகக் கொண்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகளாக இருந்தும் இவ்விடயத்தில் அவர்கள் பாராமுகமாக ஏன் இருந்தனர் என்பது கூட பலர் மனதையும் குடைந்து கொண்டிருக்கிறது.

வடமாகாண சபையின் தலைவராக விருந்தவர் உயர் நீதிமன்ற நீதியரசராகவிருந்த சி.வி.விக்கினேஸ்வரன். இப்பதவிக்கு வருவதற்கு முன்னர் பல மாவட்டங்களில் நீதிபதியாக இருந்ததோடு இலங்கை சட்டக்கல்லூரியில் விரிவுரையாளராகவும் இருந்தவர். சங்கிலி மன்னன் ஆட்சியோடு சம்பந்தப்பட்ட மந்திரிமனை கட்டிடத்தை புனரமைக்க வேண்டியதன் அவசியத்தை ஏன் இவர் மறந்திருந்தார் என்பது கூட பலருக்கும் புரியாதுள்ளது.

வடமாகாண சபை இயங்கிய காலத்திலிருந்து இன்றுவரை இதன் அக்கிராசனராகப் பதவி வகிப்பவர் திரு. சி.வி.கே.சிவஞானம். பல வருடங்கள் யாழ்ப்பாணம் மாநகரசபையின் நிர்வாகியாக, ஆணையாளராக, விசேட ஆணையாளராக பதவி வகித்தவர். மந்திரிமனை காணிக்கு முன்னால் ஒரு கூப்பிடு தூரத்தில் இவரது இல்லம் அமைந்துள்ளது. இவை அனைத்துக்கும் மேலாக வடமாகாண சபையை நிர்வகித்து வந்த தமிழரசுக் கட்சியின் மூத்த துணைத்தலைவராக பதவி வகித்து வந்தவரும் இவரே.

தினமும் வீட்டிலிருந்து புறப்பட்டு வெளியே செல்லும்போது மந்திரிமனையை தரிசிக்காது இவரால் பயணித்திருக்க முடியாது. மாகாண சபையின் உறுப்பினராக மக்களால் தெரிவு செய்யப்பட்டு அக்கிராசனராக பதவி (22ம் பக்கம் பார்க்க)

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

13 செப்டம்பர் 2025 முதல் 19 செப்டம்பர் 2025 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திருமதி சோமசுந்தரம் சின்னத்தங்கம்

புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி வே.க.சோமசுந்தரம் சின்னத்தங்கம் அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 03ஒக்டோபர் 2025 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி வே.க.சோமசுந்தரம் சின்னத்தங்கம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சண்முகம் முத்துலிங்கம்

யாழ்ப்பாணம் மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சண்முகம் முத்துலிங்கம் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 15 செப்டம்பர் 2025 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சண்முகம் முத்துலிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது மனைவி பிள்ளைகளுடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## மஹாலய விரத உபயம்



### திரு சிவகுமாரன் சிவப்பிரகாசம்

மண்டைதீவு 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சிவகுமாரன் சிவப்பிரகாசம் அவர்களதும் அவரது முன்னோர்களது நினைவாகவும் 22 செப்டம்பர் 2025 திங்கட்கிழமை அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு சிவகுமாரன் சிவப்பிரகாசம் அவர் களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்ட வனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு வேலுப்பிள்ளை பரமலிங்கம்

வேலணையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு வேலுப்பிள்ளை பரமலிங்கம் அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாள் 26 செப்டம்பர் 2025 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு வேலுப்பிள்ளை பரமலிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு இராஜதுரை ஈஸ்வரபாதம்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த முன்னாள் அஞ்சல் நிலைய உத்தியோகத்தர் திரு இராஜதுரை ஈஸ்வரபாதம் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாள் 13 செப்டம்பர் 2025 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு இராஜதுரை ஈஸ்வரபாதம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்தி க்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 13வது, 25வது ஆண்டு நினைவஞ்சலி

### திரு செல்லர் மார்க்கண்டு

### திருமதி மனோன்மணி மார்க்கண்டு



யாழ்ப்பாணம் சித்தன்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்களான திரு செல்லர் மார்க்கண்டு அவர்களது 13வது ஆண்டு நினைவு நாளையும் திருமதி மனோன்மணி மார்க்கண்டு அவர்களது 25வது ஆண்டு நினைவு நாளையொட்டியும் 27 செப் 2025 சனிக்கிழமை அன்னாரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அமரர் திரு செல்லர் மார்க்கண்டு, திருமதி மனோன்மணி மார்க்கண்டு இணையர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



13 செப்டம்பர் 2025 சனிக்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு இராஜதுரை ஈஸ்வரபாதம் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



11 செப்டம்பர் 2025 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் சாயி பக்தரும் ஆன்மீகப் பற்றாளருமான திரு திருமதி மகேந்திரா பிரபா இணையர்களது 30வது திருமண நன்நாளாகும். அன்றைய நாளுக்காக இணையர்கள் 14 செப்டம்பர் 2025 ஞாயிற்றுக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்புணவும் இனிப்பும் வழங்கி மகிழ்ந்தார்கள்.



15 செப்டம்பர் 2025 திங்கட்கிழமை மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சண்முகம் முத்துலிங்கம் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



17 செப்டம்பர் 2025 புதன்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



20 செப்டம்பர் 2025 சனிக்கிழமை கனடாவில் வாழும் திரு அருள் எஸ்.அருளையா குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



21 செப்டம்பர் 2025 ஞாயிற்றுக்கிழமை சாமியான் அரசடி கரவெட்டியைச் சேர்ந்தவர்களான திரு திருமதி இராஜதுரை மாணிக்கம் இணையரது நினைவாக கனடாவில் வாழும் அவர்களது பிள்ளைகள் மஹாலய விரத உபயமாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



21 செப்டம்பர் 2025 ஞாயிற்றுக்கிழமை மஹாலய விரதநாள் ஆகும். அன்றையதினம் கனடாவில் வசிக்கும் திரு திருமதி இராமதாசன் விஜயஸ்ரீ இணையர்கள் தமது முன்னோர்களை நினைவு கூர்ந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



21 செப்டம்பர் 2025 ஞாயிற்றுக்கிழமை புரட்டாதி அமாவாசை தினமாகும். அன்று ஊரெழு கிழக்கைச் சேர்ந்த திருமதி நல்லையா சிவபாக்கியவதி அவர்களது 58வது ஆண்டு நினைவு நாளுமாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



22 செப்டம்பர் 2025 திங்கட்கிழமை மஹாலய விரத உபயமாக மண்டைதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சிவகுமாரன் சிவப்பிரகாசம் அவர்களை நினைவு கூர்ந்து அன்னாரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



23 செப்டம்பர் 2025 செவ்வாய்க்கிழமை கனடாவில் வாழும் Miss Aarnaa Arankan அவர்கள் தனது தாய் தந்தை மற்றும் பேரன் பேத்தியுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



24 செப்டம்பர் 2025 புதன்கிழமை பிரான்ஸை வாழ்விடமாகக் கொண்டிருக்கும் திரு கபாலீஸ்வரன் தம்பிராஜா அவர்கள் பூரண உடல் நலம் பெற்று வீடு திரும்ப இறைவனிடம் அருளாசி வேண்டிய உபயமாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்



26 செப்டம்பர் 2025 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி டிலக்சினி நிரஞ்சன் அவர்களது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி டிலக்சினி நிரஞ்சன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



26 செம்படம்பர் 2025 வெள்ளிக்கிழமை வேலணையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு வேலுப்பிள்ளை பரமலிங்கம் அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்









# வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

## NEW LIFE FRESH START


Save **80%**

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  Glve you solutions without bankruptcy.

CRC CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

**Suren Sornalingam BBA**
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation

Over 20 Years Experience in the field of Insolvency



Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca

# எதனை எதிர்பார்க்கிறது இந்தியா?

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கடந்த 8ஆம் திகதி உரையாற்றிய இந்தியப் பிரதிநிதி அனுபமா சிங், மாகாண சபைகளுக்கு விரைவாகத் தேர்தலை நடத்த வேண்டும் என்றும், அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை உறுதி செய்ய வேண்டும் என்றும், அரசியலமைப்பை முழுமையாக நடை முறைப்படுத்த வேண்டும் என்றும் இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்தியிருந்தார்.

கடந்த 11 ஆண்டுகளாக எந்தவொரு மாகாண சபைக்கும் தேர்தல் நடத்தப் படாத நிலையில் கிட்டத்தட்ட மாகாண சபை கட்டமைப்பை ஒரு வெள்ளை யானையாக, பயனற்ற ஒன்றாக மக்கள் மத்தியில் கொண்டு செல்வதில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் கணிசமாக முன்னேறியிருக்கின்றன.

தற்போதைய அரசாங்கத்துக்கும் கூட மாகாண சபைத் தேர்தல்களை



நடத்தும் நோக்கம் இல்லை. அதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

ஒன்று, 13ஆவது திருத்தச் சட்டத்தையும், மாகாண சபைக் கட்டமைப்பையும், தற்போதைய அரசாங்கத்தின் தாய்க்கட்சியான ஜே.வி.பி. ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்கு எதிராக தனது இரண்டாவது ஆயுதக் கிளர்ச்சியை நடத்திய கட்சி அது.

இரண்டு இப்போதைய அரசாங்கத்தின் செல்வாக்கை மீண்டும் ஒரு முறை உரசிப் பார்க்கும் முயற்சியை அது விரும்பவில்லை.

உள்ளூராட்சித் தேர்தலில் அரசாங்கத்தின் செல்வாக்கு குறையத் தொடங்கி விட்டது தெளிவாகத் தெரிந்த நிலையில் மாகாண சபைத் தேர்தலின் மூலம் அதனை நிரூபிப்பது, ஆட்சியில் உள்ள அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையையும் பலத்தையும் குறைத்து விடும் என்ற அச்சம் அதற்கு இருக்கிறது. எனவே தற்போதைய அரசாங்கமும் மாகாண சபைத் தேர்தல்களை பிற்போடுவதிலேயே கவனம் செலுத்துகிறது.

இந்தநிலையில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஜெனிவாவில் இந்தியா, மாகாண சபைத் தேர்தல்களை உடனடியாக நடத்துமாறு வலியுறுத்தியதைப் போலவே இந்த முறையும் வலியுறுத்தியிருக்கிறது.

அதற்கு அப்பால் இந்தியா என்ன செய்யப் போகிறது என்பது தான் கேள்வி.

மாகாண சபைக் கட்டமைப்பை வெள்ளை யானை திட்டமாக அடையாளப்படுத்தி அதனை இல்லாமல் செய்யும் உயர்மட்டச் சூழ்ச்சி கொழும்பில் முன்னெடுக்கப்படுவதை இந்தியா உணராமல் இருக்க முடியாது.

2015இல் மஹிந்த ராஜபக்ஷவின் தோல்வியை, 2019இல் கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றியை 2024இல் அநுரகுமார திசாநாயக்கவின் வெற்றியை மாத்திரமன்றி, 2019இல் ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலையும் கூட முன்கூட்டியே கணித்திருந்த, அறிந்திருந்த இந்தியாவுக்கு, மாகாண சபைகள் படிப் படியாகத் திட்டமிட்டுச் சாகடிக்கப்பட்டுக் கொண்டிருப்பது தெரியாமல் இருந்தால் அது ஆச்சரியம். அதை விட இந்த கட்டமைப்பு திட்டமிட்டு சீர்குலைக்கப்படுவதை தடுக்க வேண்டும் என்ற எண்ணம் இந்தியாவுக்கு இருக்கிறதா என்பது சந்தேகம்.

ஏனென்றால், இப்போதைய ஆளும் கட்சி, 2006ஆம் ஆண்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களை உயர்நீதி மன்றத்தை நாடி பிரித்த பின்னர், அதனை மீளவும் ஒருங்கிணைப்பதற்கான முயற்சிகளை இந்தியா எடுக்கவேயில்லை. அதனை ஒரு போதும் இந்தியா கோரவில்லை என மஹிந்த ராஜபக்ஷ முன்னர் கூறியிருந்தார்.

கடந்த வாரம் தமிழ் ஊடகங்களின் பிரதானிகளைச் சந்தித்த போது ஒருங்கிணைந்த வட-கிழக்கு மாகாணத்தில், தமிழ் பேசும் மக்களுக்கான முழுமையான பிராந்திய நிர்வாகம் நிலவ வேண்டும் என்பதில் இந்தியா ஆர்வமாக இருக்கிறது என்று இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா குறிப்பிட்டிருக்கிறார். அப்படியானால் இதனை நடைமுறைப் படுத்துவதற்கு அல்லது சாத்தியப்படுத்துவதற்கு இந்தியா என்ன செய்திருக்கிறது?

1987ஆம் ஆண்டு இலங்கை தமிழர் பிரச்சினையில் தலையீடு செய்த இந்தியா, தமிழ் மக்களின் விருப்பங்கள், அபிலாசைகள் என்ன என்பதை கேட்டறிந்து கொள்ளாமலேயே, தன்னிச்சையாக 13ஆவது திருத்தம், மாகாண சபைகள் போன்றவற்றை தீர்வாக திணித்தது. அதனை விடுதலைப் புலிகள் மாத்திரம் நிராகரிக்கவில்லை.

அப்போது மிகப் பெரிய தமிழ் மிதவாதக் கட்சியாக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கமும் கூட, மாகாண சபைகளை தீர்வாக ஏற்றுக் கொள்ள முடியாதென அறிவித்திருந்தார்.

அது மாத்திரமன்றி, முதலாவது வட-கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ். கூட, மாகாண சபைகளை தமிழர் பிரச்சினைக்கான இறுதித் தீர்வாக ஏற்றுக் கொள்ள முடியாதென்றே கூறியது. ஆக தமிழர் பிரச்சினைக்கு 13ஆவது திருத்தமோ, மாகாண சபைகளோ இறுதியான தீர்வல்ல. இது அனைத்து தமிழ்க் கட்சிகளினதும் அன்றைய நிலைப்பாடு மாத்திரமல்ல, இன்றைய நிலைப்பாடாகவும் உள்ளது.

ஏனென்றால் அதற்கு அப்பாற்பட்ட மீளப் பெறப்பட முடியாத அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட ஒரு சமஷ்டித் தீர்வையே, தமிழர்கள் எதிர்பார்த்தனர், எதிர்பார்க்கின்றனர்.

இதுவும் இந்தியாவுக்குத் தெரியும். இதனை பலமுறை தமிழ்த் தலைவர்கள் இந்தயாவுக்கு எடுத்துக் கூறியும் விட்டனர். ஆனாலும், 1987ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தியாவில் ஆட்சியில் இருந்த ஒவ்வொரு அரசாங்கமும், தமிழர் பிரச்சினைக்



கான இறுதித் தீர்வாகவே 13 ஆவது திருத்தச் சட்டத்தையும், மாகாண சபைகளையும் அறிவித்து வந்தன.

அதற்கு பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசாங்கமும் விதிவிலக்கல்ல. அதனைப் பலமுறை இந்திய தலைவர்கள், அமைச்சர்கள், இராஜதந்திரிகள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

அது மாத்திரமன்றி, தமிழ்மக்களின் அபிலாஷைகளான சமத்துவம், நீதி மற்றும் கௌரவமான அரசியல் தீர்வை அடைவதற்கு இந்தியா எப்போதும் துணை நிற்கும் என, இந்தியப் பிரதமர் மோடி பலமுறை உறுதியாக கூறியிருக்கிறார்.

அப்படியானால் இந்தியா தமிழர்களுக்கான தீர்வு என சுட்டிக்காட்டும் 13 ஆவது திருத்தச்சட்டம் பலவீனப்படுத்தப்படும் போதும் மாகாண சபைகள் செயலற்றதாக்கப்படும் போதும், பராமுகமாக இருந்திருக்க முடியாது. உரிய நேரத்தில் தலையிட்டிருக்கும். ஏனென்றால் அது இந்தியாவின் கடப்பாடு.

தமிழர்களின் சமத்துவம், நீதி, கௌரவமான வாழ்வு என்பனவற்றை உறுதி செய்யும் கடப்பாடு தமக்கு இருப்பதாக கூறிக் கொண்டது இந்தியா தான். அப்படியானால் அந்தக் கடப்பாட்டை இந்தியா நிறைவேற்றியிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்திருக்கவில்லை.

அல்லது இந்தியா அவ்வாறு வலியுறுத்தியதை இலங்கை செவிமடுக்கவில்லை.

மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு ஒவ்வொரு முறையும் இலங்கைத் தலைவர்களைச் சந்திக்கும் போதும் கூறுகிறோம், அவர்களும் மறுப்புக்கூறாமல் தலையாட்டி விட்டுச் செல்கிறார்கள், ஆனால், ஒன்றும் நடப்பதாக இல்லை என, இந்தியத் தூதுவர் ஒருமுறை யாழ்ப்பாணத்தில் கூறியிருந்தார்.

நிலைமை அப்படியிருக்க இப்போது இந்தியத் தூதுவர் தமிழ்க் கட்சிகள் ஒன்றாக நிற்கவில்லை, அதனால் தான் இந்தியாவினால் மாகாண சபைகள் தொடர்பாக இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க முடியவில்லை என்பது போல கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

தமிழ்க் கட்சிகள் ஒன்றாக- எழுத்து மூலம் கோரினால் இந்தியாவினால் காத்திரமான நடவடிக்கையை எடுக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

மாகாண சபைகள் விடயத்தில், தமிழ்க் கட்சிகள் மத்தியில் மாற்றுக் கருத்துக்கள் உள்ளன என்பது உண்மை. அது மாகாண சபைகளை தீர்வாக ஏற்றுக் கொள்வதில் உள்ளதே தவிர, மாகாண சபைகளை இயங்கச் செய்வது தொடர்பான விடயம் அல்ல.

குறிப்பாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி 13 ஆவது திருத்தச் சட்டம், மாகாண சபைகளை இறுதித் தீர்வாக ஏற்றுக் கொள்ளவில்லை. அதனையே இந்தியத் தூதுவர் குறிப்பாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார் என்பதை புரிந்து கொள்ள முடிகிறது.



கட்டுரையாளர்:
தமிழகத்தில் இருந்து
- கேணல் ஹரிகரன் -

ஆனால் மாகாண சபைகளுக்குத் தேர்தல் நடத்தப்பட்டால் அதில் பங்கேற்போம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன்னர் கூறியிருந்தது. அவ்வாறான நிலையில், அந்தக் கட்சி, மாகாண சபைகளை வெறுப்பதாக அல்லது அது செயற்படக் கூடாதென எதிர்ப்பதாக அர்த்தம் இல்லை.

இந்தியத் தூதுவர் இந்த விடயத்தில் தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டு இந்தியாவிடம் கோரிக்கை வைக்க வேண்டும் என எதிர்பார்க்கிறார்.

இந்தியாவில் நீண்ட காலமாக வாழ்ந்து வருபவரும், இணைந்த வடகிழக்கு மாகாண சபையின் ஒரே முதல்வருமான வரதராஜப்பெருமாள் சில வாரங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் வந்து சில சந்திப்புகளை நடத்தினார். அதன் பின்னர் அவர் சந்தித்து விட்டுச் சென்ற ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் உள்ளிட்டவர்களால், வவுனியாவில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தக் கோரும் வகையிலான ஒரு கூட்டமும் நடத்தப்பட்டது. அது மாத்திரமன்றி, மாகாண சபைத் தேர்தல்களை வலியுறுத்தும் உரை யாடல்களும், நிகழ்வுகளும் கூட இடம்பெற்றிருக்கின்றன. இவற்றின் மூலம் மாகாண சபைகளை மீளவும் இயங்க வைக்கலாம் என்ற நம்பிக்கை சிலரிடம் இருக்கிறது.

இதற்குப் பின்னால் இந்தியா இருக்கிறது என்ற நம்பிக்கையும் பரவலாக உள்ளது. இலங்கை அரசிடம் இந்தியா தனது நிலைப்பாட்டைப் பகிரங்கமாக கூற முடியும்.

ஏனென்றால், தமிழர்களின் சார்பில் 1987 இந்திய- இலங்கை அமைதி உடன்பாட்டில் கையெழுத்திட்டது இந்தியா தான். இந்தியா தான் தமிழர்களுக்கு இது தான் தீர்வு என்றும் குறிப்பிட்டது.

அப்படியிருக்க இப்போது, மாகாண சபைகள் தொடர்பாக தமிழ்க் கட்சிகள் ஒன்றாக இணைந்து கோர வேண்டும் என இந்தியா எதிர்பார்ப்பது ஏன் என்று புரியவில்லை.

மாகாணசபைகளை நிரந்தரத் தீர்வாக தமிழர்கள் தான் கோரினார்கள் என்று அடையாளப்படுத்த இந்தியா முற்படுகிறதா? அவ்வாறான ஒரு கோரிக்கை விடுக்கப்பட்டால், தமிழர்களின் உண்மையான அபிலாஷைகளை அது குழிதோண்டிப் புதைத்து விடாதா?

அதனைத் தான் இந்தியா எதிர்பார்க்கிறதா? இந்தக் கேள்விகளையெல்லாம் இத்தகைய தருணத்தில் புறக்கணித்து விட முடியாது.

# மாகாணசபைத் தேர்தலும் அநுர - சாணக்கியன் சந்திப்பும்

கட்டுரையாளர்:
- அழகு.குணசீலன் -

தமிழரசுக்கட்சியின் கடந்த வார அரசியலுக்கு சிறந்த உதாரணம் ஒரு பாலர் வகுப்பு. அதில் உள்ள இரு மாணவர்கள் சாடியும், மூடியும் போன்று நல்ல நண்பர்கள். அவர்களில் ஒருவர் சுமந்திரன், மற்றவர் சாணக்கியன். இதில் சுமந்திரனுக்கு பிமல் என்ற இன்னொரு மாணவன் ஏசி விட்டான். இது தான் பாலர் வகுப்பு களநிலை.

ஏச்சு வாங்கிய சுமந்திரன் ஆசிரியை ஆசிரியரிடம் நேரடியாக முறையிடச் செல்லவில்லை. சில வேளை 42 புள்ளிகளை பெற்று வந்தவர் என்று சொன்ன வெட்கமோ தெரியவில்லை. நண்பர் சாணக்கியனை முறையீட்டாளராக அனுப்பி வைத்தார். தமிழரசுக் கட்சியின் தலைவர் தேர்வில் இருந்து இப்படியான முறைப்பாடுகள் நீதிமன்றத்தில் குவிந்து கிடக்கின்றன. ஒருவரை முன்னுக்கு தள்ளிவிட்டு நேரடியாக சம்பந்தப்பட்டவர் அவருக்கு பின்னால் மறைந்து கொள்கின்ற தமிழரசு அரசியல் இது.

ரீச்சர், ரீச்சர் சேர், சேர்.. பிமல், சுமந்திரனுக்கு இனவாதி என்று பட்டப்பெயர் சொல்லி ஏசுறார் சேர்



என்றார் ஜனாதிபதியிடம். இங்கு கவனிக்க வேண்டியது என்னவென்றால் பிள்ளைகள் தங்களது பிரச்சினைகள் எதுவாக இருந்தாலும் இன்னொருவரூடாக அன்றி நேரடியாக பொறுப்பானவரிடம் முறையிட வேண்டும் என்பதை பாலர் வகுப்பில் இருந்து கற்றுக் கொள்கிறார்கள்.

ஆனால் நமது எம்.பி.க்கள் பாராளுமன்றத்திற்கு போயும் இதைக் கூட கற்றுக் கொள்ளவில்லை. அது மட்டும் அல்ல "எங்களை இனவாதிகள் என்று சொல்லி விட்டு இனப் பிரச்சினை தீர்வுக்கு யாரோடு பேசப் போகிறீர்கள் என்றும் ஜனாதிபதியைக் கேட்டாராம். மேலும் மாகாண சபை தேர்தல் பற்றியும் பேசியிருக்கிறார்கள். இப்போது தமிழரசு — ஜனாதிபதி சந்திப்புக்கு நாள் கேட்டு கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த 75க்கும் மேற்பட்ட அரசியல் வரலாற்றில் தமிழரசுக்கட்சி எத்தனை தடவைகள் தென்னிலங்கை தலைவர்களைப் பார்த்து இனவாதிகள் என்று கூறியிருக்கிறது. ஆகக் குறைந்தது ஒரு வருடத்தில் ஆயிரம் தடவைகள் என்றாலும் முக்கால் இலட்சத்தை தேறும்.

பயங்கரவாதி என்று சிங்கள தலைவர்களால் அழைக்கப்பட்ட விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனே வேறு வழியின்றி கொழும்பு அரசாங்கங்களோடு பேச வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. புலிகளுக்கு இருந்த ஆயுத, அரசியல் பலம் என்ன? தமிழரசுக்கட்சியின் பலம் என்ன? இந்த நிலையில் யாரோடு பேசப்போகிறீர்கள் என்று கேட்டாராம் என்று தனது அரசியல் சிறுபிள்ளைத்தனத்தை வெளிப்படுத்தி இருக்கிறார் சாணக்கியன்.

அநுர அரசாங்கத்திற்கு மாகாண சபை தேர்தல்களை நடாத்த வேண்டிய அழுத்தம் தென்னிலங்கையிலும், பிராந்திய பூகோள அரசியலிலும், ஐ.நா. சர்வதேச மட்டத்திலும் அதிகரித்துள்ளது. அரசாங்கம் மாகாண சபை தேர்தலை நடாத்தி முடிக்க விரும்பினாலும் வெளியில் கூறமுடியாத ஒரு காரணம் அதை தடுக்கிறது. அது தான் அநுரகுமார திசாநாயக்கவின் ஜே.வி.பி-என்.பி.பி. அரசாங்கம் உள்ளூராட்சி தேர்தலில் அடைந்த பின்னனைவு. சுமார் ஆறு, ஏழு மாதங்களில் சுமார்





இருபத்தைந்து இலட்சம் வாக்குகள் இழப்பு என்பதை கண்டு கொள்ளாமல் கடந்து செல்லமுடியாது. உள்ளூராட்சி தேர்தலுக்கு பின்னர் தென்னிலங்கையிலும், வடக்கு, கிழக்கிலும் அரசியல் களநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் அரசாங்கத்திற்கு சாதகமாக இல்லை. தென்னிலங்கை வாக்குச்சரிவை நிரப்ப வடக்கு, கிழக்கில் குறிவைத்து அரசாங்கம் செயற்படுகின்ற போதும் சாண் ஏற முழம் சறுக்கும் பாதகமான சூழலே அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தை பொறுத்த மட்டிலும் பொதுத்தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் சூழல் போன்று இன்றைய சூழல் அரசாங்கத்திற்கு சாதகமாக இல்லை. தமிழரசு — முஸ்லீம் காங்கிரஸ் கட்சிகளின் முரண்பாடுகளுக்கும் மத்தியிலான புரிந்துணர்வும் அரசாங்கம் மாகாணசபை தேர்தலை இழுத்தடிக்க ஒரு காரணம்.

இதற்கு மாறாக அரசாங்கமும், தமிழரசுக்கட்சியும் ரி.எம்.வி.பி. தலைவர் பிள்ளையானை உள்ளே வைத்து மாகாணசபை தேர்தலை நடாத்தினால் தங்களுக்கு சாதகமாக அமையும் என்று நம்புகின்றனர். கடந்த பாராளுமன்ற பொதுத்தேர்தலில் இந்த வெள்ளோட்டம் இரு தரப்புக்கும் சாதகமாகவே அமைந்திருந்தது. அதேவேளை 2019 இல் கற்ற பாடத்தையும் மறக்க முடியவில்லை.

இந்த நிலையில் அமைச்சரவை முடிவுகளை கடந்த வாரம் அறிவித்த அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய பதில் மேற்கூறிய பாலர் வகுப்பு அரசியலோடு ஒத்துப் போகிறது. மரணிப்பேன் ஆனால் எப்போது என்று தான் தெரியாது என்ற பாணியில் உள்ளது அமைச்சரின் பதில்.

அவர் என்ன சொல்கிறார்: மாகாண சபை சபைத்தேர்தல்களை நடாத்துவோம் ஆனால் எப்போது என்பது தான் தெரியாது இது தான் அவரது பதில். இப்படி போற இடத்திற்கும், சந்தர்ப்பத்திற்கும் ஏற்ற மாதிரி ஒரே அரசாங்கத்தின் கூட்டுப் பொறுப்பில் இருக்கின்ற அமைச்சர்களும், ஜனாதிபதியும் ஒருவர் சொல்வதை மற்றவர் திருத்துகிறார்கள் அல்லது மறுக்கிறார்கள். ஜெனிவாவில் எல்லை நிர்ணயம் பற்றி பேசுகிறார்கள். கொழும்பில் பழைய முறையிலா? புதிய முறையிலா? என்று கேட்கிறார்கள். தேர்தல் திணைக்களம் நாங்கள் ரெடி ஆனால் என்று இழுக்கிறது. முன்னாள் தேர்தல் ஆணையாளர் எல்லை நிர்ணயம் பற்றி பேசுவது மூன்று ஆண்டுகளுக்கு மாகாண சபைத்தேர்தல் இல்லை என்பதன் மறுவார்த்தை என்று கூறுகிறார். ஜனாதிபதியோ கட்சித்தலைவர்களுடன் பேசி ஒரு முடிவுக்கு வருவோம் என்று சொல்கிறார். உண்மையில் அரசாங்கம் காற்றுவளம் தனக்கு சாதகமாக வீசும் வரை இழுத்தடிக்கிறது என்றே கொள்ள வேண்டியுள்ளது.

அண்மையில் மாகாணசபை ஆளுநர்களையும், செயலாளர்களையும் சந்தித்த ஜனாதிபதி மாகாணங்களின் நிதி நிலைமை, செயற்திட்டங்கள் பற்றி அறிந்து கொண்டார். வருடாந்த வரவு — செலவுத்திட்ட வரைபுக்கு முன்னரான வழமையான சந்திப்பு இது.

மக்கள் பிரதிநிதிகளான மாகாண முதலமைச்சர்கள் இருக்க வேண்டிய கதிரைகளில் அரசாங்க ஆதரவு, முகவர்களான ஆளுநர்கள் அமர்ந்து இருக்கிறார்கள். ஒரு வகையில் அரசாங்கம் தான் நியமித்த ஆளுநர்களினூடாக தனது கட்சி அரசியல் நிகழ்ச்சி நிரலை நடைமுறைப் படுத்துகிறது.

இது கொழும்பு அரசாங்கங்களால் தொடர்ச்சியாக செய்யப்பட்டு வரும் அதிகாரபகிர்வுக்கு எதிரான ஜனநாயக மறுப்பு. உள்ளூராட்சி தேர்தல் இடம்பெறும்வரை இலங்கையின் மூன்று படிமுறை அதிகார ஜனநாயக நிர்வாகக்கட்டமைப்புக்களும் மத்திய அரசாங்கத்தின் கீழேயே இருந்தன.

ஜே.வி.பி.யின் இரண்டாவது எழுச்சி மாகாணசபை சபை எதிர்ப்பு அரசியலில் உருவானது. இப்போதும் மாகாணசபை முறைமை குறித்து ஜே.வி.பி.க்கு திருப்தியில்லை. அதே திருப்தியின்மை சிறுபான்மை தேசிய இனங்களுக்கும் உண்டு. ஆனால் காரணங்கள் வேறுபட்டவை. அரசாங்கம் அதிகாரப் பகிர்வை தவிர்த்து தேசிய மத்திய ஆட்சியில் கருத்தாய் உள்ளது. சிறுபான்மை தேசிய இனங்கள் அதிக அதிகாரப்பகிர்வை கோருகின்றன. இது இரு முரண்பட்ட இழுபறி நிலை. ஆனால் அரசாங்கமோ மாகாணசபை முறைமையில் சிறுபான்மையினர் திருப்தியற்று இருப்பதற்கான காரணங்களை ஆராயாது ரில்வின் சில்வா பாணியில் அது பிரச்சினைகளை தீர்க்க தவறி விட்டது என்று காட்ட முயற்சிக்கிறது

உண்மையில் ஜே.வி.பி. - என்.பி.பி. அரசாங்கத்தின் அதிகாரப்பகிர்வு குறித்த வெளிப்படைத்தன்மையும், நிலைப்பாடும் என்ன? மாகாண சபைகளின் மீளப்பெறப்பட்ட அதிகாரங்கள் முழுமையாக மீளளிக்கப்பட்டு அதிகாரப்பகிர்வு முழுமையாக்கப்படுமா.....? 13வது திருத்தம் முழுமையாக நடைமுறைக்கு வருமா? அல்லது மாகாணசபை அமைப்பு இல்லாமல் செய்யப்படுமா....? இதற்கான கொழும்பின் பதிலே வடக்கு, கிழக்கு மக்களின் எதிர்கால அரசியல் திசையை நிர்ணயிக்கும். மாறாக கொழும்பு, வடக்கு, கிழக்கு அரசியலுக்கு திசைகாட்ட முனைவது வழமையான தோற்றுப் போன அரசியலின் தொடர்ச்சியாகவே அமையும்.



# திலீபன் வானிலிருந்து பார்த்துக் கொண்டிருப்பது எதனை?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



திலீபனின் நாட்களில் யுத்த களத்தில் வெற்றிகள் கிட்டும் என்ற ஒரு நம்பிக்கை ஆயுதப் போராட்டம் நிகழ்ந்த காலங்களில் இருந்தது. அவருடைய நினைவு நாள் ஒன்றில் யாழ் கோட்டை வெற்றி கொள்ளப்பட்டதிலிருந்து அந்த நம்பிக்கை தோன்றியது. திலீபனின் பசிக்கும் தாகத்துக்கும் அவ்வாறு அபரிதமான சக்தி உண்டு என்ற ஒரு நம்பிக்கை

ஆனால் 2009க்கு பின்னர் திலீபனின் நாட்களில் திலீபன் யாருக்கு சொந்தம்? அல்லது திலீபனை யார் யார் நினைவு கூரலாம்? என்று கேட்டு மோதும் நிலைமை காணப்படுகிறது.

கடந்த 16 ஆண்டுகளிலும் நினைவு கூர்தலை அரசாங்கம் தடுக்கும் போதெல்லாம் தமிழ்க் கட்சிகள் ஏதோ ஒரு விதத்தில் ஒன்றுபட்டு அவற்றை அனுஷ்டிப்பதுண்டு. சில ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி திலீபனின் ஒளிப்படம் தாங்கிய ஊர்தியை நகர்த்திய பொழுது திருகோணமலையில் அந்த வாகனம் தாக்கப்பட்டது. அந்தச் சம்பவம் தமிழ்த் தேசியக் கட்சிகளை கட்சி கடந்து ஒன்றாக்கியது. ஆனால் அரசாங்கம் நினைவு கூர்தலை தடுக்காது தளர்வாக நடந்து கொள்ளும் போதெல்லாம் குறிப்பாக திலீபனின் நாட்களில் திலீபன் யாருக்கு சொந்தம்? நினைவுத் தூபியில் யார் யார் நினைவு கூரலாம்? என்று கேட்டு மோதல்கள் வெடிக்கின்றன.சில சமயம் இந்த மோதல்கள் ஊடகச் சந்திப்புகள் வரை வருகின்றன.

திலீபன் உண்ணாவிரதம் இருந்தது நல்லூர் வளாகத்துக்குள். ஆனால் அது ஒரு கோயில் வளாகம் என்பதனால் அங்கே நினைவுத் தூபியை வைக்க அனுமதிக்கப்படாத காரணத்தால் அது நல்லூர் வளாகத்துக்கு வெளியே இப்போது இருக்கும் இடத்திற்கு கொண்டு வரப்பட்டது. அது திலீபன் உயிர் நீத்த இடம் அல்ல. எனவே திலீபனை நினைவு கூர முற்படுபவர்கள் அந்த இடத்துக்குத் தான் வர வேண்டும் என்று இல்லை. அந்தச் சூழலில் பல காணிகள் உண்டு மண்டபங்கள் உண்டு. அதனால் திலீபனை மெய்யாக விசுவாசமாக நினைவுகூர வேண்டும் என்று கருதும் கட்சியோ செயற்பாட்டாளர்களோ இடத்துக்காக அடிபடத் தேவையில்லை. இங்கு இடம் ஒரு பிரச்சினையே அல்ல. திலீபனை எப்படி நினைவு கூரலாம்? அதன்மூலம் அவருடைய நினைவுகளை எப்படி மக்கள் மயப்படுத்தலாம்? அதன் மூலம் அவருடைய தியாகத்தின் ஆன்ம பலத்தை எப்படி நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்துக்கு உந்து சக்தியாக மாற்றலாம்? என்று சிந்திப்பது தான் இங்கு முக்கியம்.

திலீபனின் நினைவு நாளில் அவருடைய ஒளிப்படம் ஏந்திய வாகனத்தை வடக்கு கிழக்காக நகர்த்துவது ஒரு நல்ல ஏற்பாடு. நல்லூரில் அவருடைய நினைவுகளை பகிரும் ஒளிப்படக் காட்சியை வைப்பதும் ஒரு நல்ல ஏற்பாடு. குருதிக் கொடையும் நல்லது. இவற்றை விட புதிதாகவும் யோசிக்கலாம். இப்பொழுது தமிழ் மக்களுக்குத் தேவையாக இருப்பது தமிழ் மக்களின் கவனத்தையும் குறிப்பாக ரிக்ரொக் தலைமுறையின் கவனத்தை. கொழும்பின் கவனத்தை. உலகத்தின் கவனத்தை ஈர்க்கத்தக்க படைப்புத்திறன் மிக்க அறவழிப் போராட்ட வடிவங்கள் தான்.

கடந்த 15ஆம் திகதி திலீபனின் நினைவு நாளுக்கு முன்னதாக கொழும்பில் சிங்களப் படைப்பாளியான சந்தரசி சுதுசிங்க எழுதிய நூல் ஒன்று வெளியிடப்பட்டது. திலீபன் என்று பெயரிடப்பட்ட அந்த நூலில். இரண்டு அத்தியாயங்கள் திலீபனை மையமாக வைத்து எழுதப்பட்ட படைப்புகளைக் கொண்டுள்ளன.த மிழ்த் தேசியப் பரப்புக்கு வெளியே வேறு இனங்களும் திலீபனைக் கொண்டாடுவது திலீபனுக்கு மகிமையே. தமிழ் மக்களின் போராட்டத்துக்கு மகிமையே.

அமைச்சர் சந்திரசேகரன் திலீபனின் நினைவுத் தூபிக்கு அஞ்சலி செலுத்துவது திலீபனுக்கு மகிமையே. திரைப் படக் கலைஞர் சோமிதரன் முகநூலில் கூறியது போல அஞ்சலி செலுத்த வந்தவரும் ஓர் அரசியலைச் செய்ய வருகிறார். அவரைத் தடுத்து நிறுத்தியவர்களும் தங்களுக்கான அரசியலைச் செய்கிறார்கள் என்பதே உண்மை.

திலீபன் ஓர் ஆயுதப் போராளி. ஆனால் அவர் உயிர் நீத்தது ஓர் அறவழிப் போராட்டத்தில். அவருடைய வழியை விசுவாசமாகப் பின் தொடர்கிறவர்கள் தான் அவரை அஞ்சலிக்கலாம் என்றால், கடந்த 16ஆண்டுகளாக அவரைப் போல சாகும்வரை உண்ணாமல் இருக்க எத்தனை பேர் தயாராக இருந்திருக்கிறார்கள்? உணவோ நீரோ இன்றி எத்தனை நாள் இருக்கலாம் என்பது உபவாசம் இருந்தவர்களுக்குத்தான் தெரியும்.அதிலிருந்து தப்பினாலும் அதனால் உடல் உறுப்புகளுக்கு ஏற்பட்ட சேதங்களில் இருந்து தப்ப முடியாது.

கடந்த 16 ஆண்டுகளாக குறிப்பாக காணாமல் போகச் செய்யப்பட்டவர்களின் பெற்றோர் உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். அரசியல் கைதிகள் உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். எனினும் அப்போராட்டங்கள் இடையில் நிறுத்தப்பட்டன. அது சரி. ஏனென்றால் ஏற்கனவே பாதிக்கப்பட்டவர்கள் தான் திரும்பத் திரும்ப தியாகம் செய்ய வேண்டும் என்றில்லை. கட்சிகளும் செயற்பாட்டாளர்களுந்தான் அவர்களுக்காகப் போராட வேண்டும்.

திலீபனைப் போல உயிர் பிரியும் வரை உண்ணாமலும் துளி நீரும் அருந்தாமலும் போராட எத்தனை பேரால் முடியும்? கடந்த 16 ஆண்டுகளாகத் தாங்கள் செய்ய முடியாத அல்லது தாங்கள் செய்யத் தயாரில்லாத தியாகங்களுக்கு உரிமை கோருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. தாங்கள் செய்யத் தயாராக இல்லாத ஒரு தியாகத்துக்கு உரிமை கோருபவர்களால் தான் உண்மையான தியாகம் கொச்சைப்படுத்தப்படுகிறது. தியாகம் செய்ய வேண்டிய காலங்களில் தப்பிப் பிழைத்தவர்கள் எல்லாம் இப்பொழுது தியாகத்தைப் பற்றி வகுப்பெடுக்கத் தொடங்கி விட்டார்கள்.



இந்தக் கட்டுரை யாரையும் சாகச் சொல்லிக் கேட்கவில்லை. யாரும் சாகவும் வேண்டாம். செத்தது போதும். ஆனால் செய்யத் தயாராக இல்லாத தியாகங்களுக்கு உரிமை கோரக்கூடாது. மாறாக அந்தத் தியாகங்களின் மகிமையை. நினைவுகளை எப்படி மக்கள் மயப்படுத்தலாம் என்று சிந்திக்கலாம். அதிலாவது உண்மையாக இருக்கலாம். தியாகிகளை அஞ்சலிக்கும் போது விளக்கு கொளுத்துவது மலர்களை வைப்பது போன்றவை வழமையான வழிகள். வாகன ஊர்தி, ஒளிப்படக் காட்சி.குருதிக் கொடை போன்றன ஒப்பீட்டளவில் வித்தியாசமானவை. ஆனால் இவற்றுக்கும் அப்பால் புதிய படைப்புத்திறன் மிக்க வழிகளைக் கண்டு பிடிக்க வேண்டும்.

உதாரணமாக தியாகியின் நாட்களில் ஊர் ஊராக அவருடைய நினைவுகளைப் பரவலாக்கும் விதத்தில் என்ன செய்யலாம் என்று சிந்திக்கலாம். நினைவுகளை தலைமுறைகள் தோறும் கடத்துவதிலும் மக்கள் மயப்படுத்துவதிலும் கலை பண்பாட்டுச் செயற்பாடுகள் பெரிய பங்காற்ற முடியும். எனவே புதிய கலை வடிவங்களைப் பற்றிச் சிந்திக்கலாம். தியாகிகளின் நாட்களில் இசை நிகழ்ச்சிகளை ஒழுங்குப்படுத்தி இசை அஞ்சலிகளை இசை வேள்விகளைச் செய்யலாம். அந்த இசை வேள்விகளுக்குப் பிராந்திய அனைத்துலகக் கலைஞர்களைக் கொண்டு வரலாம். இது ஒரு வழி.

இரண்டாவது வழி. தியாகியின் பெயரால் போட்டிகளை ஒழுங்குபடுத்தலாம். கவிதைப் போட்டி.கட்டுரைப் போட்டி. ஓவியப் போட்டி. நாடகப் போட்டி. விவாதப் போட்டி விளையாட்டுப் போட்டிகள்…

மூன்றாவது வழி. தியாகிகளின் நாட்களில் அரசியல் கருத்தரங்குகளை வைத்து அந்த தியாகத்துக்கு பின்னால் இருக்கும் அரசியலை ஆழமாக ஆராயலாம்.

நாலாவது வழி. தியாகிகளின் பெயரால் தொண்டு செய்யலாம். ஊர் ஊராக சிரமதானங்களைச் செய்யலாம். ஊர்க் குளத்தை நீரோடும் வாய்க்கால்களைத் தூர் வாரலாம்.ஊரைத் துப்புரவாக்கலாம். மரம் நடலாம். இப்படித் தியாகியின் பெயரால் பசுமைத் திட்டங்களை முன்னெடுக்கலாம்.

ஐந்தாவது வழி. தியாகிகளின் பெயரால் இலவச மருத்துவ முகாம்களை ஒழுங்குபடுத்தலாம்.மருத்துவத் துறை ஒரு இண்டஸ்ட்ரியாக மாறி ஏழைகளுக்குத் தூரமாகப் போய்க் கொண்டிருக்கும் ஒரு பின்னணியில் இலவச மருத்துவ முகாம்களை தியாகிகளின் பெயரால் ஒழுங்கமைக்கலாம். உதாரணமாக அரச பொது மருத்துவமனைகளில் குறிப்பிட்ட சில சத்திர சிகிச்சைகளுக்காகக் காத்திருப்பவர்களின் தொகை ஆயிரக்கணக்கானது என்று கூறப்படுகிறது. அவ்வாறான சத்திர சிகிச்சைகளை இலவசமாக தியாகிகளின் பெயரால் செய்யலாம்.

அதாவது தியாகிகளை நினைவு கூர்வது என்பது தொண்டு செய்வது; தன்னாலியன்ற தியாகத்தைச் செய்வது. இவ்வாறு தியாகிகளை நினைவு கூரும் விடயத்தில் படைப்புத் திறனோடும் தியாக சிந்தையோடும் சிந்தித்தால் புதிய வழிகள் திறக்கும்.அவ்வாறு புதிய கற்பனைகள் தோன்றும்போது நினைவு கூர்தல் ஒரு சடங்காக மாறுவது தடுக்கப்படும். எங்கே நினைவு கூர்தல் ஒரு சடங்காக மாறுகிறதோ அங்கே நினைவுகூர யாருக்கு உரிமை அதிகம் என்று கேட்டுச் சண்டைகளும் அதிகரிக்கும்.

# அரசியல் உரிமைகளும் அபிவிருத்தியும் தவறான அணுகுமுறைகளை மறுபரிசீலனை செய்தல்

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- க.அருந்தவபாலன் -

அரசியல் உரிமைகள், அபிவிருத்தி என்பன ஒன்றுக்கொன்று வேறுபட்ட எண்ணக் கருக்கள் ஆகும். ஆயினும் அவை ஒன்றிலொன்று தங்கியிருப்பதுடன் ஒன்றையொன்று உந்தித்தள்ளும் வல்லமைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளன.

மறுபுறத்தில் அரசியல் உரிமைகள் இருப்பின் அபிவிருத்தி கட்டாயம் ஏற்படுமென்றோ அல்லது அபிவிருத்தி அடையும் போது அரசியல் உரிமைகளுக்கான தேவை எழாது என்றோ கருதுவது தவறானதாகும். இந்த உண்மை ஒரு சமூகத்துக்கு மட்டுமன்றி, ஒரு இனம், நாடு எல்லாவற்றுக்கும் பொதுவானதொன்றாகும்.

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் நாடு பொருளாதார, சமூக ரீதியாக மட்டுமன்றி மக்களின் அரசியல் உரிமைகள் ரீதியாகவும் படிப்படியாக விருத்தி கண்டது. ஆனால் சுதந்திரத்துக்கான போராட்டம் தொடரவே செய்தது. அதே போல நாடு சுதந்திரமடைந்து முக்கால் நூற்றாண்டைக் கடந்து விட்ட போதும் அபிவிருத்திநிலை இன்னும் எட்டப்படவேயில்லை.

இன்றைய நிலையில் இந்த யதார்த்த நிலையை தற்போதைய அரசாங்கமும் தமிழர் தரப்பும் புரிந்து கொள்வது அவசியமானதாகும். ஏனெனில் வடக்கு கிழக்கில் அபிவிருத்தி தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடும், மக்களின் நிலைப்பாடும் நீண்டகாலமாகவே ஒன்றுக்கொன்று முரண்பட்டவையாக இருந்து வருகின்றன. இந்த முரண்பாட்டுக்கான ஆழமான காரணங்கள் கண்டறியப்பட்டு அவை களையப்படுவதன் மூலமே உண்மையான அபிவிருத்தியை அடையமுடியும்.

தமிழ் மக்களைப் பொறுத்தும் அவர்களின் தலைவர்கள் என்று கருதுவோரைப் பொறுத்தும் அவர்களின் தாயகமாகக் கருதப்படும் நாட்டின் வடக்கு கிழக்குப் பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பாக முக்கியமான மூன்று விடயங்களில் அவர்களின் அணுகுமுறைகளில் மாற்றம் அவசியமாகிறது.

1. அபிவிருத்தியில் ஈடுபடும் அரசாங்கம் தொடர்பான அணுகுமுறை.

2. அரசாங்கம் மற்றும் தனியார் துறைகளால் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் தொடர்பான அணுகு முறை.

3. தமிழ் மக்களின் முதலீடுகள் தொடர்பான அணுகுமுறை.

வடக்கு கிழக்கு பிரதேசத்தில் அரசாங்கத்தினால் முன்மொழியப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக பெரும்பாலான மக்களிடமும், தமிழ் அரசியல் தலைவர்களிடமும் எதிர்மறையான எண்ணமே நிலவி வருகிறது. ஒரு புறத்தில் அபிவிருத்தியை விட அரசியல் உரிமைகளைப் பெறுவதற்கே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்ற கருத்துருவாக்கம் மக்களிடத்தில் வலுப் பெற்றிருக்கும் அதேவேளை மறுபுறத்தில் அரசாங்கத்திடம் உண்மையான அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணமில்லை,

அபிவிருத்தி என்ற மாயையின் மூலம் தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்கான வேட்கையை மழுங்கடிப்பதே அதன் நோக்கம் என்ற கருத்தும் வலுப்பெற்றிருப்பதே இதற்கான அடிப்படையாகும். தமிழ்ப் பிரதேசம் அபிவிருத்தி அடையவேண்டுமென்று அரசாங்கம் உண்மையாகவே விரும்புமானால் முதலில் அம்மக்களின் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காணமுயல வேண்டும் என்பதே அவர்களின் நிலைப்பாடு. தமிழ் மக்களை இந்த நிலைப்பாட்டுக்குத் தள்ளிய பெருமை மாறி மாறி ஆட்சி செய்த சிங்கள ஆட்சியாளர்களையே சாரும். இலங்கையில் வடக்கு கிழக்கில் மட்டுமன்றி கொழும்பிலும் ஒப்பீட்டு ரீதியில் இலங்கைத் தமிழர்கள் ஏனைய சமூகங்களை விட சமூக,பொருளாதார ரீதியில் 1980 ஆம் ஆண்டுவரை முன்னிலை வகித்தே வந்துள்ளனர். சுதந்திரத்துக்குப் பின் ஒப்பீட்டு ரீதியில் பாகுபாடான அரச வளங்களின் ஒதுக்கீடு தொடர்ந்த போதும் தமிழ் மக்களின் மேல்நோக்கிய அசைவு தொடர்ந்தே வந்துள்ளது. தரப்படுத்தல் தொடக்கம் 83 யூலையில் திட்டமிட்டு கொழும்பில் தமிழ் மக்களின் சொத்துகளும் வர்த்தகமும் அழிக்கப்பட்டமை வரையிலான ஆட்சியாளர்களின் இனரீதியான செயற்பாடுகள் யாவும் தங்களை ஓரங்




கட்டுவதற்கான முயற்சிகள் என்பது தமிழ் மக்களின் மனதின் ஆறாத வடுக்கள். இவை யுத்த காலத்தில் உச்சமடைந்ததுடன் அதன் பின்னரும் இன்றுவரை தொடரும் போக்கே காணப்படுகிறது. இவ்வாறு தமிழ் மக்களின் மனங்களில் உருவாக்கப்பட்ட வடுக்களை அகற்றுவதற்கான திருப்தியான எந்தவொரு முன்னெடுப்புகளும் இதுவரை ஏற்படாதவொரு நிலைமையில் அரசாங்கத்தின் அபிவிருத்தி தொடர்பிலான ஐயங்களும் எதிர்வினையாற்றல்களும் தமிழ் மக்களிடத்தில் தொடர்வதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

மக்களின் மனங்களில் இயல்பாக படிந்து விட்ட இந்த வெறுப்புநிலையைத் தணிப்பதற்கு ஆட்சியாளர்கள் முனையவில்லை என்பது ஒருபுறமிருக்க மறுபுறத்தில் தமிழ் அரசியல் தலைவர்களும் அதை விரும்பவில்லை என்பதே உண்மை.

அந்த வெறுப்பு நிலையை தொடர்ந்து எதிரி நிலையில் வைத்திருக்கவே அத்தலைவர்கள் விரும்புகின்றனர். அதன் மூலமாக மக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளைப் புறந்தள்ளி தமது அரசியல் நலன்களுக்கு முன்னுரிமையளிக்கும் போக்கே அதிகரித்து வருகிறது. ஏனெனில் கூடிய கொதிநிலையில் நாம் விரும்புவதை இலகுவாகப் பதமாக்க முடியும். இன்றைய அரசியல் தலைவர்களின் தமிழ்த் தேசியக் கோசமும் அதற்குமாறான அவர்களின் அரசியல் நடவடிக்கைகளும் இதையே புலப்படுத்துகிறது. சலுகைகளைக் கேட்டால் உரிமைகளைக் கேட்க முடியாது என்று மக்களை ஏமாற்றிக் கொண்டு தமக்கான சலுகைகளுக்கு தாராளமாக கையேந்தும் தமது தலைவர்களையே மக்கள் கண்டு வருகிறார்கள். வீடு, காணி, வாகனம், மதுபான விற்பனை உரிமம், தமது உறவினர் ஆதரவாளர்களுக்குப் பதவிகள் என்பவற்றுக்குத் தமிழ்த் தேசியம் விலைபோவதையும் அவர்களால் பார்க்க முடிகிறது. இந்த நிலையில் இத்தலைவர்கள் அரசாங்கத்தினால் வடக்கு கிழக்கில் முன்னெடுக்கப்படும் ஒரு சில அபிவிருத்தித் திட்டங்களைக் கூட எதிர்ப்பதுடன் தமது ஆதரவாளர்களின் மூலம் மக்களையும் அவற்றுக்கெதிராகத் தூண்ட முயற்சிப்பதையும் காணமுடிகிறது. இத்தலைவர்கள் அரசாங்கத்தின் முனைப்புகளையிட்டு அஞ்சுகின்றனர் என்பதே உண்மை. இதன் மூலம் எங்கே மக்களின் ஆதரவு (வாக்குகள்) தம்மை விட்டு அரசாங்கத் தரப்புக்கு சென்று விடுமோ என்ற ஐயமே இதற்கான பிரதான காரணம். இது அரசாங்கத்தின் வெற்றியன்று. மக்களின் நிலை மறந்து அரசியல் செய்துவரும் தலைவர்களின் தோல்வியாகும். நீண்டகால யுத்தம் இழப்புகள் இடப்பெயர்வுகள், வேலையின்மை, வறுமை போன்ற பல காரணிகள் கணிசமான மக்களின் வாழ்வில் இருளைத் தந்துள்ளன. இவற்றிற்கு மேலாக தெற்கின் விருத்தி மட்டுமல்ல உலக நாடுகளின் வளர்ச்சிக் காட்சிகளும் தமிழ் மக்களை குறிப்பாக நடுத்தர மற்றும் உயர்மட்ட மக்களை ஓரளவிலும் இளைஞர்களை அதிகளவிலும் சிந்திக்க வைக்கின்றன.

இவ்வாறான ஒரு நிலையில் தொடர்ந்தும் தமிழ்த் தேசியம்,அரசியல் உரிமைகள் என்ற வார்த்தைகளால் அவர்களைக் கட்டி வைத்திருக்க முடியாது. அவ்வாறு கட்டி வைத்திருக்கும் ஆற்றல் தகுதி என்பன தற்போதைய அரசியல் தலைவர்களிடமும் இருப்பதாகத் தெரியவில்லை. அதன் பரிணாம வளர்ச்சியே சிங்களத் தேசியக் கட்சி அல்லது அவற்றின் ஆதரவுக்கட்சி வடக்கு கிழக்கில் ஒன்றிரண்டு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்த நிலைமாறி இன்று ஒன்பது உறுப்பினர்களைப் பெறும் நிலை உருவாகியுள்ளமை. அவர்களை துரோகிகள் என்று ஒதுக்குவதன் மூலம் தலைவர்கள் தங்கள் பக்கப் பலவீனங்களையோ அன்றி மக்களின் விருப்பங்களையோ மறைத்து விட, மறுத்து விட முடியாது.

இந்த உண்மைகளை தமிழ்த் தரப்பினர் விளங்கிக் கொண்டு அதற்கேற்ற வகையான அணுகு முறையைக் கையாளவேண்டும். முதலில் அபிவிருத்தியையும் அரசியல் கோரிக்கைகளையும் முடிச்சுப் போடுவதைத் தவிர்க்க வேண்டும். அரசியல் உரிமைகள் தொடர்பான மக்களின் வேட்கையை அரசாங்கத்தின் அபிவிருத்தி முன்னெடுப்புகள் எவ்வகையிலும் பாதிக்காத வகையில் அவர்களிடையே அரசியல் விழிப்புணர்வை வளர்க்க வேண்டும். மக்கள் தமிழ்த்தேசியத்துக்கு எதிரானவர்கள் அல்லர். வெறுமனே தேர்தல் வெற்றிக்காக தமிழ்த் தேசியம் பேசும் நிலைக்கு எதிரானவர்கள். இந்நிலை மாறவேண்டும். அதற்காக நேர்மையுடனும் அர்ப்பணிப்புடனும் உழைக்கும் நம்பிக்கையான தலைவர்கள் உருவாக வேண்டும். அரசாங்கத்தின் அபிருத்தி தொடர்பான முன்னெடுப்புகள் சலுகைகளல்ல. அவையும் தமிழ் மக்களின் உரிமைகள். அவற்றை வரவேற்கும் அதேவேளை பாராளுமன்ற உறுப்பினர்கள் அதற்காகவும் அரசாங்கத்துடன் போராட வேண்டும். தமிழ் மக்களும் அரச வருமானத்திற்குப் பங்குதாரிகள் என்ற வகையில் அரச செலவிலும் அவர்களுக்குரிய பங்கு கிடைக்கச் செய்வது பாராளுமன்ற உறுப்பினர்களின் கடமையாகும். தமிழ்த் தேசியம் தமிழ் மக்களின் பிறப்புரிமை என்றால் அபிவிருத்தி அவர்களின் வாழ்வுரிமை என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். களநிலைமைகளுக்கேற்ப அணுகுமுறைகளை மாற்றுவதன்மூலமே இலக்குகளை நோக்கி உறுதியாகப் பயணிக்க முடியும்.

மாற்றங்களுக்கு முதலில் எதிர்வினையாற்றுவது மனித இயல்பு. இவ்வியல்பு தமிழ் மக்களிடையே அதிகம் இருப்பது போலத் தென்படுகிறது. அதனால் தான் என்னவோ தமிழர் தாயகத்தில் குறிப்பாக வடக்கில் அரசினால் மட்டுமன்றி தனியார் துறையினராலும் முன்னெடுக்கப்படும் பல திட்டங்கள் தொடர்பில் எதிர்மறையான செயற்பாடுகள் வெளிப்படுத்தப்படுகின்றன. மாற்றமின்றி முன்னேற்றம் ஏற்படப் போவதில்லை. இழப்புகளின்றி வளரச்சிகளில்லை. தக்கன பிழைக்கும் என்பது அடிப்படையான உயிரியல் விதி. இது சமூகத்திற்கும் பொருந்தும். சொந்த வாழ்க்கையில் தயங்காமல் மாற்றத்தை அனுமதிக்கும் ஒவ்வொருவரும் பொது வாழ்வில் மட்டும் ஒன்றுபட்டு ஏன் எதிர்க்கிறார்கள் என்பது புரியாத புதிராகும். வெளியேற்றும் புகையினால் சூழல் மாசுபடும் என்ற நல்ல சிந்தனையில் வாகனங்களை வாங்காது மாட்டு வண்டிகளைப் பயன்படுத்துவோர் இன்று உள்ளனரா? இல்லையே.

புதிய விருத்தித் திட்டமொன்றினால் ஏற்படக்கூடிய சாதக பாதக விளைவுகளைத் தீர்மானிப்பது தனிநபர்களோ அல்லது சமூக ஊடகங்களோ அல்ல. அதுசார்ந்த வல்லுனர்களே அவற்றைத் தீர்மானிக்க வேண்டும். மக்கள் நலத் திட்டங்களினால் பாதிக்கப்படக் கூடிய தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் அத்திட்டங்களுக்கு முட்டுக்கட்டைகளைப் போடவே முயற்சிப்பர். இது தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவது சமூகத்தலைவர்களின் கடமையாகும்.

ஏலவே சுட்டிக் காட்டியது போல கடந்தகால பட்டறிவினடிப்படையில்
(20ம் பக்கம் பார்க்க)

# பொறுப்புக் கூறலில் சர்வதேசத்தின் மீது நம்பிக்கையில்லை! கலாநிதி ஷரிகா திரணகம பிரத்தியேக செவ்வி!

காஸாவில் நிகழ்ந்து கொண்டிருக்கும் அவலங்கள் தொடர்பில் சர்வதேச சமூகத்தின் செயற்பாடுகளை அவதானிக்கின்றபோது பாதிக்கப்பட்ட மக்களுக்கான பொறுப்புக்கூறல் விடயத்தில் அதன் மீது நம்பிக்கை கொள்ள முடியாத நிலைமை உருவாகியுள்ளது என்று அமெரிக்க ஸ்டான்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தின் இணைப்பேராசிரியரும், பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கான செயற்பாட்டாளருமான கலாநிதி ஷரிகா திரணகம தெரிவித்தார்.

கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியின் - போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் வழங்கிய செவ்வியின் முழுவடிவம் வருமாறு,

கேள்வி: வடக்கு, கிழக்கு மாகாணங் - களில் சமூகம் சார்ந்த உங்களது அவதானிப்பு என்னவாக உள்ளது?

பதில்: வடக்கு, கிழக்கு ஆகிய பிரதேசங்களைப் பொறுத்த வரையில் இரண்டுமே போரினால் மோசமாக பாதிக்கப்பட்டவையாக உள்ளன. பொருளாதார நெருக்கடிகளுக்குப் பின்னர் இலங்கை முழுவதுமாக காணப்படுகின்ற பிரச்சினைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, அங்கு பாரதூரமான நிலைமைகளே நீடிக்கின்றன.

உயர்பாதுகாப்பு வலயங்கள் இன்னமும் நீடிக்கின்றன. 2015ஆம் ஆண்டு அபகரிக்கப்பட்ட காணிகளில் அரைப் பங்கே விடுவிக்கப்பட்டுள்ளன. இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றப்படாத நிலையிலேயே உள்ளனர். குடும்பங்களுக்கு தலைமை தாங்கும் பெண்களின் வாழ்வாதாரம் முன்னேற்றம் காணாத நிலைமைகளே உள்ளன.

இதனை விடவும், போதைப்பொருள் பாவனை சமூக மட்டத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. எதிர்கால சமூகத்தினை சீர்குலைக்குமளவிற்கு நிலைமைகள் ஆழமாகியுள்ளன. கல்வி, சுகாதாரத்துறையிலும் போதுமான முன்னேற்றங்கள் காணப்படவில்லை.

உதாரணமாக, தற்போது மயிலிட்டி துறைமுகம் விரிவுபடுத்தப்படுகின்றது. ஆனால் இதன்மூலமாக நன்மைகளைப் பெறப்போகும் மக்கள் யார்? இந்தத் துறைமுகத்தின் ஒருபகுதி உயர்பாதுகாப்பு வலயமாக உள்ளது. காணிகள் விடுவிக்கப்படவில்லை. அப்பகுதியில் பூர்வீகமாக இருந்தவர்கள் மீள்குடியேறவில்லை. ஆகவே அந்த அபிவிருத்தியால் என்ன நன்மைகள் ஏற்படப் போகின்றன.

அதேபோன்று, மக்களுடன் உரையாடுகின்ற போது, தங்களுடைய பிரச்சினைகள் தொடர்பில் மக்கள் பிரதிநிதிகள் தொடர்ச்சியான கரிசனைகளைச் செய்வதில்லை என்ற ஆதங்கம் காணப்படுகின்றது. மக்கள் பிரதிநிதிகளும் தொடர்ச்சியாக மக்கள் சந்திப்புக்களை நடத்துகின்றார்களா? அவர்களின் பிரச்சினைகளை தொடர்ச்சியாக வெளிப்படுத்துகின்றார்களா? என்பதில் விமர்சனங்கள் உள்ளன. அந்த வகையில் பார்க்கின்ற போது, வடக்கு, கிழக்கில் சமூகத்தின் ஆழமாகக் காணப்படுகின்ற பிரச்சினைகள் தீர்க்கப்படாது நீடிக்கின்ற நிலைமைகளை என்னால் அவதானிக்க முடிந்தது. அத்தோடு அவற்றுக்கான தீர்வுகளை எங்கே தேடுவது என்பதிலும் கேள்விகள் காணப்படுகின்றன. புலம்பெயர்ந்த சமூகங்கள் உதவிகள், ஒத்துழைப்புக்களைச் செய்தாலும் அது பாரியதொரு மாற்றத்தை ஏற்படத்தக்க முதலீடுகளாக காணப்படவில்லை. அவ்வாறான நிலைமைகள் காணப்படுவதற்கு ஆட்சியாளர்களும் காரணமாக இருக்கின்றார்கள்.

கேள்வி: வடக்கு,கிழக்கு மக்களுக்கும் அரசாங்கத்துக்கும், அரசியல்வாதிகளுக்கும் இடைவெளிகள் காணப்படுவது யதார்த்தமாக இருந்தாலும் இதில் சிவில் அமைப்புக்களின் பங்கு காத்திரமாக இருந்தால் சமூக ரீதியான முன்னேற்றங்களை அடைய முடியும் என்று கருதுகின்றீர்களா?



பதில்: சிவில் அமைப்புக்கள் என்ற விடயத்தில் எனக்கு குழப்பகரமான நிலைமைகள் உள்ளன. சிவில் அமைப்புக்கள் யார், அவர்களின் செயற்பாடுகள் என்ன என்பதில் தெளிவற்ற நிலையிலேயே நான் இருக்கின்றேன்.

என்னைப் பொறுத்தவரையில், சமூகத்துடன் மிக நெருக்கமாகச் செயற்படக்கூடிய கட்டமைப்புக்களான, உள்ளூராட்சி மன்றங்கள், பாடசாலை, பல்கலைக்கழக சமூகங்கள், கூட்டுறவுக் கட்டமைப்புக்கள், கிராமிய, பிரதேச கட்டமைப்புக்கள், வைத்தியசாலை மற்றும் பிரதேச சுகாதார கட்டமைப்புக்கள் ஆகியவற்றை வலுப்படுத்துவது மிக முக்கியமானதாகும்.

ஏனென்றால் இவை தான் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையுடன் மிக நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருக்கின்றன. ஆகவே அவை சமூகத்துக்கு மிக முக்கியமான வகிபாகத்தைக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில் இக்கட்டமைப்புக்களை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் அவசியமாக முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது.

தற்போதைய நிலையில் யு.எஸ்.எய்ட் போன்ற சர்வதேச அமைப்புக்களின் நிதியளிப்பு நிறுத்தப்பட்டுள்ளது. ஏனைய சர்வதேச அமைப்புக்களும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தான் தமது நிதிப்பங்களிப்பைச் செய்கின்றன. ஆகவே சமூகத்துடன் மிக நெருக்கமான கட்டமைப்புக்களை வலுப்படுத்துவது மிகமுக்கியமானது.

கேள்வி: இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்கள் தமக்குரிய நீதியை சர்வதேச சமூகம் வழங்க வேண்டும் என்பதில் இறுக்கமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருகின்றமையை எப்படிப் பார்க்கிறீர்கள்?

பதில்: நானொரு சாதாரண பொதுமகனாக பதிலளிக்கின்றேன். சர்வதேச சமூகம் காஸா விடயத்தில் என்ன செய்கின்றது என்பதை நாங்கள் நேரடியாகவே காண்கின்றோம். இந்த நிலைமையானது எனக்கு சர்வதேச சமூகத்தின் மீதான நம்பிக்கையிழப்புக்கு காரணமாகின்றது.

காஸாவில் குழந்தைகள் முதல் பொது மக்கள் வரை உயிரிழக்கின்றனர். ஏறக்குறைய இரண்டு வருடங்களாக அங்கு நிலைமைகள் நாளுக்கு நாள் மோசமடைந்து வருகின்றன. சர்வதேச சமூகம் இந்த விடயத்தில் என்ன செய்கின்றது என்ற பெருங்கேள்வி உள்ளது.

ஆகவே என்னைப் பொறுத்த வரையில் நாம் சர்வதேச சமூகத்தின் மீது அதீதமாக நம்பிக்கை கொள்வதை விடவும், சர்வதேச துறைசார்ந்த நிபுணர்களின் ஒத்துழைப்புக்களையும், ஆதரவினையும் பெற்றுக்கொள்வது தான் பொருத்தமானதாக இருக்கும் என்று கருதுகின்றேன். இதில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் விடயம் மிகவும் உணர்வுபூர்வமானது. வடக்கு கிழக்கைப் பொறுத்தவரையில் குடும்பத்துக்கு ஒருவராவது வலிந்து காணாமலாக்கப்பட்டுள்ளார். அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை தெரிந்து கொள்வதற்கு அவர்களின் உறவினர்கள் அதிகமான பிரயத்தனம் செய்கின்றார்கள். ஆகவே அவர்களுக்கான பொறுப்புக் கூறப்படுதல் முக்கியமான விடயமாகும்.

அந்தவகையில், அனைத்து நிகழ்வுகள் சம்பந்தமாகவும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இலங்கையில் நடைபெற்ற சித்திரவதைகள் சம்பந்தமாக ஐ.நா.வின் விசேட அறிக்கையாளர்களால் அறிக்கையிடப்பட்டுள்ளது. அவ்விதமான அறிக்கைகள் முக்கியமானவை. அவற்றின் அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்கு அரசாங்கமும் தயாராக வேண்டும்.

கேள்வி: ஆட்சியில் உள்ள தற்போதைய அரசாங்கம் தேசிய உள்ளகப் பொறிமுறைகள் ஊடாக பொறுப்புக் கூறப்படும் என்ற நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றது. இலங்கையில் நிகழ்ந்த துன்பகரமான நிகழ்வுகளுக்கு உள்ளகப்பொறிமுறைகள் ஊடாக நம்பகரமான தீர்வளிக்கப்படுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளனவென்று கருதுகிறீர்களா?

பதில்: பொறுப்புக்கூறல் விடயத்தில் அரசாங்கம் எவ்வாறு செயற்படப் போகின்றது, எவ்வாறு விடயங்களை கையாளப்போகின்றது என்பது பற்றித் தெளிவான தன்மைகள் காணப்படவில்லை. ஆனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பொறுப்புக் கூறுவதாக இருந்தால் நீதி விசாரணைகளுக்கான கட்டமைப்புக்கள் உரிய தரங்களுடன் கட்டமைக்கப்பட வேண்டும். அது குறிப்பிட்டவொரு காலத்துக்கு மட்டும் செயற்படுவதாக அமையாது, நாட்டில் நடைபெற்ற அனைத்து விடயங்களையும் முறையாக பக்கச்சார்பின்றி வெளிப்படைத்தன்மையுடன் கையாளும் உறுதிப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும்.

காணாமலாக்கப்பட்ட ஒரு சம்பவத்தை கண்டறிதல், மனிதப்புதைகுழி சம்பந்தமாக ஆராய்தல் போன்ற செயற்பாடுகளுக்கு அப்பால், சிந்திக்க வேண்டும். ஜே.வி.பி.க்கும் காணாமலாக்கப்பட்ட, கொலை செய்யப்பட்ட பிரச்சினைகள் உள்ளன. ஆகவே நாட்டில் நிகழ்ந்த ஒட்டுமொத்த காணாமலாக்கப்படல் சம்பவங்கள், மனிதப் புதைகுழிகள் ஆகியவை தொடர்பாக காலம் வரையறுக்கப்பட்டு முழுமையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அவ்வாறான நிலை யில் தான் பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையை பெற்றுக்கொள்ள முடியும்.

ஆகவே முழு நாட்டுக்குமான சாத்தியமான பொறிமுறையொன்று நிறுவப்பட வேண்டும். அந்தபொறிமுறைக்கு சர்வ தேசத்தின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்வது ஆக்கபூர்வமானதாகும். துரதிஷ்டவசமாக இலங்கையின் அரசாங்கங்கள் அவ்விதமான நடைமுறைச்சாத்தியமான விடயங்களை இதுகால வரையில் முன்னெடுத்திருக்கவில்லை.

கேள்வி: தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வாக உங்களது அனுபவத்தில் பொருத்தமான தீர்வு முறைமை எதுவெனக் கருதுகின்றீர்கள்?

பதில்: நாட்டின் அரசியலமைப்பு ரீதியான மறுசீரமைப்பொன்று நிச்சயமாக முன்னெடுக்கப்பட வேண்டும். அது தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்வதாக இருக்க வேண்டும். அத்துடன் தமிழ் பேசும் மக்களுக்கு தாங்களும் இந்த நாட்டின் பிரஜைகள் என்ற நிலைமை உருவாக்கப்பட வேண்டும். இந்த விடயம் உறுதியாக நடைபெற வேண்டியுள்ளது. அதற்கான பொருத்தமான ஆட்சி முறைமைகளை மறுசீரமைப்புச் செய்ய வேண்டியுள்ளது. சமஷ்டி அடிப்படையிலான கோரிக்கைகள் நீண்ட காலமாகவே இருக்கின்றன. ஆகவே அதுபற்றிய கரிசனைகள் கொள்ளப்பட வேண்டியது மிகவும் அவசியமாகின்றது.

இதனை விடவும், வட,கிழக்கில் படைக்குறைப்புச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அபகரிக்கப்பட்டுள்ள காணிகள் மீள கையளிக்கப்பட்டு, மீள்குடியேற்றம் முன்னெடுக்கப்பட வேண் டும். நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வது நோக்கமாக இருந்தால் இந்தச் செயற்படுகள் அவசியமாகின்றன. அத் தோடு பொருளாதார மேம்பாடு குறித்த செயற்பாடுகளும் முறையான திட்டமிடல்களுடன் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது.

கேள்வி: வலதுசாரித்துவ ஆட்சிகளே தொடர்ந்து வந்திருந்த தெற்காசிய வலய நாடுகளில் இலங்கையில் முதற்தடவையாக இடதுசாரித்துவ ஆட்சியாளர்கள் ஆட்சியில் அமர்ந்திருக்கின்றார்கள். இந்த மாற்றத்தினை எவ்வாறு நோக்குகின்றீர்கள்?

பதில்: முதலில் தற்போது ஆட்சியில் இருப்பவர்களை இடதுசாரிகள் என்று நான் முழுமையாக ஏற்றுக் கொள்ளலாமா?. ஏனென்றால் அவர்களுக்கு மத்திய வர்க்கத்தினரின் கணிசமான ஆதரவு கிடைத்துள்ளது. மக்கள் விடுதலை முன்னணியுடன் கூட்டணி அமைத்துக் கொண்ட அல்லது தேர்தல் காலத்தில் இணைந்து கொண்டவர்கள் இடதுசாரித்துவக் கொள்கையை முழுமையாக பின்பற்றியவர்கள் அல்லர். ஆகவே ஆட்சியாளர்கள் முழுமையான இடதுசாரிகளா இல்லையா என்பதில் பிரச்சினைகள் உள்ளன. எவ்வாறாக இருந்தாலும், இலங்கையில் நீண்ட காலமாக இருந்த (22ம் பக்கம் பார்க்க)

# ஐ.நா.வில் தமிழர் தரப்பு பலமாக உள்ளதா?

அண்மையில் நோர்வேயில் அந்த நாட்டின் துணை வெளி விவகார அமைச்சர் புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு பகுதினரோடு உரையாடியுள்ளார். இதன்போது அவர் இரண்டு விடயங்களைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

முதலாவது, இலங்கைதீவின் நல்லிணக்க முயற்சிகள் இப்பொழுது நோர்வே நாட்டின் முன்னுரிமை பட்டியலுக்குள் உள்ளன என்பது. இரண்டாவது, தமிழ் மக்கள் ஒருமுகமாக உலக சமூகத்தை அணுகுவதில்லை என்பது.

இதில் இரண்டாவது விடயம், அதாவது தமிழ் ஐக்கியத்தைப் பற்றிய விடயம். அதனை நோர்வே மட்டுமல்ல, இந்தியா மட்டுமல்ல, ஐரோப்பிய சமூகம் மட்டுமல்ல, உலகில் பெரும்பாலான நாடுகளின் பிரதிநிதிகள் தமிழ் மக்களின் பிரதிநிதிகளைச் சந்திக்கும் பொழுது அல்லது தமிழ்ச் சிவில் சமூகங்களைச் சந்திக்கும் போதெல்லாம் சுட்டிக் காட்டுவதுண்டு. இவ்வாறு சுட்டிக் காட்டுவதன் மூலம் தமிழ்த் தரப்பை குற்ற உணர்ச்சிக்குள்ளாக்கலாம். நீங்கள் முதலில் ஐக்கியப்படுங்கள் அதன் பின் உங்களுடைய உரிமைகளுக்காகப் போராடுங்கள் என்ற ஒரு தொனி அங்கே உண்டு.

ஆனால் இந்த இடத்தில் ஒரு விடயத்தை சுட்டிக்காட்ட வேண்டும். தமிழ் மக்கள் மட்டுமல்ல, எல்லாச் சமூகங்களிலும் பல்வேறு அபிப்பிராயங்கள், பல்வேறு அடுக்குகள் இருக்க முடியும். ஜனநாயக வழிமூலம் தலைமைகள் தெரிவு செய்யப்படும் ஒரு சமூகத்தில் ஆகப்பெரிய மக்கள் ஆணையைப் பெற்ற கட்சியை அழைத்துப் பேசுகிறார்கள்.

ஆயுதப் போராட்டங்கள் நடக்கும் இடங்களில் வலிமையான இயக்கத்தை அழைத்துப் பேசுகிறார்கள். கடந்த 16 ஆண்டுகளாக தமிழ் மக்களைப் பொறுத்தவரை முதலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலமான ஒரு பிரதிநிதித்துவமாக இருந்தது. ஆனால் அது படிப்படியாக உடைந்து போய் இப்பொழுது தமிழரசுக் கட்சி ஒப்பீட்டளவில் பெரிய கட்சியாக இருக்கின்றது.

உள்ளதில் பெரிய மக்கள் அணையை பெற்ற கட்சியோடு தான் வெளிநாடுகள் பேசும். ஆனால் அதற்காக அந்தக் கட்சி மட்டும் தான் அந்த மக்கள் கூட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது என்பதல்ல. அது ஒப்பீட்டளவில் அதிக தொகை மக்களின் ஆணையைப் பெற்றிருக்கிறது என்று பொருள். எனவே இந்த விடயத்தில் தமிழ்த் தரப்பிடம் ஒற்றுமை இல்லை என்று கூறிக் கொண்டிருக்கும் வெளிச் சமூகமானது, பொறுப்புக்கூறலில் தனக்குள்ள பொறுப்பைத் தட்டிக் கழிப்பதற்கு அதை ஒரு சாட்டாக முன் வைக்கின்றதா? என்பதையும் ஆழமாக பார்க்க வேண்டும்.

ஆனால் இப்பொழுது தமிழ்மக்கள் மத்தியில் ஒப்பீட்டளவில் பெரிய ஆணையைப் பெற்ற தனிக் கட்சி எது? தமிழ்ப் பகுதிகளில் பெரிய கட்சியாகிய தமிழரசுக் கட்சி பெற்ற அதே அளவு ஆசனங்களை தேசிய மக்கள் சக்தி அதாவது அரசாங்கமும் பெற்றிருக்கிறது. அதாவது தமிழ்மக்களின் ஆணை எனக்கும் உண்டு என்று அரசாங்கம் சொல்லக்கூடிய ஒரு நிலைமை தோன்றியிருக்கிறது. அதை ஒரு பெருமைக்குரிய அடைவாக அரசாங்கம் ஜெனிவாவில் வைத்து கூறுகிறது. புதுடில்லியில் வைத்து கூறுகிறது. ஏனைய உலக தலைநகரங்களில் வைத்துக் கூறுகிறது. இது கடந்த 16 ஆண்டுகளில் இல்லாத ஒரு தோற்றப்பாடு.

எனவே இப்பொழுது தமிழ் மக்களின் நலன்கள் தொடர்பாக, நல்லிணக்கம் தொடர்பாக, பொறுப்புக்கூறல் தொடர்பாக இறுதித் தீர்வு தொடர்பாக நாங்களும் பேசுவோம் எங்களுக்கும் உரிமை உண்டு என்று அரசாங்கம் சொல்லும்.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் சிறீதரன் பேசிக் கொண்டிருக்கும் பொழுது அமைச்சர் பிமல் ரட்நாயக்க என்ன சொன்னார் என்பது




அந்தத் துணிச்சலில் இருந்து தான் வருகிறது.

தமிழரசு கட்சியின் ஆதரவாளர்கள் கடந்த பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்த வாக்குகளின் விகிதத்தை வைத்துக் கணக்குக் காட்டலாம். ஆனால் வெளித் தோற்றத்துக்கு தேசிய மக்கள் சக்தியானது தமிழரசு கட்சிக்கு நிகரான ஆசனங்களை பெற்றிருக்கிறது. தேர்தல் வெற்றிகளுக்கு பின்னால் இருக்கும் உட் கணக்குகள் அரசியல் விமர்சகர்களுக்கு உரியவை. ஆனால் சாதாரண மக்களுக்கும் உலக சமூகத்திற்கும் வெளியே காட்டப்படுவது இத்தனை ஆசனங்கள் என்பது தான். இந்தக் கணக்கை மாற்றுவதற்குத் தான் கஜேந்திரகுமார் ஒர் ஐக்கிய முயற்சியில் ஈடுபட்டார். ஆனால் தமிழரசுக் கட்சி ஒத்துழைக்கவில்லை.

தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்த இந்த வெற்றிக்கு முழுக்க முழுக்க தமிழ் தேசியக் கட்சிகளே பொறுப்பு. தமிழ்த் தேசிய கட்சிகள் விட்ட பிழைகளின் விளைவு அது. யார் என்றே தெரியாத வேட்பாளர்களுக்கு தமிழ் மக்கள் வாக்களித்தமை அதனால் தான்

அதே தவறு இப்பொழுதும் தொடர்கிறது. முன்னைய ஐநா கூட்டத் தொடர்களைப் போலன்றி தேசிய மக்கள் சக்தியின் வெற்றிக்குப் பின்னரான ஐநா கூட்டத் தொடர்களில் தமிழ்த் தரப்பின் நிலைமை பலவீனமாக இருக்கிறது என்பதனை தமிழ்க் கட்சிகள் நன்கு அறியும். ஐநா மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை வருகைக்குப் பின் அவர் கூறிய கருத்துக்களிலிருந்தும் அதை உணரக் கூடியதாக இருந்தது.

ஆனால் தமிழ்ப் பகுதிகளில் என்பிபி பெற்ற வெற்றிகளுக்குப் பின் ஐநாவை எதிர் கொள்வது தொடர்பில் தமிழ்த் தேசிய கட்சிகளிடம் குறிப்பாக தமிழரசுக் கட்சியிடம் ஒன்றிணைந்த வியூ கம் எதுவும் இல்லை.

அதாவது தோல்விகளிலிருந்து அவர்கள் குறிப்பாக தமிழரசு கட்சி கற்றுக் கொள்ளவேயில்லை. விளைவாக இம்முறை ஐநாவுக்கு தமிழ்த் தேசியப் பேரவை ஒரு கடிதம் அனுப்பியது. தமிழரசுக் கட்சி ஒரு கடிதம் அனுப்பியது. போதாக்குறைக்கு சிவில் சமூகங்களும் இரண்டாகப் பிரிந்து நின்று கடிதம் அனுப்பின

.கட்சிகளுக்கு இருந்த நோய் சிவில் சமூகங்களையும் தொற்றிக் கொண்டு விட்டது. இவை தவிர புலம் பெயர் தமிழ் அமைப்புகளும் ஐநாவுக்கு கடிதங்களை அனுப்பின. ஆனால் தாயகமும் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளும் இணைந்து கட்சிகளும் குடிமக்கள் சமூகங்களும் இணைந்து ஒரே கடிதத்தை அனுப்ப முடியவில்லை. அதாவது ஜெனிவாவில் அரசாங்கம் தனக்கும் தமிழ் மக்களின் ஆணை உண்டு என்று கூறுகின்ற ஓர் அனைத்துலகச் சூழலில் தாயகத்தில் தமிழ்க் கட்சிகள் தொடர்ந்து தங்களுக்கிடையே பிடுங்குப்படுகின்றன சிவில் சமூகங்களும் பிடுங்குப்படுகின்றன.

தமிழ் ஊடகங்களை மட்டும் நுகரும் தமிழ் மக்கள், தமிழ் சமூக வலைத் தளங்களை மட்டும் நுகரும் தமிழ் மக்கள், செம்மணி என்ற உணர்ச்சிப் புள்ளிக்கூடாக ஐநாவைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் ஐநாவோ அல்லது இந்தியாவோ அல்லது அமெரிக்காவோ அல்லது ஐரோப்பிய சமூகமோ நிகழும் ஐநா கூட்டத் தொடரை செம்மணிக் கூடாகப் பார்க்கவில்லை.

ஐநா மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கைகளில் செம்மணியைப் பற்றிய சில வாசகங்கள் உண்டு. அவ்வளவு தான். அதற்குமப்பால் அரசாங்கத்துக்கு ஒரு வாய்ப்பை வழங்க வேண்டும் என்று தான் ஐநா சிந்திப்பதாகத் தெரிகிறது. நிகழும் ஐநா கூட்டத்தொடர் அதைத் தான் உணர்த்துகின்றது. கடந்த ஒன்பதாம் திகதி வெளியிடப்பட்ட உத்தேச தீர்மான வரைபு-இது இறுதியானது அல்லவெனினும் -அதைததான் உணர்த்துகின்றது.

நிகழும் ஐநா கூட்டத் தொடரில் இந்தியா வழமை போல 13வது திருத்தத்தை முழுமையாக அமலபடுத்த வேண்டும், மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்று கேட்டிருக்கிறது. ஏறக்குறைய ஐநாவின் நிலைப்பாடும் அது தான் என்று ஊகிக்கத்தக்க விதத்தில் தான் ஐநாவின் உத்தேச தீர்மான வரைபு காணப்படுகிறது. இந்தியாவையும் ஐநாவையும் கவர்வதற்காகவும், ஐநாவிற்குரிய வீட்டு வேலைகளைச் செய்வதன் மூலம் தனது நிலைப்பாட்டை மேலும் பலப்படுத்துவதற்காவும் அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை வரும் ஆண்டில் நடத்தக்கூடும். அப்படி ஒரு நிலைமையை முன்னுணர்ந்து தமிழ்க் கட்சிகள் ஏதாவது தயாரிப்புடன் காணப்படுகின்றனவா?

இப்போதுள்ள ஒப்பீட்டளவில் பெரிய கூட்டு ஆகிய தமிழ்த் தேசியப் பேரவை ஈடாடிக் கொண்டிருக்கிறது. அந்தக் கூட்டுக்குள் காணப்படும் மற்றொரு கூட்டு ஆகிய டிரிஎன்ஏயில் அங்கம் வகிக்கும் ஈபி.ஆர்.எல்.எப் 13ஆவது திருத்தம் குறித்த கருத்தரங்குகளைத் தமிழ்ப் பகுதிகளில் நடத்தி வருகிறது. இது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் ஈபி.ஆர்.எல்.எப்இற்கும் இடையிலான முரண்பாடுகளை ஆழமாக்கக் கூடியது. அது அதன்விளைவாக டிரினேக்கும் தமிழ்த் தேசியப் பேரவைக்கும் இடையிலான முரண்பாடுகளையும் ஆழமாக்கக்கூடியது.

தமிழரசுக் கட்சிக்குள் சுமந்திரன் அணியானது டி.ரி.என்.ஏயை நெருங்குவதாகவும் தெரிகிறது. வவுனியாவில் நடந்த 13ஆவது திருத்தம் குறித்த கருத்தரங்கில் சுமந்திரன் கலந்து கொண்டார். சுமந்திரனைத் தனிமைப் படுத்த அல்லது தமிழரசுக் கட்சியைத் தனிமைப்படுத்தத் தான் தமிழ்த் தேசியப் பேரவை என்ற கூட்டு உருவாக்கப்பட்டது என்று தமிழரசுக் கட்சி கருதுகின்றது.

எனவே அதற்கு எதிர் வியூகமாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை தனிமைப்படுத்தும் நோக்கத்தோடு சுமந்திரன் டி.ரி.என்.ஏயை நெருங்கி வரும் வாய்ப்புகள் அதிகமுண்டு.

எதிர்கால தேர்தல்களில் யாரோடு நின்றால் கூடுதலான வெற்றிகளைப் பெறலாம் என்று டிரிஎன்னே -வழமை போல சிந்திக்குமாக இருந்தால் அனேகமாக தமிழ்த் தேசியப் பேரவை உடையக்கூடிய வாய்ப்புகள்தான் அதிகம்.

தமிழ்த் தேசியப் பேரவையை உருவாக்கிய பொழுது கஜேந்திரக்குமார் ஒரு வசனம் சொன்னார். இந்தக் கூட்டு உடையுமானால் அதைத் தமிழ் மக்கள் தாங்கிக் கொள்ள மாட்டார்கள் என்று. அதில் அரைவாசி உண்மை உண்டு.

முள்ளிவாய்க்காலைக் கடந்து வந்த மக்களுக்கு இது போன்ற கூட்டுக்கள் உடைவது பெரிய இழப்பில்லை. ஆனாலும் தேசிய மக்கள் சக்திக்கு வெற்றி வாய்ப்புகளை அதிகப் படுத்தக் கூடிய உடைவுகள், சிதறல்கள் போன்ற ஒப்பீட்டளவில் இழப்புகள் தான். அதை நிகழும் ஐநா கூட்டத்தொடரில் உணரக்கூடியதாக உள்ளதல்லவா?

- நிலாந்தன் -

# பாலஸ்தீனத்தின் இன்றைய நிலைக்கு பிரிட்டன் காரணமா?

# இரு நாடு தீர்வை தற்போது முன்னெடுப்பது ஏன்?

இருப்பது போன்றும், இல்லாதது போன்றும் தோன்றும் ஒரு நாடு தான் பாலத்தீனம். அதற்கு பல நாடுகளின் அங்கீகாரம் உள்ளது. வெளிநாடுகளில் தூதரகங்கள் உள்ளன. ஒலிம்பிக் உட்பட பல சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பாலத்தீன அணிகள் பங்கேற்கின்றன.

ஆனால் இஸ்ரேலுடனான நீண்டகால மோதலின் காரணமாக, பாலத்தீனத்துக்கு உலகளவில் ஒப்புக்கொள்ளப்பட்ட எல்லைகளும் இல்லை, தலைநகரமும் இல்லை, இராணுவமும் இல்லை.




மேற்குக் கரை இஸ்ரேலின் இராணுவக் கட்டுப்பாட்டில் இருப்பதால், 1990களில் அமைக்கப்பட்ட பாலத்தீன ஆட்சி தன் நிலம், தன் மக்களை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியவில்லை. காஸா பகுதியும் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பில் இருந்து, இப்போது பேரழிவு தரும் போரின் மத்தியில் சிக்கியுள்ளது.

பாலத்தீனத்தின் 'அரை-நாடு' (Quasi state) என்ற நிலைமையால் உலக நாடுகள் தரும் அங்கீகாரம் பெரும்பாலும் ஒரு குறியீடாகவே பார்க்கப்படுகிறது. இது தார்மீக மற்றும் அரசியல் ஆதரவை வெளிப்படுத்தலாம். ஆனால் அங்கு வாழும் மக்களின் நிலைமையில் பெரிய மாற்றம் ஏற்படுத்துவதில்லை.

ஆனால் அந்த குறியீட்டு அர்த்தம் (symbolism) மிக வலுவானது. இரு நாடுகள் தீர்வை ஆதரிக்க பிரிட்டனுக்கு ஒரு சிறப்பு பொறுப்பு உள்ளது என ஜீலை மாதம் ஐ.நா.வில் உரையாற்றிய போது முன்னாள் பிரிட்டன் வெளியுறவுச் செயலர் டேவிட் லாம்மி கூறினார்.

1917-ஆம் ஆண்டு வெளியான பால்ஃபோர் பிரகடனத்தை அவர் குறிப்பிட்டார். அப்போது வெளியுறவுச் செயலராக இருந்த ஆர்தர் பால்ஃபோர் அதில் கையெழுத்திட்டார். அந்தப் பிரகடனத்தில் யூத மக்களுக்கு பாலத்தீனில் ஒரு தேசிய இல்லம் அமைப்பதற்கு' பிரிட்டன் ஆதரவு தரும் என முதன்முறையாக அறிவித்திருந்தது. முதல் உலகப் போருக்குப் பிறகு, 1922 முதல் 1948 வரை, 'லீக் ஆஃப் நேஷன்ஸ்' ஆணையின் கீழ் பாலத்தீனத்தை நிர்வகிக்கும் பொறுப்பு பிரிட்டனுக்குக் கொடுக்கப்பட்டது.

அந்த ஏற்பாட்டின்படி போரில் தோற்ற ஜெர்மனி மற்றும் ஒட்டோமான் பேரரசுகளின் நிலங்களை மற்ற நாடுகள் நிர்வகிக்க சட்டப்படி அனுமதி அளிக்கப்பட்டது. பிரிட்டன் அப்போது ஒரு நுட்பமான சமநிலையை பேண முயன்றது. (இது சாத்தியமற்றது என சிலர் கருதினார்கள்) .

ஒருபுறம் யூத மக்களுக்கு பாலத்தீனத்தில் ஒரு 'தேசிய இல்லம்' அமைக்க ஆதரவு தரும் என பிரிட்டன் வாக்குறுதி அளித்தது.

மறுபுறம், அங்கு வாழும் பெரும்பான்மையான அரேபியர்களின் உரிமைகளை பாதுகாப்பதாகவும் உறுதியளித்தது. இந்த இரு முரண்பட்ட வாக்குறுதிகளும், யூதர் மற்றும் அரபு சமூகங்களுக்கு இடையே அதிகரித்த பதற்றமும் சேர்ந்து, பல ஆண்டுகளாக அமைதியின்மையை ஏற்படுத்தின.

1948-ல் பிரிட்டன் அந்தப் பகுதியை விட்டு வெளியேறியது. அதன் பிறகு, இஸ்ரேல் ஒரு நாடாக அறிவிக்கப்பட்டதும், போர் வெடித்து, பல பாலத்தீனர்கள் தங்கள் நிலத்தை விட்டு இடம் பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது.

பல வரலாற்றாசிரியர்கள், பிரிட்டன் அந்த காலத்தில் எடுத்த நடவடிக்கைகளே இன்றைய இஸ்ரேல்—பாலத்தீன் மோதலுக்கான அடிப்படையாக அமைந்தது என்றும், பாலத்தீன பிரதேசத்தின் தீர்வு இன்னும் முடியாத சர்வதேச பிரச்னையாகவே உள்ளது என்றும் கூறுகிறார்கள்.

ஆனால் இஸ்ரேலை ஆதரிப்பவர்கள், 1917ல் வெளியான பால்ஃபோர் பிரகடனத்தில் பாலத்தீனர்களைப் பற்றிய எந்தக் குறிப்பும் இல்லை, அவர்களின் தேசிய உரிமைகள் பற்றி எதுவும் சொல்லப்படவில்லை என வாதிடுகிறார்கள்.

லாமி கூறியது போல, இப்போது 'இரு நாடுகள் தீர்வு' என்ற வார்த்தையை அரசியல்வாதிகள் அடிக்கடி பயன்படுத்துகிறார்கள். இரு நாடுகள் தீர்வு' என்பது, 1967 அரபு—இஸ்ரேல் போருக்கு முன்பிருந்த நிலையை அடிப்படையாகக் கொண்டு, மேற்குக் கரை மற்றும் காஸா பகுதிகளைச் சேர்த்து ஒரு பாலத்தீன நாடு உருவாக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது. இதில், கிழக்கு ஜெருசலேம் தலைநகரமாக இருக்க வேண்டும் என்பதும் அந்தக் கருத்தின் ஒரு பகுதியாகும்.

ஆனால் பல ஆண்டுகளாக நடந்த சர்வதேச முயற்சிகள் எந்தச் சிறப்பான முடிவையும் தரவில்லை. மேற்குக் கரையில் இஸ்ரேல் அமைத்த குடியேற்றங்கள், சர்வதேச சட்டப்படி சட்டவிரோதமானவையாக இருந்தாலும், 'இரு நாடுகள் தீர்வு' என்ற கருத்தை வெறும் கோஷமாகவே மாற்றி விட்டன.

ஐ.நா.வின் 193 உறுப்பு நாடுகளில் சுமார் 75வீத நாடுகள் தற்போது பாலத்தீனத்தை அங்கீகரித்துள்ளன. ஐ.நா.வில், பாலத்தீனத்திற்கு 'நிரந்தர பார்வையாளர் நாடு' என்ற அந்தஸ்து உள்ளது. அதனால் பாலத்தீன் கூட்டங்களில் பங்கேற்கலாம், ஆனால் வாக்களிக்கும் உரிமை இல்லை.

சமீபத்தில், ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தில் பிரிட்டன், பிரான்ஸ், கனடா, ஆஸ்திரேலியா, பெல்ஜியம் மற்றும் மால்டா ஆகிய நாடுகள் பாலத்தீனத்தை அங்கீகரிப்பதாக உறுதியளித்துள்ளன. இதனால், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் ஐந்து நிரந்தர உறுப்பினர்களில் நான்கு பேர் விரைவில் பாலத்தீனத்திற்கு ஆதரவளிக்கவுள்ளனர்.

சீனாவும் ரஷ்யாவும் 1988 இல் பாலத்தீனத்தை அங்கீகரித்தன. இதனால், இஸ்ரேலின் மிக வலுவான கூட்டாளியான அமெரிக்கா மட்டும் தனியாக நிற்கும் நிலை உருவாகிறது. அமெரிக்கா 1990களின் நடுப்பகுதியில், மஹ்மூத் அப்பாஸ் தலைமையிலான பாலத்தீனிய அதிகாரத்தை அங்கீகரித்தது.

அதன் பிறகு வந்த சில அமெரிக்க அதிபர்கள், பாலத்தீன நாடு உருவாக வேண்டும் என்று ஆதரவு தெரிவித்தனர். ஆனால் டொனால்ட் டிரம்ப் மட்டும் அதற்கு எதிராக இருந்தார். அவரது ஆட்சிக் காலங்களில், அமெரிக்காவின் கொள்கை முழுமையாக இஸ்ரேலை ஆதரிக்கும் வகையில் இருந்தது.

தொடர்ச்சியாக வந்த பிரிட்டிஷ் அரசாங்கங்கள், பாலத்தீனத்தை ஒரு நாடாக அங்கீகரிக்க வேண்டும் என்று பேசியுள்ளன. ஆனால் அந்த அங்கீகாரம் சமாதான முயற்சியின் ஒரு பகுதியாகவும், மேற்கத்திய கூட்டாளிகளுடன் இணைந்து, 'மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தும் தருணத்தில்' மட்டுமே செய்யப்பட வேண்டும் என்ற எண்ணமே அவர்களுக்கு இருந்தது. அதை வெறுமனே ஒரு குறியீடாகச் செய்வது தவறு என அரசுகள் நம்பின. அது மக்கள் மனதில் நல்லதொரு உணர்வை ஏற்படுத்தலாம், ஆனால் அங்கு உண்மையான மாற்றம் ஏற்படாது. ஆனால் சமீபத்திய நிகழ்வுகள் பல அரசாங்கங்களை செயலில் இறங்க வலியுறுத்தியுள்ளன.

காஸாவில் அதிகரித்து வரும் பட்டினி, இஸ்ரேலின் ராணுவ நடவடிக்கைகளுக்கு எதிரான உலகளாவிய கோபம், மற்றும் மக்களின் கருத்துகளில் ஏற்பட்ட பெரிய மாற்றங்கள் ஆகியவை இந்த நிலையை உருவாக்க முக்கிய காரணங்களாக அமைந்துள்ளன.

காஸா பகுதியில் 'பஞ்சத்தின் மிக மோசமான நிலைமை தற்போது உருவாகி வருகிறது' என்று ஐ.நா. ஆதரவு பெற்ற உலக உணவு பாதுகாப்பு நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். தொடர்ச்சியாக வந்த பிரிட்டிஷ் அரசாங்கங்கள், பாலத்தீனத்தை ஒரு நாடாக அங்கீகரிக்க வேண்டும் என்று பேசியுள்ளன.

ஆனால் அந்த அங்கீகாரம் சமாதான முயற்சியின் ஒரு பகுதியாகவும், மேற்கத்திய கூட்டாளிகளுடன் இணைந்து, 'மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தும் தருணத்தில்' மட்டுமே செய்யப்பட வேண்டும் என்ற எண்ணமே அவர்களுக்கு இருந்தது.

அதை வெறுமனே ஒரு குறியீடாகச் செய்வது தவறு என அரசுகள் நம்பின அது மக்கள் மனதில் நல்ல தொரு உணர்வை ஏற்படுத்தலாம்.

(25ம் பக்கம் பார்க்க)

# அரசியல் உரிமைகளும் அபிவிருத்தியும் தவறான அணுகுமுறை

(16ம் பக்கத் தொடர்ச)அரசின் திட்ட முன்னெடுப்புகள் தொடர்பான ஐயங்கள் எழுவது இயல்பு என்றாலும் அவற்றிற்கு பொருத்தமான வழிமுறைகளின் மூலம் தீர்வு காணப்படவேண்டும். எதிர்ப்புகளினால் அவற்றை அகற்றுவதற்குப் பதிலாக இணைந்து பொருத்தமான மாற்றங்களைச் செய்வதே மேலானது.

உதாரணமாக குறிப்பிட்ட ஒரு திட்டத்தினால் அதிகமான பாதிப்புகள் ஏற்படுமென அது சார்ந்த சமூகம் கருதுமானால் அது தொடர்பாக அச்சமூகத்தின் நம்பிக்கைக்குரிய வல்லுனர்களும் அரச தரப்பும் இணைந்து அதனை மீளாய்வு செய்வதற்கான வழிமுறைகளை நாடவேண்டுமேயன்றி தொடக்கத்திலேயே வீதிக்கு இறங்கக் கூடாது. எடுத்தேன் கவுண்டேன் அணுகுமுறையால் பாதிக்கப்படப் போவது மக்களும் அவர்களின் பிரதேசமும் என்பதை தொடர்புபட்டவர்கள் முதலில் மனங்கொள்ள வேண்டும். இதற்குச் சிறந்த உதாரணம் பொருத்து வீடுகளுக்கான எதிர்ப்புகள்.

இன்றைய பொருளாதார ஒழுங்கில் நாடுகளின் அபிவிருத்தி என்பது அரச முதலீடுகளாலன்றித் தனியார் மற்றும் கூட்டு முலீடுகளாலேயே பெரிதும் வடிவமைக்கப்படுகிறது. தேவைகளும் அதற்கான கதவுகளும் தமிழர் தாயகத்தில் திறந்தே கிடக்கின்றன. அது போலவே அதற்குத் தேவையான அறிவு, நுட்பம்,நிதி போன்றன உள்நாட்டிலும் புலம்பெயர் தேசங்களிலும் நிறைந்தே கிடக்கின்றன. ஆனால் அவற்றை ஒன்றிணைப்பதற்கான பொருத்தமான கட்டமைப்புகள் மட்டும் இன்னும் உருவாகவில்லை.

அதேவேளை புலம்பெயர் தேசத்தவர்களிடமிருந்தான நிதி உட்பாய்ச்சலானது பெருமளவுக்கு நுகர்வு சார்ந்தவையாகவே உள்ளன. புலம்பெயர் தேசத்து உறவுகளின் உதவிகள் பல மோசடிகளுக்குள்ளாகின்றன. பல்வேறு வடிவங்களில் பொதுத் தேவைகளுக்காக வரும் புலம்பெயர்தோர் நிதி உட்பாய்ச்சல்கள் ஒருமுகப்படுத்தப்படுவதுடன் அவை பெருமளவு உற்பத்தித் துறைசார் முதலீடுகளாக மாற்றப்படவேண்டும்.

இவ்விடயத்தில் புலம்பெயர் மக்களின் மனப்பாங்கும் அணுகுமுறைகளும் பெருமளவு மாறவேண்டும். கோடிக் கணக்கில் செலவு செய்து கோபுரங்களை எழுப்புவதை விட கோடிப்புற மக்களின் வாழ்வுயர முதலிடுவதே தமிழ் மக்களுக்கான தற்போதைய தேவையாகும். ஆன்மீகம் என்பது உயர்ந்து நிற்கும் கோபுரங்களாலாயோ அன்றி ஊர்பேசும் திருவிழாக்களாலாயோ வளரப்போவதில்லை. அருகிலுள்ள பள்ளி மாணவர் பலர் அரசினால் வழங்கப்பட்ட சீருடைக்கு மாற்றின்றி இருக்கும் போது அல்லது மக்களின் விடிவுக்காக தன்னுயிரை ஆகுதியாக்கியவன் குடும்பமொன்று அடுத்த வேளை உணவுக்கு ஏங்கும் போது ஆலயத்தில் ஆறு இலட்சங்கள் கொடுத்து மாம்பழமொன்றை வாங்குவதால் என்ன பயன் விளைந்து விடப் போகிறது? அவை வெறும் தற்பெருமைக்கும் ஊர்ப் பெருமைக்கும் மட்டுமே உதவும். ஊர் மக்களுக்கு எந்த வகையிலும் நன்மையளிக்கப் போவதில்லை.

புலம்பெயர் தேசங்களில் தங்கள் தங்கள் ஊர்ப்பெருமைகளை பறைசாற்றும் வகையில் அமைப்புகளும் ஒன்றுகூடல்களும் பரவலாக இடம் பெறுகின்றன. ஆனால் இவற்றுள் எத்தனை அமைப்புகள் நீண்டகால நோக்கில் தங்கள் ஊரிலுள்ள வறுமைக் கோட்டுக்குட்பட்ட மக்களுக்கான சுழற்சி முறைக் கடன்திட்ட ஏற்பாடுகளை அல்லது இளைஞர் யுவதிகளுக்கான தொழிற்பயிற்சிகளை அல்லது விவசாயம், சிறுகைத்தொழில்களை மேம்படுத்துவதற்கான அமைப்புக்களையும் உதவிகளையும் செய்து வருகின்றன? தமிழர் தாயகத்தில் இயங்கி வரும் நுண்கடன் நிறுவனங்கள் தொடக்கம் வங்கிகள் வரையிலான அத்தனை நிதி நிறுவனங்களில் ஒன்றுகூட தாயகத்தவர்க்குரியவை அல்லவே.

புதிதாக அமைக்கப்பட்ட மயிலிட்டி மீன்பிடித் துறையில் தென்பகுதி கடற்கலங்களே தரித்து நிற்கின்றன என கவலைப்படும் மீனவர்களின் உறவுகள் அல்லது ஊரவர்கள் எத்தனை பேர் புலம்பெயர் தேசத்தில் வசதியாக வாழ்கின்றனர். அவர்கள் ஒன்றிணைந்து அல்லது ஊர்மக்கள் ஒன்றிணைந்து நீண்டநாள் மீன் பிடிக்கலங்களை கொள்வனவு செய்து தொழிலையும் துறையையும் தம்வசப்படுத்த முடியாதா?

தமிழ்த்தரப்புகள் தங்கள் அணுகுமுறைகளை மாற்ற வேண்டியது எவ்வளவு அவசியமோ அதை விடப் பன்மடங்கு அவசியமானது ஆட்சியாளர்களின் அணுகுமுறையில் மாற்றமேற்படுவது. ஏனெனில் சிங்களத் தலைவர்களால் முன் மொழியப்பட்ட சமஷ்டியை புறமொதுக்கி ஐக்கிய இலங்கையை வலியுறுத்திய தமிழர்களை பின்னர் தனிநாட்டுக்காகப் போராடத் தூண்டியவர்கள் சிங்கள ஆட்சியாளர்கள் என்பதில் மாற்றுக்கருத்து இருக்கமுடியாது.

பாண்டவர்கள் நாடுகேட்டு பின் ஊர்கள் கேட்டு பின் வீடுகள் கேட்டு எதுவுமே மறுக்கப்பட்ட நிலையில் பாரதப்போர் தொடங்கியது போல மிதவாதத் தமிழ்த் தலைவர்கள் இயன்றவரை விட்டுக் கொடுத்து அனைத்து அணுகுமுறைகளையும் கையாண்டு எதுவும் பலனளிக்காதவிடத்தே தமிழர்களின் ஆயதப் போராட்டம் தொடங்கியது. சுதந்திரத்திற்கு முன்பிருந்தே தமிழ் மக்கள் மீது திட்டமிட்டு முடுக்கி விடப்பட்ட இனவொடுக்கல் அணுகுமுறை அம்மக்களுக்கு மட்டுமன்றி நாட்டுக்கே பெரும் கேடு விளைவித்துள்ள போதும் ஆட்சியாளர்கள் மாறினாலும் அவர்களின் அணுகுமுறைகளில் எந்தவித மாற்றமுமில்லாது தொடர்வது மட்டுமன்றி அது விரிவடைந்தும் செல்வதுமே வேதனையான விடயங்கள்.

இந்த நாட்டில் தேசிய இனம் என்ற வகையில் சிங்கள மக்களுக்கு உள்ள அத்தனை உரிமைகளும் தமிழ் மக்களுக்கு உள்ளது என்பதை ஏற்க மறுத்து பௌத்த சிங்கள மக்கள் என்ற பெருமரத்தில் படரும் கொடிகளாக தமிழ் மக்களை எண்ணி உரிமைகளுக்குப் பதிலாகச் சலுகைகளை வழங்கினால் போதுமென்ற எண்ணமே இன்றுவரை தொடர்கிறது.

இந்தவகையில் நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்துவோம் என உறுதியளித்து ஆட்சிக்கு வந்த அனுர அரசாங்கமும் சில விடயங்களில் முன்னேற்றகரமான பொது அணுகுமுறைகளைப் பின்பற்றினாலும் தமிழ் மக்களைப் பொறுத்து நம்பிக்கையளிக்கக் கூடிய எந்தவொரு முன்னெடுப்புகளையும் இதுவரை மேற்கொள்ளவில்லை என்பதே உண்மை. தமிழ் மக்கள் மீதான பாதுகாப்புத் தரப்பினரது கெடுபிடிகள் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதே தவிர அடிப்படையான எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காண்பதற்கான பிள்ளையார் சுழி கூட ஓராண்டு கடந்தும் இன்னும் இடப்படவில்லை.

தொடக்கத்தில் வழங்கப்பட்ட மட்டுப்பாடான அதிகாரங்களைக் கூட பின்னர் பிடுங்கிக் கோதாக்கப்பட்டுள்ள மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்குக் கூட அரசாங்கம் பின்னடிப்பது தெளிவாகத் தெரிகிறது.

முன்னைய ஆட்சியாளர்களைப் பொறுத்து தேவைக்கேற்ப அவ்வப்போது இனப்பிரச்சினை ஒன்று உள்ளது என்பதை உதட்டளவில் ஏற்றுக் கொண்டதுடன், அதற்கான அரசியல் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாதாக பாசாங்கு காட்டிக் காலத்தைக் கடத்திச் சென்றனர். ஆனால் அனுர அரசாங்கம் நாட்டில் இனப்பிரச்சினை உள்ளதாகவோ அதற்கு அரசியல் தீர்வு அவசியமென்றோ இதுவரை எங்கும் கூறவில்லை.

ஏனெனில் அவ்வாறானதொரு பிரச்சினை நாட்டில் இல்லை என்பதே அவர்களின் அடிப்படைச் சித்தாந்தம். இதனால் தான் புதிய அரசியலமைப்பில் மாகாணசபை முறைமை இருக்காது என்று கூறும் அவர்களால் அதில் தமிழர்க்கான அரசியல்தீர்வு என்ன என்பதை பற்றி எதுவும் கூற முடியாதுள்ளது. அவர்களின் பார்வையில் தமிழ் மக்களுக்கு இருப்பதெல்லாம் சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள் மட்டுமே. அவற்றைத் தீர்த்து விட்டால் எல்லாம் சரியாகி விடும் என்பது அவர்களின் கணிப்பு.

அந்த நோக்கில் தான் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கான சில சிறப்பு நிதிஒதுக்கீடுகளும் அபிவிருத்திக் கோசங்களும் முன்னெடுக்கப்படுகின்றன. அதன் ஒரு அங்கத்தான் எந்தவொரு நிதியாதாரமும் இல்லாத யாழ்ப்பாண சர்வதேச விளையாட்டரங்கத் திட்டத் தொடக்க நிகழ்வு. இவ்வாறான நிலைப்பாட்டில் இருப்பதால் தான் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக குரல் எழுப்பும் அரசியல் தலைவர்கள் அவர்களுக்கு இனவாதிகளாகத் தெரிகின்றனர்.

சென்ற பொதுத் தேர்தல் முடிவுகள் அவர்களின் அந்த நிலைப்பாட்டைத் தமிழ் மக்களும் ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்ற நிலைப்பாட்டுக்கு அவர்களைத் தள்ளியிருக்கலாம். ஆனால் அது சரியான மதிப்பீடல்ல. தேசிய இனமொன்று தனக்கேயுரித்தான அரசியல் உரிமைகளைக் கோருவது இனவாதமா அல்லது அவர்களைத் தேசிய இனமாக அங்கீகரிக்க மறுத்து, தொடர்ந்து இனவொடுக்கலில் ஈடுபடுவது இனவாதமா என்பதை தங்களை இடதுசாரிகள் என்றும் முற்போக்கானவர்கள் என்றும் கூறிக் கொள்வோர் முதலில் புரிந்து கொள்ளவேண்டும்.

அனுர அரசு நாட்டில் உண்மையான மாற்றத்தை விரும்பினால் வெளியில் தேசிய மக்கள் சக்தி என்ற போர்வையுடன் சமத்துவம்,ஒற்றுமை, நாமெல்லாம் இலங்கையர்கள் என்ற வார்த்தைகளை உச்சரித்துக் கொண்டு உள்ளே ஜே.வி.பியின் பௌத்த சிங்களப் பேரினவாத சிந்தனையுடன் தமிழ் மக்களை அணுகும் முறையிலிருந்து தன்னை முழுவதுமாக மாற்றிக் கொள்ள வேண்டும். தான் கொண்டு வரவுள்ளதாக கூறும் புதிய அரசியலமைப்பில் தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியற் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படுதன் மூலமே இலங்கையர் என்ற உணர்வைத் தமிழ் மக்களிடம் ஏற்படுத்த முடியும்.

அதைவிடுத்து தமிழ் மக்களுக்குத் தேவை அபிவிருத்தி என்றும் தமிழ்த் தலைவர்களை இனவாதிகள் என்றும் நோக்கும் அணுகுமுறை தொடருமானால் முன்னைய ஆட்சியாளர் எல்லாரும் ஏறிய குதிரையில் அனுரவும் ஏறிச் சறுக்கி விழுந்தார் என்ற கூற்று மெய்ப்படுவதாகவே இருக்கும்.



# 16 ஆண்டு கால ஐ.நா. மையத் தமிழ் அரசியல்!

எரித்திரியா ஆப்பிரிக்க கண்டத்தில் உள்ள ஒரு நாடு. எதியோப்பியாவிலிருந்து விடுதலை பெறுவதற்காக ஆயுதம் ஏந்திப் போராடிய ஒரு நாடு. 1980களில் ஈழ விடுதலை இயக்கங்கள் மத்தியில் எரித்திரியா ஒரு பிரகாசமான ஆபிரிக்க முன்னுதாரணமாகப் பார்க்கப்பட்டது. விடுதலைப்புலிகள் இயக்கத்தின் உத்தியோகபூர்வ பத்திரிகையில் எரித்திரியா பற்றி ஆழமான ஒரு கட்டுரை வெளிவந்தது. 1990களில் எரித்திரியா ஈழத் தமிழர்களின் ஆயுதப் போராட்டத்திற்கு மறைமுகமாக உதவி செய்தது என்ற ஊர்ஜிதமற்ற தகவல்கள் வெளிவந்தன.

இவையெல்லாம் பழைய கதைகள். புதிய கதை என்னவென்றால் இப்பொழுது நடந்து கொண்டிருக்கும் அறுபதாவது ஜெனிவா கூட்டத் தொடரில், எரித்திரியா தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தோடு உணர்வுத் தோழமையை வெளிப்படுத்தியுள்ளது என்பது தான்.

எரித்திரியா மட்டுமல்ல விடுதலைக்காகப் போராடிய வியட்நாம், கியூபா, தென் சூடான் போன்ற நாடுகளும் ஜெனிவாவில் இலங்கை அரசாங்கத்தோடு தான் நிற்கின்றன. அவை மட்டுமல்ல, எந்த எத்தியோப்பியாவிடமிருந்து விடுதலை பெறுவதற்காக எரித்திரியா போராடியதோ அந்த எத்தியோப்பியாவும் அரசாங்கத்தோடு தான் நிற்கின்றது.

இந்த நாடுகள் மட்டுமல்ல இப்பொழுதும் இன அழிப்புக்கு உள்ளாகும் பலஸ்தீனம் யாரோடு நிற்கின்றது? காசாவில் நடக்கும் இனஅழிப்புக்கு எதிராக தமிழ் மக்கள் பலஸ்தீனர்களின் பக்கம் தான். ஆனால் 2009க்குப் பின் பலஸ்தீன் அதிகார சபை மகிந்த ராஜபக்சவை அங்கே ஒரு விருந்தினராக அழைத்து நாட்டின் உயர் விருதை அவருக்கு வழங்கியது. அது மட்டுமல்ல அவருடைய பெயரில் ஒரு வீதியையும் திறந்து வைத்தது.

போராடும் நாடுகளும் போராடி வெற்றி பெற்ற நாடுகளும் விடுதலைக்காகப் போராடும் ஒரு மக்கள் கூட்டத்தை ஆதரிக்க வேண்டும் என்பதுதான் அறம். ஆனால் இந்த நாடுகள் ஜெனிவாவில் யாரோடு நிற்கின்றன? ஏன் அப்படி நிற்கின்றன?

ஏனென்றால் அது அரசுக்கும் அரசுக்கும் இடையிலான கட்டமைப்பு சார் உறவு.அந்த உறவில் அறம்,நீதி, நியாயம் போன்றவை கிடையாது. ஐநா என்பது முதலாவதாக அரசுகளின் அரங்கம். அங்கு அரசுகளின் நலன்களை முதன்மைப்படுத்தி தான் முடிவுகள் எடுக்கப்படும். அரசுகள் எப்பொழுதும் தமது இராணுவ பொருளாதார அரசியல் நலன்களின் அடிப்படையில் தான் முடிவுகளை எடுக்கின்றன. நீதி நெறிகள் அறநெறிகளின் அடிப்படையில் அல்ல. நீதிநெறிகளும் அறநெறிக் கதைகளும் எமது பாலர் பாடசாலைப் புத்தகங்களில் தான் உண்டு. ஐநாவில் இல்லை.

கடந்த 16 ஆண்டுகளாக ஜெனிவாவில் அரசுகள் எடுக்கும் முடிவுகளையும் அந்த அரசுகளின் அரங்கில் வெளியிடப்படும் உத்தியோகபூர்வ அறிக்கைகளையும் அங்கு நிறைவேற்றப்படும் தீர்மானங்களையும் தொகுத்துப் பார்த்தால் அது தெளிவாக தெரியும். கடந்த 16 ஆண்டுகளாக ஜெனிவாவில் இந்தியா திரும்பத் திரும்ப 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த வேண்டும் என்பதைத் தான் ஒரு தீர்வாக முன் வைத்து வருகிறது.

இம்முறையும் கடந்த எட்டாம் திகதி இந்தியாவின் ஐநாவுக்கான பிரதிநிதி பேசும்போது இலங்கையின் யாப்பை முழுமையாக நிறைவேற்ற வேண்டும், அதாவது 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த வேண்டும் என்பதைத் தான் வலியுறுத்திப் பேசினார். இந்தியா இதை இப்பொழுது தான் சொல்கிறது என்பதல்ல.

கடந்த 16 ஆண்டுகளாக சொல்லி வருகிறது. இந்தியா மட்டுமல்ல ஐநாவின் உத்தியோகபூர்வ அறிக்கைகளிலும் 13ஆவது திருத்தம் பற்றிக் கூறப்படுகிறது. கடந்த ஒன்பதாம் திகதி வெளியிடப்பட்ட ஐநாவின் உத்தேச தீர்மான வரைபிலும் அது உண்டு. அது மட்டுமல்ல கடந்த 16 ஆண்டுகளாக ஐநா மற்றொரு விடயத்தை திரும்பத்திரும்ப கூறி வருகிறது.

என்னவென்றால் பொறுப்புக்கூறல்




என்ற விடயத்தில் இலங்கை அரச படைகள் மட்டுமல்ல விடுதலைப்புலிகளும் பொறுப்புக்கூற வேண்டும் என்பதுதான். இதுவும் ஐநா மனித உரிமைகள் ஆணையாளருடைய அறிக்கையில் உண்டு. உத்தேச தீர்மான வரைபிலும் உண்டு. எனவே கடந்த 16 ஆண்டுகளாக ஐநாவில் மாறாத விடயங்கள் சில உண்டு. அவற்றை மாற்ற ஏன் தமிழ் மக்களால் முடியவில்லை?

ஏனென்றால் தமிழ் மக்கள் ஓர் அரசில்லாத தரப்பு. ஏதாவது ஒரு அரசுக்கூடாகத் தான் தங்களுடைய நிலைப்பாட்டை அங்கே வலியுறுத்தலாம் போராடலாம்.

நிகழும் ஐநா கூட்டத் தொடரில் ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் வாசித்த அறிக்கை தமிழ் மக்களுக்கு உற்சாகமூட்டக் கூடியதாக இல்லை. ஆனால் அதற்காக ஐநா மனித உரிமைகள் ஆணையாளரை திட்டிக் கொண்டிருக்க முடியாது. ஏனென்றால் முதலாவதாகவும் கடைசியாகவும் அவர் ஒரு இராஜதந்திரி. அவரை மனித உரிமைகளின் காவல் தெய்வம் அல்ல. அவர் ஒரு தேவதையும் அல்ல. இராஜதந்திரிகள் எப்பொழுதும் இராஜ தந்திரமாகத் தான் பேசுவார்கள் அறிக்கை விடுவார்கள். எனவே இந்த விடயத்தில் தமிழ் மக்கள் ஐநாவில் தமக்குள்ள வரையறைகளை விளங்கிக் கொள்ள வேண்டும்.

கடந்த 16 ஆண்டுகளாக நீதிக்கான தமிழ்மக்களின் போராட்டத்தை நிர்ணயிக்கக் கூடிய விடயங்களில் ஐநாவில் பெரிய மாற்றங்கள் ஏற்படவில்லை.

அதிலும் முக்கியமாக ஐநாமைய தமிழ் அரசியலில் தமிழ்மக்கள் தொகுத்து பார்க்க வேண்டிய ஒரு முக்கிய விடயம் உண்டு. வரையறுக்கப்பட்ட ஆணையைக் கொண்ட மனித உரிமைகள் பேரவையில்தான் இலங்கைக்கான பொறுப்பு கூறல் கையாளப்பட்டு வருகிறது. மனித உரிமைகள் பேரவையானது தனது தீர்மானங்களை ஏற்றுக் கொள்ள மறுக்கும் ஒரு நாட்டின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கவோ அல்லது தடைகளை விதிக்கவோ முடியாது. மாறாக, குறிப்பிட்ட நாடு ஏற்றுக் கொண்டால், ஐநாவில் அந்த நாட்டின் இணை அனுசரணையோடு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றலாம். இல்லையென்றால் அந்த நாட்டுக்கு எதிராக தீர்மானத்தை நிறைவேற்றலாமே தவிர அந்த நாட்டுக்கு எதிராக துலக்கமான விதங்களில் நடவடிக்கைகளை எடுக்க முடியாது.

எனவே இலங்கை இனப்பிரச்சனை மனித உரிமைகள் பேரவைக்குள் பெட்டி கட்டப்பட்டிருக்கிறது என்பதனை தமிழ்மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். அதனை மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே கொண்டு போக உலக சமூகம் விரும்பவில்லை என்பதையும் விளங்கிக் கொள்ள வேண்டும். அது ஓர் அரசியல் தீர்மானம். தமிழ் மக்களின் விவகாரத்தை எந்த அவைக்குள் வைத்திருப்பது என்பது. அதனால் தான் கடந்த 2021ஆம் ஆண்டு தமிழ்க்கட்சிகள் கூட்டாகக் கடிதம் எழுதிய பின்னரும்



சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான அலுவலகம் ஐநா மனித உரிமைகள் ஆணையகத்துக்கு உள்ளேயே அமைக்கப்பட்டது.

கடந்த 16 ஆண்டு கால ஐநா மையத் தமிழ் அரசியலில் 2015ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நிறைவேற்றப்பட்ட ஐநா தீர்மானத்தின் பிரகாரம் நிலைமாறுகால நீதியை நாட்டில் முன்னெடுப்பதற்கு ஐநா முயற்சித்தது. அப்போது இருந்த இலங்கை அரசாங்கமும் அதற்கு இணை அனுசரணை வழங்கியது.ஆனால் 2021ல் நிலைமாறுகால நீதியின் தமிழ்ப் பங்காளியாகிய சுமந்திரனே சொன்னார் அது தோல்வியடைந்த பரிசோதனை என்று.


அதன்பின் 2021ஆம் ஆண்டுத் தீர்மானத்தின் பிரகாரம் சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான அலுவலகம் ஐநாவில் இயங்குகிறது. கவனிக்கவும், அந்த அலுவலகம் ஐநா மனித உரிமைகள் ஆணையாளருடைய அலுவலகத்துக்குள் தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதாவது அந்த சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான வழிமுறையும் கூட வரையறுக்கப்பட்ட ஆணையை கொண்ட மனித உரிமைகள் ஆணையகத்துக்குள்தான் பெட்டி கட்டப்பட்டிருக்கிறது. ஏனெனில் அது ஓர் அரசியல் தீர்மானம்.எனினும் அந்த அலுவலகத்தைச் சேர்ந்தவர்களுக்கு இலங்கைக்குள் வருவதற்கு இன்றுவரை இலங்கை விசா வழங்கப்படவில்லை.

அந்த அலுவலகத்தை ஓர் அடைவாகச் சுட்டிக் காட்டும் தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்கள் உண்டு. அந்த அலுவலகத்தில் திரட்டப்பட்ட சான்றுகள் சாட்சிகளின் அடிப்படையில்தான் இலங்கை அரச படைகளின் பிரதானிகள் சிலருக்கு எதிராகவும் ராஜபக்சக்களுக்கு எதிராகவும் கனடா, அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் தடைகளை விதித்திருப்பதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். ஆனால் இந்தத் தடைகள் யாவும் போரை நடத்திய சில தளபதிகளுக்கும் ராஜபக்சங்களுக்கும் எதிராகத் தான். இலங்கை அரசுக் கட்டமைப்புக்கு எதிராக அல்ல. மேலும் அந்த அலுவலகத்தில் சேகரிக்கப்படும் சான்றுகள் எவ்வாறு அனைத்துலக நீதிமன்றங்களை நோக்கி நீதி விசாரணைக்குரிய பொருத்தமான ஆவணங்களாக முன்னகர்த்தப்படும் என்பதில் தனக்கு சந்தேகங்கள் உண்டு என்று கஜேந்திரக்குமார் தெரிவித்தார். இந்த விடயத்தில் தன்னுடைய தனிப்பட்ட சாட்சியமே எவ்வாறு கையாளப்பட்டது என்ற உதாரணத்தையும் அவர் சுட்டிக்காட்டினார்.


ஐநாவுக்கு ஒரு கூட்டுக் கடிதத்தை எழுதுவதற்காக ரில்கோ ஹோட்டலில் நடந்த சந்திப்பில் வைத்து அவர் அதைச் சொன்னார். எனவே இப்பொழுது தொகுத்துப் பார்க்கலாம். கடந்த 16ஆண்டுகால ஐநாமைய தமிழ் அரசியலானது வரையறுக்கப்பட்ட ஆணையைக் கொண்ட மனித உரிமைகள் பேரவைக்குள் பெட்டி கட்டப்பட்டிருக்கிறது. அது ஓர் அரசியல் தீர்மானம்.

கடந்த 16ஆண்டுகளாக இந்தியா திரும்பத் திரும்ப 13தான் தீர்வு என்று கூறுகிறது.ஐநா திரும்பத் திரும்ப போரில் ஈடுபட்ட இரண்டு தரப்புக்களும் பொறுப்புக் கூற வேண்டும் என்று கூறுகிறது. ஆனால் தொடர்ச்சியாக(22ம் பக்கம் பார்க்க)


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! சுப நிகழ்ச்சிகளில் இருந்து வந்த தடை நீங்கும். மனசோர்வு அகலும். மன அமைதி பாதிக்கும்படியான சூழ்நிலை ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரத்தில் அதிக லாபம் பெறுவர். அலுவலக வேலைகளால் அலைச்சல் உண்டாகும். குடும்பத்தில் இருப்பவர்களின் செயல்களால் வீண் டென்ஷன் ஏற்படும். கணவன் மனைவிக்கிடையே மனம் விட்டு பேசி செயல்படுவது நன்மை தரும்.





ரிஸபராசி அன்பர்களே! மனத் துணிவு உண்டாகும். எந்த ஒரு காரியத்தையும் துணிவுடன் செய்து அதிக நன்மை அடைவீர்கள். போட்டி பந்தயங்களில் ஈடுபடுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். உறவினர்களுடன் பேசும் போது நிதானத்தை கடைப் பிடிப்பது நல்லது. புரட்டாதி சனிக்கிழமைகளில் சனிபகவானுக்கு தீபம் ஏற்றி வழிபடவும்.





மிதுனராசி அன்பர்களே! முன்பு தடைபட்ட காரியங்கள் எவ்வித இடையூறுமின்றி நடந்து முடியும். வெளியூர் பயணங்கள் உண்டாகும், அதனால் நன்மையும் ஏற்படும். வழக்குகளில் இருந்து வந்த சோதனைகள் மாறும். சொத்து சம்பந்தமான விஷயங்களில் இருந்து வந்த தடைகள் அகலும். நண்பர்கள் பல விதங்களிலும் ஆதரவாக இருப்பர். தொழில் வியாபாரத்தில் இருந்த இடையூறுகள் குறையும். கணவன் மனைவிக்கிடையே மகிழ்ச்சி நீடிக்கும்.





கடகராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியம் சாதகமாக நடந்து முடியும்.தொழில் வியாபாரத்தில் கூடுதல் அலைச்சல் இருந்தாலும் முடிவில் சாதகமான பலன் கிடைக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகள் ஆதரவு கிடைக்கும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். கணவன், மனைவி பிரச்னைகளை நிதானமாக பேசுவது நல்லது.





சிம்மராசி அன்பர்களே! எதிர்பாராத நல்ல திருப்பம் உண்டாகும். திட்டமிட்ட காரியம் திட்டமிட்டபடியே நடக்கும். வழக்குகளில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். தொழில் வியாபாரத்தில் மேன்மை உண்டாகும். வியாபார போட்டிகளில் சாதகமான பலன் கிடைக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பர்.




கன்னிராசி அன்பர்களே! எதிர்பாராத நல்ல திருப்பம் உண்டாகும். திட்டமிட்ட காரியம் திட்டமிட்டபடியே நடக்கும். வழக்குகளில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். தொழில் வியாபாரத்தில் மேன்மை உண்டாகும். வியாபார போட்டிகளில் சாதகமான பலன் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பர். நிலுவையில் உள்ள தொகை வந்து சேரும். கணவன், மனைவி உறவு மகிழ்ச்சிகரமாக இருக்கும்.




துலாம்ராசி அன்பர்களே! நினைத்த காரியத்தை செய்து முடிப்பதில் வேகம் காட்டுவீர்கள். தொழில் வியாபாரத்தில் ஏற்படும் பணதேவையை சரிகட்ட நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு அலுவலகம் தொடர்பான வேலைகளில் அலைச்சல் இருக்கும். மேலிடத்திலிருந்து கனிவான உபசரிப்பு கிடைக்கும். குடும்பத்தில் அனுகூலமான பலன்கள் உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே பழைய விஷயங்களை பேசாமல் இருப்பதன் மூலம் ஒற்றுமை இருக்கும்.





விருச்சிகராசி அன்பர்களே! எதிர்ப்புகள் நீங்கி எதிலும் உற்சாகம் உண்டாகும். மனமகிழ்ச்சிக்காக பணம் செலவு செய்ய தயங்க மாட்டீர்கள். நண்பர்கள் சேர்க்கையும் அவர்களால் உதவியும் கிடைக்கும். வாக்கு வன்மை அதிகரிக்கும். வியாபாரம் தொடர்பான வெளியூர் பயணங்கள் சாதகமான பலன் தரும். உத்யோகத்தில் பொறுப்புகள் கூடும். சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வும் கிடைக்கக்கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.








தனுசுராசி அன்பர்களே! எந்த ஒரு காரியம் பற்றியும் ஆழ்ந்து சிந்தித்து முடிவெடுப்பீர்கள். வெளியூரில் இருந்து வரும் கடிதங்கள் மூலம் மகிழ்ச்சி ஏற்படும். தொழில், வியாபாரத்தில் புதிய உத்வேகம் பிறக்கும். தொழில் தொடர்பான விவகாரங்களில் இருந்து வந்த வீண் இடையூறுகள் ஏற்பட்டு நீங்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகள் மூலம் அனுகூலம் ஏற்படும். புதிய வேலையில் சேர்ந்தவர்களுக்கு பதவி உயர்வு வரும்.




மகரராசி அன்பர்களே! எடுத்த காரியம் கைகூடும். கடன் விவகாரங்களில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். வழக்குகளில் இருந்து வந்த தொய்வு நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். பயணங்கள் மூலம் லாபம் கிடைக்கலாம். மேலதிகாரிகளால் உத்யோகஸ்தர்களுக்கு நன்மை உண்டாகும். சக ஊழியர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பர். வாழ்க்கை துணை மூலம் ஆதாயம் கிடைக்கும்.




கும்பராசி அன்பர்களே! எதிர்பாராத சுபச்செலவுகள் ஏற்படும். எதிர்ப்புகள் நீங்கும். கவலையை விட்டு விட்டு தொழில் வியாபாரத்தில் கவனம் செலுத்துவது நல்லது. உத்யோகஸ்தர்களுக்கு வெளியூர் மாற்றங்கள் உண்டாகலாம். சக ஊழியர்களிடம் பேசும் போது கோபப்படாமல் இருப்பது நன்மை தரும். குடும்ப உறுப்பினர்களிடம் இருந்த மனத்தாங்கல் நீங்கி மகிழ்ச்சியும், சகஜ நிலையும் காணப்படும்.




மீனராசி அன்பர்களே! வரவை போலவே செலவும் இருக்கும். பயணங்களால் அலைச்சலும், எதிர்பாராத பொருள் இழப்பும் இருக்கும். எனவே கவனமாக இருப்பது நல்லது. திடீர் கவலை ஏற்பட்டு நீங்கும். கூட்டு தொழில் செய்பவர்கள் முன்னேற்றம் காண்பர். வியாபாரம் தொடர்பான முயற்சி வீண் முயற்சியாக இருந்தாலும் பின்னாளில் அதற்கான பலன் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் வேலை சுமை இருக்கும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## பொறுப்புக் கூறலில் சர்வதேசத்தின் மீது நம்பிக்கையில்லை!

(17ம் பக்கத் தொடர்ச்சி) சம்பிரதாய மூத்த அரசியல்வாதிகள் அரங்கிலிரு ந்து அகற்றப்பட்டுள்ளார்கள். இளையவர்கள், புதியவர்கள் உள்வாங்கப்பட் டுள்ளார்கள். இதுவொரு குறிப்பிடத் தக்க மாற்றமாகும்.

இந்நிலையில் ஆட்சியாளர்கள் அதிகாரத்துக்கு வந்து ஆண்டொன்று நிறைவடைகின்றது. ஆனால் அவர்களின் செயற்பாடுகளில் ஊழல், மோசடிகளுக்கு எதிரான செயற்பாடுகள் முன்னேற்றகரமாக இருக்கின்றன. ஆனால் பயங்கரவாத தடைச்சட்டத்தினை நீக்குதல், புதிய அரசியலமைப்பை உருவாக்குதல், தேசிய பிரச்சினைகளுக்கு தீர்வளித்தல், பொறுப்புக் கூறல் உள்ளிட்ட விடயங்களில் நிச்சயமற்ற அல்லது தெளிவற்ற நிலைமைகளே காணப்படுகின்றன.

அதேபோன்று, நாட்டின் பொருளாதார மீட்சியில் சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக்கொண்ட இணைக்கப் பாடுகள் மிக முக்கியமானவை. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக் கொண்ட இணைக்கப்பாடுகள் மிகவும் மோசமானவை. அந்த இண க்கப்படுகளையே தற்போதைய ஆட்சி யாளர்களும் பின்பற்றுகின்றமையானது கவலைக்குரிய விடயதாகும். ஆட்சியாளர்கள் நாணய நிதியத்தின் உடன் பாடுகள் தொடர்பில் என்ன செய்யப் போகின்றர்கள் என்பதில் தெளிவில்லை.

ஆகவே ஆட்சியாளர்கள் மேற்படி விடயங்கள் சம்பந்தமாக தமது நிலைப்பாடுகளை தெளிவாக மக்கள் முன்வைக்க வேண்டிய கடப்பாடு காணப்படுகின்றது. அதன் மூலமாகவே அரசாங்கத்தின் மீது முறைமை மாற்ற த்தினை எதிர்பார்க்கும் மக்கள் நம்பிக்கை கொள்வார்கள்.

கேள்வி: உங்களுடைய தாயாரான ராஜினி திரணகம பற்றிய நினைவு களை பகிர்ந்து கொள்வதோடு அவரு டைய மரணம் குறித்து இலங்கை அரச தரப்பில் ஏதாவது பதிலளிக்கப் பட்டதா?

பதில்: என்னுடைய அம்மா படு கொலை செய்யப்படுகின்ற போது எனக்கு சிறிய வயது. அவர் படுகொலை செய்யப்படாதிருந்திருந்தால் நாங்கள் இலங்கையை விட்டு வெளியேறியிருக்கத் தேவையில்லை. இந்திய அமைதிப்படையினரின் வருகையால் மூடப்பட்டிருந்த யாழ். பல்கலைக்கழக த்தினை மீளத் திறப்பதற்கு அவர் தனது நண்பர்களுடன் கூட்டிணைந்து செயற்பட்டார்.

சமூகத்தை கல்வி நிலையில் மேம் படுத்துவதே அவருடைய இலக்காக இருந்தது. தனது கலாநிதிப் பட்டப் படிப்பை முடித்துக் கொண்டு மீண் டும் நாடு திரும்பியமைக்கும் அதுவே தான் காரணம். அவருடைய அந்த முன்மாதிரியைத் தான் நானும் பின் பற்றுவதற்கு முயற்சிக்கின்றேன். அதனால் தான் 2012இல் மீண்டும் இலங்கை திரும்பினேன். எனது ஆய்வினை மேற்கொண்டேன். தொடர்ச்சி யாக இலங்கைக்கு விஜயம் செய்கின் றேன். சமூகத்துடன் ஊடாடுகின்றேன். என்னால் முடிந்த பங்களிப்பை செய்வ தற்கு சிந்திக்கின்றேன்.

ஆனால் அவர் விடுதலைப்புலிகளால் படுகொலை செய்யப்பட்டார். இதுவொரு துரதிஷ்டவசமான நிகழ்வாகும். அவருடைய படுகொலை எவ்வாறு நிகழ்த்தப்பட்டது, யார் கார ணமாக இருந்தனர், எங்கே வியூகம் வகுக்கப்பட்டது உள்ளிட்ட தகவல்கள் அதன்பின்னர் வெளிப்படுத்தப் பட்டன. ராஜன் ஹூல் தனது புத்தகத்தி லும் அவற்றைக் குறிப்பிட்டிருக்கின்றார். 1989இல் காணப்பட்ட சூழலில் விசாரணைகள் முறையாக நடக்கவில்லை. ஐ.நா. அதிகாரிகள் சம்பவம் தொடர்பில் நேரடியாக ஆராய்ந்திருந்தனர். அதன் பின்னர் எந்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கவில்லை.

என்னைப் பொறுத்த வரையில் அம்மா உயிரிழந்து விட்டார். அவர் மீண்டு வரப் போவதில்லை. வட கிழக்கில் எத்தனையோ பேர் உயிருடன் இருக்கின்றார்களா இல்லையா என்று கூடத் தெரியாது. அந்த வகையில் எங்களுடைய அம்மாவின் உடலத்தையாவது காண முடிந்தது முக்கியமானது.

## 16 ஆண்டு கால ஐ.நா. மையத் தமிழ்..

(21ம் பக்கத் தொடர்ச்சி) வந்த எந்த ஒரு இலங்கை அரசாங்கமும் திட்டவட்டமான விதங்களில் பொறுப்புக் கூறவில்லை. 16 வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்த மீறல்களுக்காக இலங்கை இன்னமும் தண்டிக்கப்படவில்லை. இன்று காசாவில் நிகழ்த்தப்படும் மீறல்கள், பிரயோகிக்கப்படும் உத்திகளுக்கு இதுவே முன்னுதாரணம். என்று, அண்மையில் மனித உரிமைகள் கண்காணிப்பகம் அதன் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஐநா இலங்கை அரசுக் கட்டமைப்பைத் தண்டிக்கவில்லை என்பதை விடவும் தண்டிக்க விரும்பவில்லை என்பது தான் சரி. ஏனென்றால் அது ஓர் அரசியல் தீர்மானம். அந்த அரசியல் தீர்மானத்தை மாற்றுவதென்றால் தமிழ் மக்களும் அதற்குரிய ராஜதந்திர செயல்பாடுகளில் இறங்கவேண்டும். ஓர் அரசைப் போல சிந்தித்துச் செயல்பட வேண்டும். கடந்த 16 ஆண்டு கால ஐநா மைய அரசியலில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் அது.

## மாகாணசபையை ஆட்சி செய்த போது...

(9ம் பக்கத் தொடர்ச்சி) வகிக்கும் இவர் கூட மந்திரிமனை விடயத்தில் அக்கறை காட்டாதது பற்றி விசனம் கொள்ள வேண்டியுள்ளது. கடந்த வாரம் பொழிந்த பெருமழையால் இக்கட்டிடத்தின் ஒரு தொகுதி பாதிக்கப்பட்டதால் நல்லூர் இராசதானியை நினைவூ ட்டும் ஒரேயொரு மரபுரிமைச் சின்னமும் அழிந்து விடுமா என அக்கறையுள்ளவர்கள் கேட்கின்றனர்.

தையிட்டியிலும், குருந்தூர்மலையிலும், வெடுக்குநாறிமலையிலும், வெருகல் மலையிலும் பௌத்த வழிபாட்டுத் தலங்களை அமைப்பதற்காக அக்காணி களை அரசுடமையாக்க முடியுமென்றால், மந்திரிமனையைப் பாதுகாக்க அரசாங்கத்தினால் ஏன் நடவடிக்கை எடுக்க முடியாதென்று கேட்பதில் நியாயமுண்டு.

தமிழ் அரசியற் பரப்பில் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத்தலைவரான சிவஞானம் சிறிதரன் மட்டுமே இதனை எழுதும்வரை மந்திரிமனை இருக்கும் இடத்தைச் சென்று பார்வையிட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நிலைமையை ஆராய்ந்துள்ளார். அநுர அரசின் தரப்பிலிருந்து அமைச்சர்கள் பிமல் ரத்நாயக்க, இராமலிங்கம் சந்திரசேகரம், நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் ஆகியோர் தொல்லியல் திணைக்கள உதவிப் பணிப்பாளருடன் மந்திரிமனையைச் சென்று பார்வையிட்டுள்ளனர்.

மந்திரிமனை பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமென்று கூறியுள்ள அமைச்சர் பிமல் ரத்நாயக்க சம்பந்தப்பட்ட அமைச்சரோடு கலந்துரையாடி மந்திரிமனையை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென உறுதியளித்துள்ளார்.

கிடைக்கும் சந்தர்ப்பத்தை முறையாகப் பயன்படுத்தி, தமிழரின் தேவைகளைக் கவனிக்கவென அமைச்சர்கள் ஓடிவரும் நிலைமை தொடருமானால், மாகாண சபைக்கு தேர்தல் நடைபெறின் அதிலும் அவர்களின் கரங்களே பலமடைவது இலகுவாகும்.

# தமிழ்மக்களை பலப்படுத்துவதற்கான அடிப்படைக் கட்டமைப்பு மாகாணசபையே - சட்டத்தரணி கோசலை

(4ம் பக்கத் தொடர்ச்சி) மாகாண சபையின் சட்ட வாக்கப்பகுதியை எடுத்துக் கொண்டால் அது சுயாதீனமாகவே உள்ளது. குறிப்பாக மாகாண சபைக்கான நிரலில் உள்ள அனைத்து விடயங்கள் சம்பந்தமாகவும் நியதிச்சட்டங்களை இயற்ற முடியும்.

மாகாண நிரலில் உள்ள விடயங்கள் சம்பந்தமாக பாராளுமன்றம் சட்டங்களை இயற்ற முடியாது. அவ்வாறு பாராளுமன்றம் சட்டம் இயற்ற வேண்டுமாக இருந்தால் அதற்கு மூன்றிலிரண்டு பெரும் பான்மையான மாகாண சபைகளின் அங்கீகாரம் அவசியமாகும். ஆகவே வடமகாண சபையானது, நியதிச்சட்டங்களை இயற்றுகின்ற முக்கியமான விடயத்தில் போதுமான அளவில் செயற்பட்டிருக்கவில்லை. வெறுமனே 12நியதிச்சட்டங்கள் தான் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

அடுத்தபடியாக மாகாண சபைக்கான நிதிச் சுயாதீனம் பற்றிய விடயம் முக்கியமானது. மாகாண சபைக்கான நிதிச் சுயாதீனம் பலவீனமான நிலையில் உள்ளது. ஆனால், நியதிச்சட்டங்களை முறையாக இயற்றிக்கொள்வதன் ஊடாக, மாகாண சபை தனக்கான வருமானத்தினை அதிகரித்துக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

உறுதிகள் மூலமாக கிடைகின்ற முத்திரை வரிகளைப் பெற்றுக் கொள்வதற்கான நியதிச்சட்டத்தினை வடக்கு மாகாண சபை இயற்றியிருந்த போதும் ஏனைய வருமானம் ஈட்டுகின்ற வழிகளை மையப்படுத்திய நியதிச்சட்டங்களை இயற்றியிருக்கவில்லை. இதற்கு அடுத்தபடியாக, வடக்கு மாகாண சபையின் அதிகமான பிரதேசங்கள் போரினால் பாதிக்கப்பட்டவையாகும். அந்தப் பிரதேசங்களை அபிவிருத்தி ரீதியாக மீள்கட்டியெழுப்புவது தொடர்பில் எவ்விதமாக தனது அதிகாரங்களை பயன்படுத்தியது என்ற விடயமும் கவனத்துக்குரியதாகும்.

அந்தவகையில் பார்க்கின்றபோது, போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான தேவைகள் என்வென்பது தொடர்பில் கள ஆய்வுகள் செய்யப்பட்ட தரவுத்தளமொன்று வட மாகாண சபையிடத்தில் காணப்பட்டிருக்கவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. இத்தகைய குற்றச்சாட்டுக்கள் எழாதிருக்க வேண்டுமாக இருந்தால் வடமாகாண சபை தனக்கு காணப்பட்ட சட்ட அதிகாரத்தினைப் பயன்படுத்தி விடயங்களை முன்னெடுத்திருப்பதற்கான வாய்ப்புக்கள் இருந்தும் நடைமுறையில் விடயங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

வடமாகாண சபையில் பங்கேற்றிருந்த அரசியல் கட்சிகளுக்கு இடையில் காணப்பட்ட உட்பூசல்கள் தங்களுக்கு காணப்பட்ட வரையறுக்கப்பட்ட சட்டங்களைக் கூட பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் கைநழுவிச் செய்வதற்கு வித்திட்டுள்ளது. இந்நிலையில் மாகாண சபைகளுக்கான சட்ட அதிகாரம் பற்றிய உரையாடலில் அதிகமாக, காணி, பொலிஸ் அதிகாரங்கள் பற்றியே கவனத்தினைச் செலுத்துகின்றோம்.

மாகாண பொலிஸ் ஆணைக்குழுவொன்றை அமைப்பதற்கான அதிகாரம் மாகாண சபைக்கு அரசியலமைப்பின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது. மாகாண பொலிஸ் ஆணைக்குழுவிற்கான உத்தியோகத்தர்கள் பதவி நிலையில் சிறியவர்கள் தான் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. ஆனால் மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ள மாகாண பொலிஸ் ஆணைக் குழுவினை அமைத்து சிறிய குற்றங்களை கையாள்வதற்கான கட்டமைப்பை வட மாகாண சபை உருவாக்கியதா என்றால் இல்லை.

அதிகார எல்லையின் அளவு பற்றிய விடயத்திற்கு அப்பால் அரசியலமைப்பில் கூறப்பட்டிருக்கின்ற கட்டமைப்புக்களை நிறுவுதற்கான சந்தர்ப்பம் ஏன் தவற விடப்பட்டுள்ளது என்பதற்கான பதிலில்லை.

அடுத்து மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்பட்டால் நாம் அறிந்திருக்கின்ற ஏலவே மாகாண சபையினை பிரதிநித்துவம் செய்தவர்கள் தான் மீண்டும் கணிசமான அளவில் மக்கள் பிரதிநிதிகளாக வரப் போகின்றார்கள்

அவ்வாறான நிலையில் அவர்கள் மாகாண சபைகளுக்கு காணப்படுகின்ற சொற்ப அதிகாரங்கள் பற்றிய முழுமையான தெளிவினைக் கொண்டிருப்பதன் ஊடாகவே மாகாண சபையின் ஊடாக மக்களின் தேவைகளை மையப்படுத்திய செயற்பாடுகளை அரசியல் பேதங்களின்றி முன்னெடுக்க முடியும்.

தென்னிலங்கையில் உள்ள மாகாண சபைகள் ஒப்பீட்டளவில் வினைத்திறனாக செயற்பட்டிருக்கின்றன. ஆனால் தமிழ் மக்கள் தான் உரிமைகளுக்காக போராடிய போது அவர்களின் கோரிக்கையை முழுமையாக பூர்த்தி செய்யாது விடினும் அதற்கான குறைபாடுகளுடன் மாகாண சபைக் கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது

போராடியமைக்காக கிடைத்த மாகாண சபைக் கட்டமைப்பை அதற்கு காணப்படுகின்ற அதிகாரங்களுடன் முறையாக பயன்படுத்தவில்லை. அவ்வாறான நிலைமை தொடர்ந்தால் தமிழினத்தின் நிலைமையும், எதிர்காலமும் எங்கு செல்லப்போகின்றது என்பதை சிந்திக்க வேண்டிய கட்டாயத்தில் தற்போது உள்ளோம் என்றார்.

## 2ம் பக்கத் தொடர்ச்சி

வந்து, அவர்களின் பெற்றோர், குழந்தைகள் மற்றும் மனைவியர் எழுப்பும் வலிமிகுந்த வேண்டுகோள்களை கூப்பிய கைகளுடன் பார்க்கும் எவரும், போரைக் கனவு காணக்கூட விரும்ப மாட்டார்கள். அந்த வேதனையான காட்சியை நம் கண்களால் பார்த்திருக்கிறோம்.

காசா பகுதியில் நடந்து வரும் கொடூரமான பேரழிவு நமக்கு ஆழ்ந்த கவலையை ஏற்படுத்துகிறது. குறிப்பாக, காசா பகுதி ஒரு வேதனையான மற்றும் சோகமான திறந்தவெளி சிறைச்சாலையாக மாறியுள்ளது. அப்பாவி குழந்தைகள் மற்றும் பொது மக்களின் அழுகை காது கேளாததாக உள்ளது. ஐக்கிய நாடுகள் சபை மற்றும் பிற அனைத்து தரப்பினரும் ஒப்புக்கொண்டபடி, இரு தரப்பினரும் உடனடியாக போர் நிறுத்தம் செய்ய வேண்டும்.

Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE

Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- Vistation
- Funeral & Memorial Service
- Reception
- Burial • Cremation



Vilosanan Sivatharman
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

EMOTIONAL BENEFITS
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com







# ஒரே இரவில் நாடற்றவராக அறிவிக்கப்பட்ட ஈழத்தமிழர்! பிறந்தது இந்தியாவில் ஆனால் குடியுரிமை இல்லை!

சென்னையில் வசிக்கும் ஆர்.பகிசன் (34) இந்திய பாஸ்போர்ட் உட்பட இந்திய குடிமகனுக்கு வழங்கப்படும் பல ஆவணங்களை கொண்டுள்ளார். சென்னையில் தனது பள்ளிப் படிப்பையும், கல்லூரி படிப்பையும் முடித்து ஒரு தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார். அவர் பாஸ்போர்ட் இல் தனது மனைவியின் பெயரை சேர்க்க விண்ணப்பித்த போது அவரது பெயரை சேர்த்து இந்த ஆண்டு மார்ச் மாதம் பாஸ்போர்ட் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் பாஸ்போர்ட் வழங்கிய பின்னர் அவர் பாஸ்போர்ட் பெற்றிருப்பது சட்டவிரோதமானது என்று அதிகாரிகள் கூறியுள்ளனர். அவரது பெற்றோர் இருவரும் இலங்கை நாட்டவர். 1991ம் ஆண்டு இலங்கையில் உள்நாட்டுப் பிரச்னை ஏற்பட்ட போது அகதிகளாக இந்தியாவுக்கு வந்தனர். பகிசன் தமிழ் நாட்டிலேயே பிறந்து, 30 ஆண்டுகளுக்கும் மேலாக இங்கேயே தொடர்ந்து வசித்து வந்தாலும், அவரது பெற்றோர் இருவரும் இந்தியர் அல்ல (இலங்கை நாட்டவர்) என்பதால் அவர் இந்திய குடிமகனாக கருதப்பட மாட்டார், எனவே அவர் 'நாடற்றவர்' என்று தெரிவித்துள்ளனர். இதையடுத்து பகிசன் இந்திய குடியுரிமைக்காக விண்ணப்பித்துள்ளனர்.

இந்திய குடியுரிமைச் சட்டத்தின் படி, 1987-ம் ஆண்டுக்கு ஜீலை 1ம் தேதி அல்லது அதன் பின் இந்தியாவில் பிறந்த ஒருவரது பெற்றோரில் யாரேனும் ஒருவர் இந்தியராக இருந்தால் மட்டுமே, அவர் இந்திய குடியுரிமை பெறமுடியும். மேலும், பெற்றோர் இருவரும் 'சட்டவிரோத குடியேறிகளாக' இருக்கக் கூடாது.

இந்தியாவில் அகதிகள் குறித்த தேசிய அளவிலான தெளிவான சட்டமும் கொள்கையும் இல்லாததால், இலங்கை தமிழர்கள், தமிழ்நாட்டில் பல தசாப்தங்களாக வசித்து வந்தாலும் அவர்கள் 'சட்டவிரோத குடியேறிகளாகவே' கருதப்படுகின்றனர். இந்திய குடியுரிமை சட்டம் 1955 பிரிவு 2(1) (டி) நாடற்றவர்களையும், அகதிகளையும் 'சட்டவிரோத குடியேறிகள்' என்று வரையறுக்கிறது.



நான் எப்போதுமே என்னை இந்திய குடிமகனாகவே நினைத்திருக்கிறேன். இத்தனை ஆண்டுகளில் யாரும் என்னை இந்திய குடிமகன் இல்லை என்று எங்கும் கூறியதில்லை. என்னிடம் உள்ள ஆவணங்களை முறையாகவே பெற்றுள்ளேன். என் பெற்றோர் இலங்கை நாட்டவர் என்பதை எங்கும் மறைத்ததில்லை.

ஒவ்வொரு ஆண்டும் சென்னையில் காவல் நிலையத்துக்குச் சென்று நாங்கள் கையெழுத்திட்டு வருகிறோம். நாங்கள் வசிக்கும் இடத்திலும் எங்கள் அடையாளத்தை மறைத்து எந்த தவறான நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை.



முதல் முறையாக நான் 'நாடற்றவன்' இந்தியன் அல்ல என்று என்னிடம் கூறிய போது, என்னால் அதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அது தெரிந்தவுடன், உடனே சட்டப்படி இந்திய குடியுரிமைக்கு விண்ணப்பித்தேன்' என்று பிபிசி தமிழிடம் பேசிய ஆர்.பகிசன் கூறினார்.

பகிசன் 2024-ம் ஆண்டு பாஸ்போர்ட் விண்ணப்பித்து பெற்றுள்ளார். அவருக்கு 2024ம் ஆண்டு செப்டம்பர் மாதம் இலங்கை நாட்டைச் சேர்ந்த பெண்ணுடன் திருமணம் நடந்தது. இலங்கையில் அவரது திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. 'என் மனைவியை திருமணம் செய்வதற்காக மட்டுமே நான் இலங்கை சென்றுள்ளேன். அதற்கு முன் சென்றதில்லை. என்று அவர் கூறுகிறார். அவர் இந்திய குடியுரிமைக்காக விண்ணப்பித்த பிறகு, அவர் சட்டவிரோதமாக இந்திய பாஸ்போர்ட் வைத்திருந்தது உட்பட்ட காரணங்களுக்காக பாஸ்போர்ட் சட்டம் 1967ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்டு கடந்த ஆகஸ்ட் மாதம் கைது செய்யப்பட்டார்.

இதேவேளை திருச்சி முகாமில் இருந்த கே.நளினி இந்திய குடிமகளாக 2022-ம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்டார். இலங்கை அகதிகள் முகாம்களில் வசிப்பவர்களில் இந்திய குடியுரிமை பெற்ற முதல் நபர் அவர் ஆனார். அவர் 1986-ம் ஆண்டு இந்தியாவில் மண்டபம் முகாமில் பிறந்திருந்தார்.

1950-க்கும் 1987-க்கும் இடையில் இந்தியாவில் பிறந்த அனைவரும் இந்திய குடிமக்கள் ஆவர் என்று இந்திய குடியுரிமைச் சட்டம் கூறுவதால், அவரது குடியுரிமையை அங்கீகரிப்பதாக சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை 2022-ம் ஆண்டு தெரிவித்திருந்தது. நளினி போன்று 1987-க்கு முன்பு இந்தியாவில் பிறந்த 148 பேர் முகாம்களில் இருப்பதாக இலங்கைத் தமிழர் நலன் ஆலோசனைக் குழுவின் தரவுகள் தெரிவிக்கின்றன. நன்றி:- பிபிசி



# பாலஸ்தீனத்தின் இன்றைய நிலைக்கு பிரிட்டன் காரணமா?

# இரு நாடு தீர்வை தற்போது முன்னெடுப்பது ஏன்?

(19ம் பக்கத் தொடர்ச்சி) ஆனால் அங்கு உண்மையான மாற்றம் ஏற்படாது. ஆனால் சமீபத்திய நிகழ்வுகள் பல அரசாங்கங்களை செயலில் இறங்க வலியுறுத்தியுள்ளன. காஸாவில் அதிகரித்து வரும் பட்டினி, இஸ்ரேலின் ராணுவ நடவடிக்கைகளுக்கு எதிரான உலகளாவிய கோபம், மற்றும் மக்களின் கருத்துகளில் ஏற்பட்ட பெரிய மாற்றங்கள் ஆகியவை இந்த நிலையை உருவாக்க முக்கிய காரணங்களாக அமைந்துள்ளன.

சில நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால் பாலத்தீனத்துக்கு அங்கீகாரம் வழங்க சில நாடுகள் முடிவு செய்துள்ளன. உதாரணமாக, பாலத்தீனம், அதிகாரம் சீர்திருத்தம் செய்ய வேண்டும், 2026–இல் தேர்தல் நடத்த வேண்டும், மேலும் உருவாகும் பாலத்தீன நாடு இராணுவமற்றதாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில் தான் அங்கீகாரம் தரப்படும் என கனடா கூறியுள்ளது.

பிரிட்டன் தனது முடிவை அறிவிக்கும் போது பொறுப்பை இஸ்ரேலின் மீது வைத்தது. காஸாவில் உள்ள துன்பங்களை முடிவுக்குக் கொண்டுவர, போர் நிறுத்தத்தை ஏற்படுத்த, மேற்குக் கரையின் பகுதிகளை இணைப்பதை தவிர்க்க, மேலும் இரு நாடுகள் தீர்வை அடைவதற்கான சமாதான முயற்சிக்கு இஸ்ரேல் உறுதியளிக்கா விட்டால், ஐ.நா. பொதுச்சபை அமர்வில் பாலத்தீனம் அங்கீகரிக்கப்படும் என தெரிவித்தது. இந்த முடிவு சில குழப்பங்களை ஏற்படுத்தியது.

சில விமர்சகர்கள், குறிப்பாக இஸ்ரேலின் நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு அங்கீகாரம் வழங்கப்படக் கூடாது என்றும், அங்கீகாரம் எந்த நிபந்தனையுடனும் இருக்கக் கூடாது என்றும் வாதிட்டனர்.

ஆனால் பிரிட்டன் குறிப்பிட்ட நான்கு முக்கிய நடவடிக்கைகளில் உண்மையான முன்னேற்றம் ஏற்பட வாய்ப்பு குறைவாக இருந்ததால், அங்கீகாரம் வழங்கப்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகவே மாறியது.

பாலத்தீன் அரசை அங்கீகரிக்க முன் வரும் நாடுகள் தங்கள் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதன் மூலம், காஸா போரை முடிவுக்குக் கொண்டு வருவது மற்றும் அதன் பிறகு எப்படியான அரசியல் செயல்முறை இருக்க வேண்டும் என்பதற்கான சிந்தனையை ஊக்குவித்து, பெரிய தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்று நம்புகின்றன.

பாலத்தீனத்தை ஒரு நாடாக அங்கீகரிக்காத நாடுகள், பெரும்பாலும் இஸ்ரேலுடன் பேச்சுவார்த்தை மூலம் ஒரு முடிவுக்கு வராததால் அங்கீகாரம் தரவில்லை.

பாலத்தீன அரசை உருவாக்க வேண்டிய அவசியத்தை அமெரிக்கா வாய்மொழியாக ஏற்கிறது. ஆனால், அது இஸ்ரேலும் பாலத்தீனமும் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என வலியுறுத்துகிறது. இதனால், பாலத்தீன மக்கள் தங்களுக்கான சுயநிர்ணய உரிமையைப் பெறுவதில் மறுப்பு சொல்லும் அதிகாரம் இஸ்ரேலுக்கு கிடைக்கிறது' என்று லண்டன் பொருளாதார பள்ளியின் சர்வதேச உறவுகள் மற்றும் மத்திய கிழக்கு அரசியலில் நிபுணர் பேராசிரியர் ஃபவாஸ் கெர்ஜஸ் கூறுகிறார். 1990–களில் தொடங்கிய அமைதிப் பேச்சுவார்த்தைகள், பின்னர் 'இரு நாடுகள் தீர்வு' என்பதை இலக்காகக் கொண்டன.

அதாவது, இஸ்ரேலியரும் பாலத்தீனரும் தனித்தனி நாடுகளில் அருகருகே வாழ வேண்டும் என்பதே அந்தத் தீர்வு. ஆனால் 2000–களின் முற்பகுதியிலிருந்தே, அமைதிக்கான அந்தச் செயல்முறை வீழ்ச்சியடையத் தொடங்கியது. குறிப்பாக 2014–ல் வாஷிங்டனில் நடந்த பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்த போது, நிலைமை மேலும் மோசமானது.

எதிர்கால பாலத்தீன நாட்டின் எல்லைகள் எப்படி இருக்க வேண்டும்? அந்த நாட்டின் தன்மை என்ன? ஜெருசலேமின் நிலை என்ன?

1948—49இல் இஸ்ரேல் உருவானபின் நடந்த போரின் காரணமாக இடம் பெயர்ந்த பாலத்தீன அகதிகளின் நிலைமை என்ன?

போன்ற கடினமான பிரச்னைகள் அனைத்தும் இன்னும் பதில் கிடைக்காதவையாகவே உள்ளன. மேலும், ஐ.நாவில் உறுப்பினராக சேர பாலத்தீனம் எடுக்கும் முயற்சியை இஸ்ரேல் கடுமையாக எதிர்க்கிறது.

ஏப்ரல் 2024–ல், இஸ்ரேலின் ஐ.நா தூதர் கிலாட் எர்டன் கூறியதை ஏஎப்ஃபி (AFP) மேற்கோள் காட்டியது. ஐ.நா.வில் பாலத்தீனத்தை அங்கீகரிப்பது தொடர்பான விவாதம் நடப்பது கூட 'இனப்படுகொலை பயங்கரவாதத்திற்கு கிடைத்தவெற்றி' என இஸ்ரேலின் தூதர் கிலாட் எர்டன் கூறியிருந்தார். மேலும், அக்டோபர் 7 ஹமாஸ் தாக்குதலுக்குப் பிறகு, அங்கீகாரம் வழங்கப்படுவது பயங்கரவாதத்திற்கு ஒரு வெகுமதியாகும் என்றும் அவர் தெரிவித்தார்.



இஸ்ரேலுடன் நல்லுறவைப் பேண விரும்பும் நாடுகள், பாலத்தீனத்தை அங்கீகரிப்பது தங்கள் கூட்டாளியான இஸ்ரேலை கோபப்படுத்தும் என்பதை நன்றாகவே அறிந்துள்ளன.

இஸ்ரேலின் ஆதரவாளர்கள் சிலர், பாலத்தீனர்கள் தனி நாடு ஆவதற்கான அடிப்படை நிபந்தனைகளை பூர்த்தி செய்யவில்லை என்று வாதிடுகிறார்கள். 1933ஆம் ஆண்டு மான்டிவீடியோ ஒப்பந்தம் கூறும் அந்த நிபந்தனைகள்: நிரந்தர மக்கள் தொகை தெளிவான எல்லைகள் செயல்படும் அரசு பிற நாடுகளுடன் தூதரக உறவை ஏற்படுத்தும் திறன்

ஆனால் சிலர் மிகவும் நெகிழ்வான வரையறையை ஏற்றுக் கொள்கிறார்கள். அதாவது, மற்ற நாடுகள் தரும் அங்கீகாரமே ஒரு நாட்டின் நிலையை நிர்ணயிக்க போதுமானது என்பதே அவர்களின் வாதம்.

டிரம்ப் நிர்வாகம், பாலத்தீனத்தை ஒரு நாடாக அங்கீகரிப்பதற்கு எதிரான தனது நிலைப்பாட்டை ஒருபோதும் மறைக்கவில்லை.

2025 செப்டம்பர் 18 அன்று, பிரிட்டன் பிரதமர் கியர் ஸ்டாமருடன் நடந்த செய்தியாளர் சந்திப்பில், 'அந்த விஷயத்தில் ஜபிரிட்டிஷ்ஸ பிரதமருடன் கருத்து வேறுபாடு உள்ளது' என்று அமெரிக்க அதிபர் கூறினார்.

உண்மையில் அமெரிக்காவின் நிலைப்பாடு தற்போது பாலத்தீன சுதந்திரம் என்ற கருத்துக்கே நேரடியான எதிர்ப்பாக மாறியுள்ளது.

'பாலத்தீனத்தை அங்கீகரிக்க உலக நாடுகள் முயற்சிப்பது ஹமாஸுக்கு மேலும் தைரியம் தரும்' என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ கூறியுள்ளார்.

அதே நேரத்தில், அங்கீகாரத்தை வலியுறுத்தும் நாடுகளுக்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளதாகவும் ரூபியோ தெரிவித்துள்ளார். 'அது, மேற்குக் கரையை இஸ்ரேல் இணைத்துக் கொள்ள தூண்டிவிடக்கூடும்' என அவர் கூறினார்.

பாலத்தீனம் தற்போது, ஹோலி சீயைப் போலவே, ஐ.நா.வில் 'உறுப்பினர் அல்லாத பார்வையாளர் நாடு' என்ற அந்தஸ்தை பெற்றுள்ளது.

2011–ல், பாலத்தீனம் முழுமையான ஐ.நா உறுப்பினராக சேர விண்ணப்பித்தது. ஆனால் பாதுகாப்பு கவுன்சிலில் போதுமான ஆதரவு இலலாததால், அந்த முயற்சி தோல்வியடைந்தது. வாக்கெடுப்பிற்கே அது செல்லவில்லை.

அதற்குப் பிறகு, 2012–ல், ஐ.நா. பொதுச் சபை பாலத்தீனத்தின் அந்தஸ்தை உயர்த்தி, 'உறுப்பினர் அல்லாத பார்வையாளர் நாடு' என அறிவித்தது இதனால், தீர்மானங்களில் வாக்களிக்க முடியாத போதிலும், பொதுச் சபை விவாதங்களில் பங்கேற்கும் உரிமை பெற்றது மேற்குக் கரை மற்றும் காஸா பகுதிகளில் இந்த முடிவு வரவேற்கப்பட்டது. ஆனால் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் அதனை விமர்சித்தன.

இந்த அந்தஸ்து, பாலத்தீனத்திற்கு மற்ற சர்வதேச அமைப்புகளில் சேரும் வாய்ப்பையும் வழங்கியது. 2015–இல், அவர்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ICC) உட்பட பல அமைப்புகளில் இணைந்தனர்.

மே 2024–ல், ஐ.நா. பொதுச் சபை பாலத்தீனத்தின் உரிமைகளை மேம்படுத்தியது. சூடான விவாதத்துக்குப் பிறகு, பாலத்தீனத்தை உறுப்பினராக ஏற்க வேண்டும் என வலியுறுத்தியது. அந்த தீர்மானத்தின் மூலம், பாலத்தீனம் முழுமையாக விவாதங்களில் பங்கேற்க, செயல்திட்டங்களை முன்மொழிய, மற்றும் குழுக்களில் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க அனுமதிக்கப்பட்டது. ஆனால், வாக்களிக்கும் உரிமை இன்னும் வழங்கப்படவில்லை.

அதே ஆண்டின் ஏப்ரல் மாதத்தில், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் ஐந்து நிரந்தர உறுப்பினர்களில் ஒருவராக அமெரிக்கா, பாலத்தீனத்தை ஒரு நாடாக ஏற்கும் முயற்சியை 'முன்கூட்டியது' என்று கூறி, அதற்கு மறுப்பு தெரிவித்தது.

பாதுகாப்பு கவுன்சில் நிறைவேற்றும் தீர்மானங்கள் சட்டப்படி கட்டாயமானவை. ஆனால் பொதுச் சபை நிறைவேற்றும் தீர்மானங்களுக்கு அந்த வலிமை இல்லை.

ஐ.நா. முழு உறுப்பினராக மாறுவது, பாலத்தீனர்களுக்கு அதிக ராஜ்ஜீய செல்வாக்கை தரும். அதில் தீர்மானங்களை நேரடியாக முன்மொழிவது, பொது சபையில் வாக்களிப்பது (இப்போது 'உறுப்பினர் அல்லாத' நாடு என்பதால் வாக்களிக்க முடியவில்லை), பின்னர் பாதுகாப்பு கவுன்சிலில் இடம் பெற–வாக்களிக்க கூட வாய்ப்பு உண்டு' என்று வாஷிங்டனில் உள்ள மிடில் ஈஸ்ட் இன்ஸ்டிட்யூ ட் (Middle East Institute) அமைப்பில், பாலத்தீன மற்றும் இஸ்ரேல் தொடர்பான நிகழ்ச்சிகளின் இயக்குனர் கலீத் எல்கிண்டி கூறுகிறார்,

ஆனால், இவை எதுவும் 'இரு நாடு தீர்வு'வைக் கொண்டு வராது. அது, இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டு வந்தால் மட்டுமே சாத்தியம்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

லண்டனில் உள்ள ஸ்கூல் ஆஃப் ஓரியண்டல் அண்ட் ஆப்ரிக்கன் ஸ்டடீஸ் (SOAS) நிறுவனத்தில் வளர்ச்சிக் கல்வி மற்றும் சர்வதேச உறவுகள் பேராசிரியரான கில்பர்ட் அச்சார், இதைப் பற்றி கூறுகையில், 'ஐ.நாவில் முழு உரிமை கிடைத்தாலும், பாலத்தீன அதிகார சபை, அதனால் பெரிதாக ஒன்றும் சாதிக்காது' என்கிறார்.

இது வெறும் அடையாள வெற்றியாக இருக்கும். 1967ல் ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தில் ஒரு சிறிய பகுதியிலும், இஸ்ரேலை முழுமையாகச் சார்ந்து இருக்கும், அதிகாரமற்ற 'பாலத்தீன அதிகார சபையின்' உண்மைக்கு எதிராக, கற்பனையான 'பாலத்தீன அரசு' அங்கீகாரம் மட்டுமே' என்று கூறும் அவர்,

மேலும் இது சுயாட்சி மற்றும் முழு உரிமை கொண்ட பாலத்தீன நாடு என்ற இலக்கிலிருந்து மிகவும் தொலைவில் உள்ளது என்றும் குறிப்பிட்டார். – நன்றிபிபிசி